டிசம்பர் 2002

www.padippakam.com

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



தொடரும் அமெரிக்கப் பயங்கரவாதம்



சங்கராச்சாரியின் வாய்க்கொழுப்பு

## தலைவிரித்தாடுகிறது பார்ப்பனிய ஆதிக்கம்

படிப்பகம்

www.padippakam.com

## ''கம்யூனிசமே வெல்லும்!''

# நம்பிக்கையை விதைத்த நவம்பர் புரட்சி விழா

மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து, தமிழகத்தில்,தாம் இயங்கி வரும் பகுதிகளில் நவம்பர் 7 அன்று ரசிய சோசலிசப் புரட்சியின் 86-வது ஆண்டு தொடக்கத்தை நினைவு கூர்ந்து விழா எடுத்தன.

சோவியத் ரசியாவில் முதலாளித்துவ மீட்சி நடைபெற்றவுடன் 'கம்யூனிசம் காலாவதியாகிவிட்டது' என்று ஏகாதிபத்தியமும் அதன் தாசர்களும் பிரச்சாரம் செய்து வருகின்றனர். ஆனால் இன்று எல்லா ஏகாதிபத்திய நாடுகளும் மாபெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி திணறுவதும், இந்த ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக ஒடுக்கப்படும், சுரண்டப்படும் நாடுகளில் உள்ள உழைக்கும் மக்கள் செங்கொடியின் கீழ் அணிதிரண்டு போராடி வருவதும் உண்மையில் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வீழ்ச்சியையும், கம்யூனிசத்தின் எழுச்சியையுமே காட்டுகின்றன. அதன் வெளிப்பாடாக உலகம் முழுவதும் உள்ள புரட்சிகர சக்திகளால் நவம்பர் புரட்சி தினம் பேரணியாகவும், விழாவாகவும் நடத்தப்பட்டன. தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற புரட்சி தின விழா நிகழ்ச்சிகள், தீபாவளி போன்ற பிற்போக்கு மதப் பண்டிகைகளுக்கு மாற்றாக உழைக்கும் மக்களின் மத்தியில் போராட்ட உணர்வைத் தூண்டும் விதமாக அமைந்தன.

● திருவெண்ணெய் நல்லூர் வட்டத்தில் பொய்கை அரசூர் கிளை, விவசாயிகள் விடுதலை முன்னணியினர் கம்யூனிசமே வெல்லும் என்ற முழக்கத்தின் கீழ் நவம்பர் புரட்சி தினத்தைக் கொண்டாடினர். இளைஞர்கள், சிறுவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, உழைக்கும் மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டன. 1917 நவம்பர் 7-ஆம் நாளில் ரசியாவில் நடந்தது என்னவென்பதை தோழர்கள் விளக்கிப் பேசினர். உலக வங்கியிடம் நமது நாட்டை அடகு வைத்துவிட்ட ஓட்டுக் கட்சி அரசியல் வாதிகளின் துரோகத்தை அம்பலப்படுத்தி ''யாருக்கு அதிகாரம்?'' என்ற தலைப்பில் சிறு நாடகம் நிகழ்த்தப்பட்டது. இறுதியில் நடைபெற்ற கலை நிகழ்ச்சி, கூடி நின்ற மக்களிடையே நம்பிக்கையை ஊட்டும் விதமாக அமைந்தது.

● தஞ்சையில் பு.மா.இ.மு. குருங்குளம் கிளை சார்பில் செங்கொடி ஏற்றும் நிகழ்ச்சியுடன் விழா தொடங்கியது. பின்னர் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. மாலையில், நாம் நவம்பர் புரட்சி தினத்தை ஏன் கொண்டாட வேண்டுமென்பதை விளக்கி பொதுக் கூட்டம் நடைபெற்றது.

● சென்னையில் அமைப்பு செயல்படும் பகுதிகளில் ம.க.இ.க.வும், பு.ஜ.தொ.மு.வும் இணைந்து காலை 8 மணியளவில் தோழர் லெனின் படத்தைத் திறந்து வைத்து புரட்சிகர பாடல்களுடன் பிரச்சாரக் கூட்டத்தை நடத்தின. காலை பத்து மணி முதல் பார்ப்பன பாசிச ஜெயாவின் இருண்ட காலத்தைச் சித்தரிக்கும் ஓவியக் கண்காட்சி மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. சிறுவர்களுக்கான ஓவியப்போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு மாலை நிகழ்ச்சியில், பரிசளிக்கப்பட்டது. சிறப்புரையாற்றிய தோழர். சீனிவாசன் தீபாவளி முதலான இந்துப் பண்டிகைகளை நாம் புறக்கணிக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி பேசினார்.

● ஜெயங்கொண்டம் காந்தி நகரில் தோழர் கதிரவன் தலைமையில் செங்கொடியேற்றி இனிப்பு வழங்கியதோடு நவம்பர் புரட்சி நாளின் முக்கியத்துவத்தை விளக்கி விளக்கமும் நடத்தப்பட்டது.

● புதுவையில் பு.ஜ. வாசகர்கள் நவம்பர் புரட்சி நாளைக் கருத்தரங்கமாக நடத்தினர். 'ரசியப் புரட்சியும் — பாட்டாளி வர்க்கக் கட்சியும்' என்ற தலைப்பில் தோழர் தமிழரசும், 'ரசிய புரட்சியும் — உழைக்கும் மக்களின் இன்றைய பங்கும்' என்ற தலைப்பில் தோழர் திருநாவுக்கரசும் உரையாற்றினர்.

● ஈரோடு - சிவகிரியில் பு.மா.இ.மு. தோழர்கள் அலுவலகத்தைச் சிவப்பு தோரணத்தால் அலங்கரித்து புரட்சிகர பாடல்களை ஒலிக்கச் செய்தனர். ஒன்பது மணியளவில் அறைக்கூட்டம் நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து 'தீக்கொழுந்து' குறும்படம் திரையிடப்பட்டு, பிற்பகலில் அனைவருக்கும் மாட்டுக்கறி உணவு விருந்தளிக்கப்பட்டது.

● கோவை ஒண்டிப்புதூர் சுங்கம் திடலில் ம.க.இ.க. சார்பில் செங்கொடி ஏற்றி நவம்பர் புரட்சிநாள் விழா தொடங்கப்பட்டது. மாலையில் நடைபெற்ற அறைக் கூட்டத்தில் பல்வேறு தலைப்புகளில் தோழர்கள் உரையாற்றினர். சிறப்புரையாக தோழர் மணிவண்ணன் ''மறுகாலனி ஆதிக்கமும், மக்களின் கடமையும்'' என்ற தலைப்பில் பேசினார். நிகழ்ச்சியில் சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டவர்களுக்குப் பாராட்டும், குழந்தைகளுக்காக பாரதிதாசன் பாடல்கள், திருக்குறள் ஒப்புவிக்கும் போட்டியும் நடத்தப்பட்டன.



பொய்கை அரசூரில்



தஞ்சையில்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 18

**இதழ் 2**

டிசம்பர் 2002

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அஞ்சல் பெட்டி எண். 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**


# சங்கராச்சாரியின் வாய்க்கொழுப்பு தலைவிரித்தாடுகிறது பார்ப்பனிய ஆதிக்கம்

— தமிழ்த் திருமுறைக் குடமுழுக்கு - தமிழ் வழிபாட்டுக்குக் கடும் எதிர்ப்புக் காட்டியது;

— கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் மூலம் சிறுபான்மை மதப் பிரிவினர், தாழ்த்தப்பட்ட மக்கள் மீது ஒடுக்குமுறை ஏவியது;

— தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான தீண்டாமையையும் உரிமைகள் மறுப்பையும் நியாயப்படுத்தும் அவதூறுப் பிரச்சாரம் நடத்தியது;

— ''அருந்தொண்டு புரிந்த அந்தணர்கள்'' நூல் தயாரிப்பு வெளியீட்டு விழாவில் அனைத்துப் பிரிவுப் பார்ப்பனப் பிரமுகர்களும் ஒன்று திரண்டு அப்பட்டமாகவே பார்ப்பன ஆதிக்க உரிமை கோரியது;

இவை அனைத்தும் தமிழகத்தில் அரங்கேறி வரும் ஒரு சமூக அரசியல் நிகழ்ச்சிப் போக்கைக் குறிக்கின்றன. சில பத்தாண்டுகளுக்குப் பிறகு இங்கே பார்ப்பன சனாதனவெறி மீண்டும் உயிர்ப்பிக்கப்படுகிறது. அது தன்னை ஒரு பார்ப்பன - பாசிச சக்தியாக வளர்த்துக் கொண்டிருக்கிறது. அ.தி.மு.க.வின் எம்.ஜி.ஆர். ஆட்சியில் தலையெடுத்த இந்த சக்தி, அதன் வாரிசு ஜெயலலிதா ஆட்சியில் முழுமைபெற்ற பாசிச சக்தியாக வளர்ந்துவிட்டதை இப்போது வெளிக்காட்டியிருக்கிறது.

தமிழக அரசின் கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தை எதிர்த்து, கடந்த அக்டோபர் 24-ஆம் தேதி சென்னையில் பெருந்திரள் உண்ணாவிரதம், மாநாடு, பொதுக் கூட்டம் நடந்தது. அதில் கலந்து கொண்ட மதச் சிறுபான்மையினர், மற்றும் எதிர்த்தரப்பு அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் பேசினர். இது குறித்து செய்தி வெளியிட்ட பார்ப்பன-பாசிச ஊதுகுழல் ''துக்ளக்'' ''பார்ப்பனீயத்தின் பரிசோதனைக் கூடமா தமிழகம்?'' என்று தலைப்பிட்டிருக்கிறது. அந்தக் கூட்டத்தில் பல பிரமுகர்கள் பேசினாலும் காங்கிரசுப் பிரமுகர் பீட்டர் அல்போன்சு எழுப்பிய ''சமஸ்கிருத சர்வாதிகார பார்ப்பனீயத்தின் பரிசோதனை கூடமாகத் தமிழகத்தை மாற்றுவதா?'' என்ற கேள்வியில் இருந்து மேற்படி தலைப்பை வடித்திருக்கிறது ''துக்ளக்''. எது பிரதானப் பிரச்சினை என்பது இந்தப் பார்ப்பன - பாசிச சக்திக்கு நன்றாகவே இடித்திருக்கிறது.

வடக்கே, **குஜராத் மாநிலத்தை ''இந்துத்துவா''** எனப்படும் இந்துமதவெறிப் பாசிசத்தின் **பரிசோதனைக் கூடமாகத்** தெரிந்தெடுத்து மதவெறிப் படுகொலைகளை **நடத்தி வருகிறார்கள்** ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க., விசுவ இந்து பரிசத் - பஜ்ரங் தள் முதலிய **சங்கப் பரிவாரத்தினர்.**

ஆரிய இன எதிரிகளாகத் தாம் கருதிய யூத மக்களைப் படுகொலை செய்வது, எஞ்சியவர்களை சித்திரவதை முகாம்களில் அடைப்பது என்கிற ''இனத்தூய்மை'' இயக்கத்தை இட்லரின் தலைமையில் ஜெர்மனியில் நாஜிகள் மேற்கொண்டார்கள். அதைப்போல மதச்சிறுபான்மையினருக்கு எதிரான மதவெறி பயங்கரவாதப் படுகொலைகளை நடத்துவதும், சொந்த மண்ணிலேயே அவர்களை அகதிகள் முகாமில் அடைப்பதும் செய்து குஜராத்தைத் ''தூய்மை''ப்படுத்துவது; இதற்காக அங்குள்ள இந்து மதத்தினரை இந்துத்துவமயமாக்குவது - இதற்கான சோதனைக் கூடமாக அம்மாநிலம் மாற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து, ''இந்தியாவிலுள்ள சிறுபான்மை மதத்தவர்கள் அனைவரும் இந்துத்துவத்துக்கு அடிபணிந்து போகவேண்டும். இல்லையானால் குஜராத்தில் மதத் தூய்மை செய்ததைப் போன்று நாடு முழுவதும் நடக்கும்'' என்று பகிரங்கமாக அறிவித்தார், விசுவ இந்து பரிசத்தின் தலைவர் அசோக் சிங்கால்.

இதிலிருந்து இந்துத்துவத்தின் பரிசோதனைக் கூடமாக ஒரு மாநிலத்தை மாற்றுவது; இந்துத்துவ மயமாக்குவது என்றால் என்னவென்று புரிகிறது! அது இந்துமத வெறி பாசிச - பயங்கரவாதப் படுகொலைகளைப் பிற மாநிலங்களுக்கும் விரிவுபடுத்துவதற்கான முன்னோட்டம்! வடமாநிலங்களைப் பொருத்தவரை ''இந்துத்துவா'' என்பது பார்ப்பன - பனியா (வைசியா) - சத்திரிய சாதிய நலன்களுக்கான சித்தாந்தமாக இருக்கிறது. இந்துமதவெறி பாசிஸ்டுகளோ, தாம் தாழ்த்தப்பட்ட - பழங்குடியினர் உட்பட அனைத்து இந்துமத சாதிகளையும், பௌத்த, சீக்கிய மதத்தவர்களையும் கூட பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும், ''இந்துத்துவா'' என்பதும்கூட ஒரு மதத்தைக் குறிப்பதில்லை, இந்திய தேசியத்தையும், இந்தியக் கலாச்சாரத்தையும் குறிப்பதாகவும் கூறிக் கொள்கின்றனர்.

www.padippakam.com





**பார்ப்பன ஆதிக்கத்திற்கு ''ஓ போடுங்க'' - எனத் தூண்டும் ஜூனியர், சீனியர் மடச்சாமிகள் மற்றும் அவர்களின்கூட்டாளிகள் ராமகோபாலன், பா.ஜ.க. தலைவர் லட்சுமணன்.**

உண்மையில், ''பார்ப்பனிய சனாதன தர்மம்'' தான் ''இந்துத்துவா'' முகத்திரை போட்டுக் கொண்டு வருகிறது. தமிழ் நாட்டில், பார்ப்பனிய ஆதிக்கத்துக்கும், அதற்கு எதிரான போராட்டத்திற்கும் தனிச்சிறப்பானதொரு வரலாறு உண்டு. ''நீதிக் கட்சி'' என்று அறியப்பட்ட தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் கீழ் சத்திரிய - வைசிய சாதித் தலைமையில் பார்ப்பனரல்லாதோர் திரட்டப்பட்டு வலுவான பார்ப்பனிய எதிர்ப்பு இயக்கம் நடந்திருக்கிறது. இதோடு தாழ்த்தப்பட்ட மக்கள் தனி இயக்கமாகத் திரண்டு பார்ப்பனிய எதிர்ப்புடன் பல சமயம் கூட்டுச் சேர்ந்தனர். முதலில் நீதிக்கட்சி பின்னர் திராவிடக் கட்சிகளின் மூலம் பார்ப்பனிய எதிர்ப்பு இயக்கத்தினால் பெரும் ஆதாயம் அடைந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் எனப்படும் இந்து மேல்சாதியினர் தொடர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களை ஒடுக்குவதில் வலிந்து நின்றனர்.

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் பார்ப்பனிய எதிர்ப்பு இயக்கங்கள் காரணமாக தமிழ்நாட்டில் நேரடி அரசியல் செல்வாக்கு பின்னடைவுக்குள்ளாகி இருந்தபோதும், மத்தியில் காங்கிரசு மற்றும் தமிழகத்தில் எம்.ஜி.ஆர். ஆட்சிகள் மூலமாக பார்ப்பனிய சக்திகள் மறைமுக செல்வாக்கு செலுத்தி வந்திருக்கின்றனர். ஜெயலலிதா மற்றும் பாரதீய ஜனதா ஆட்சிகள் வந்ததும் ''இவை நம்மவா ஆட்சிகள்'' என்கிற துணிவு பெற்றனர்.

திராவிட இயக்கத்தின் வாரிசுரிமை பாராட்டி ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா, பல்வேறு பார்ப்பன சனாதன நடவடிக்கைகளில் ஈடுபட்டார். வேதாகமப் பாடசாலைகள் திறப்பு, ஆறுகால பூசை ஏற்பாடு, கோவில் குடமுழுக்குகள் என்று தொடங்கி பின்னர் நேரடியாகவே அயோத்தி கரசேவை ஆதரவு, பங்கேற்பு வழியாக இந்துத்துவா சக்திகளுடன் அரசியல் கூட்டும் அமைத்தார். இதன் தொடர்ச்சியாக, அன்னதானம், இந்துமத போதனை, கடைசியாக கட்டாய மதமாற்றத் தடைச்சட்டம் ஆகிய நடவடிக்கைகளை அரசு மூலமாகவே செய்து பார்ப்பனிய ஆதிக்கத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளார். அடுத்து, பசுவதைத் தடைச் சட்டம் போன்றவற்றையும் கொண்டு வருவார் என்பதில் சந்தேகமில்லை.

**ஓடுகாலி சங்கராச்சாரியின் வாரிசிடம் எம்.ஜி.ஆரின் வாரிசு நடத்தும் மந்திராலோசனை. (நன்றி: நக்கீரன்)**



பார்ப்பன - பாசிசக் குருவாக உள்ள காஞ்சி சங்கராச்சாரி ஒரு கடைந்தெடுத்த அரசியல் - தொழில் தரகனும் ஆவார். அதற்கு வசதியாக வெங்கட்ராமன், சேஷன், நரசிம்மராவ் போன்றவர்கள் மூலம் காங்கிரசுடன் நெருக்கமான உறவு வைத்துக் கொண்டிருக்கும் அதே சமயம், குறிப்பாக பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்தபிறகு ''இந்துத்துவா'' குருமார்களில் ஒருவனாக கடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அயோத்தி விவகாரத்தில் சமரசம் செய்வதாகக் கூறிக் கொண்டு ஆர்.எஸ்.எஸ். - வி.இ.ப. நிலைக்காக வரிந்து கட்டிக் கொண்டு வேலை

www.padippakam.com



''ஆண்டவனுக்கு மேல் அந்தணர்கள்'' என்று பிரகடனப்படுத்தும் பார்ப்பனச் சாதி விழா.

செய்தார். சங்கராச்சாரிகளுக்குள் தீண்டத்தகாதவனாகக் கருதப்படும் காஞ்சி மடாதிபதி, தமிழ்நாட்டில் பார்ப்பனிய ஆதிக்கத்தை வலுவாக நிலைநாட்டுவதன் மூலம் அந்தக் கறையை அழிக்க முயலுகிறார்.

ஜெயலலிதாவின் ஆட்சி அதிகாரத்தைக் கொண்டும், பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணியின் அமைப்பு பலத்தைக் கொண்டும், தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் அரசு அதிகாரிகளின் ஆலோசனைகளைக் கொண்டும் இந்த பார்ப்பனப் பாசிச ஆதிக்கத்தை நிறுவும் முயற்சி நடக்கிறது. தமிழகத்தில் ''இந்துத்துவா'' பரப்பப்படுவதில் இந்தியாவின் பிற மாநிலங்களைவிட பின்தங்கியுள்ளதால் இரட்டை வேகத்துடன் அதற்கான முயற்சி நடக்கிறது.

மத்திய அரசு மூலமாக சமஸ்கிருதமயமாக்குவதில் இந்துத்துவாவாதிகள் தீவிரம் காட்டிவரும் வேளையில் ''தமிழ் முறைக் குடமுழுக்கு'' என்றவுடன் பார்ப்பன - பாசிஸ்டுகள் எல்லாம் காஞ்சி சங்கராச்சாரி தலைமையில் திரண்டு தமிழை இழிவுபடுத்தும் வகையில் ஆவேசமாகப் பேசினர். ஜெயலலிதா அரசு அதிகாரிகள் மூலமும், சங்கராச்சாரி பார்ப்பன அர்ச்சகர்கள் மூலமும் தமிழ் முறைக் குடமுழுக்கைத் தடுக்க முயன்றனர்; அந்த முயற்சி வெற்றி பெறாது போகவே, பின்னர் பார்ப்பன முறைப்படி தீட்டுக் கழித்தனர்.

தாழ்த்தப்பட்ட மக்கள் கோவிலுக்குள் நுழையவும், பார்ப்பனரல்லாத பிற சாதியினர் கருவறைக்குள் நுழையவும் பூசை செய்யவும் தகுதியற்றவர்கள்; கருவறைக்குள் பாடுவதற்கு, மந்திரம் ஓதுவதற்கு தமிழ் மொழி தகுதியற்றது என்று தமிழரையும், தமிழ் மொழியையும் இழிவாகப் பேசினார்கள். தாழ்த்தப்பட்ட மக்களை ''அரிஜன்''கள் என்று அழைப்பதே சரியானது; ''தலித்''துக்கள் என்று கூறக் கூடாது என்றும், இவர்கள் அசுத்தமானவர்கள், ஆச்சாரப்படி நடக்கத் தெரியாதவர்கள் என்றும் ஏசினார்கள்.

ஜெயலலிதாவுடன் தமக்குள்ள சாதிச் செல்வாக்கை பயன்படுத்திக் கொண்டு, இந்துத்துவா - பார்ப்பனிய மதவெறி கொள்கையான ''கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம்'' என்பதை நிறைவேற்றச்

## தாழ்த்தப்பட்டோரை இழிவுபடுத்தும் சங்கராச்சாரியின் பார்ப்பனத் திமிர்

卐 ''அரிஜனங்கள், ஆரோக்கியசாமி, யூசுஃப் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அதோடு நாலுபேர், ஐந்துபேர் வந்தால் பரவாயில்லை. கூட்டமாக வருகிறார்கள். அதனால் கோவிலுக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற பயத்தில்தான் அவர்களை உள்ளே விடுவதில்லை.''

卐 ''அரிஜனங்கள் படிப்பு மற்றும் எல்லாச் சலுகைகளையும் அனுபவிக்கிறதுக்காக கிறித்தவ மதத்துக்கு மாறிவிட்டு, வேலை வாய்ப்புக்காக மறுபடியும் இந்துவா மாறிடுறாங்க.''

卐 ''ஈஸ்வரனை துவேஷித்தால் கூட மன்னிப்பு உண்டு. அந்தணனை துவேஷித்தால் மன்னிப்பு கிடையாது. ஆண்டவன் கூட அப்புறம்தான்; அந்தணன்தான் முதலில்.''

卐 ''அரசாங்கத்துக்கோ அரசியலுக்கோ நாங்கள் பின்னாடி போக வேண்டிய அவசியமில்லை. அரசாங்கங்கள் எல்லாம் எங்கள் காலடியில் வந்து விழுகிறது. அரசியல்வாதிகள் எல்லோரும் எங்கள் காலடியில் விழுகிறார்கள்.''



卐 ''சில தெருவுக்குள் சாமிவருவது இல்லை என்று புகாரும் உள்ளது. எப்போதும் இறையுணர்வோடு பக்தி சிரத்தையாக பூஜை நடத்தினால் அந்த இடத்துக்கு சாமி ஊர்வலம் வரும். அப்படி இல்லாமல், ஒரு நாளைக்கு மட்டும் கூப்பிட்டால் அது முறையாகாது.''

卐 ''தலித்துக்களும், இந்துக்கள்தான் என்றால் அவர்களுக்கு காஞ்சி மடத்தில் வேத பாராயணம் சொல்லித் தரப்படுமா? அவர்கள் சங்கராச்சாரியாக முடியுமா?'' — *நிருபர்கள்*

''யார்யாருக்கு என்னென்ன தகுதி கொடுக்க வேண்டுமோ அது கொடுக்கப்படும்.'' — *சங்கராச்சாரி*

''அந்தத் தகுதியை யார் முடிவு செய்வார்கள்?'' — *நிருபர்கள்*

''சங்கரமடம்தான் அதை முடிவு செய்யும்!'' — *சங்கராச்சாரி*

செய்தனர். இந்தத் தடைச் சட்டத்தை வெறியுடன் ஆதரிப்பதற்காக பலகோடி ரூபாய் செலவு செய்து குடிசைப் பகுதிவாழ் மக்களுக்கு இலவச ''அன்பளிப்புகள்'' வழங்கிப் பிரச்சாரம் செய்கின்றனர். பிற இந்துமதவெறி பாசிஸ்டுகளைப் போலவே, பார்ப்பன - பாசிஸ்டுகளும் சிறுபான்மை மதத்தினருக்கு எதிரான அவதூறுகளைப் பரப்புகின்றனர்.

கருணாநிதி பலவகையிலும் ''இந்துத்துவா'' சக்திகளுடன் சமரசம் செய்து கொண்டுள்ளவர். ஆனாலும் இந்தக் கருணாநிதியைத்தான் பார்ப்பனிய எதிரி - ஆத்திகர்களின் எதிரி - இந்துமத துவேசி (இந்துமதப் பகைவன்) என்பதைப் போலவும், மிக மிகச் சிறுபான்மை பார்ப்பனிய சனாதன மதவாதிகளான தாம் ஏதோ தமிழ்நாட்டின் - ''இந்து''மதத்தினர் அனைவரின் ஏகப்பிரதிநிதி என்பதைப் போலவும் காஞ்சி சங்கராச்சாரி, இராம.கோபாலன், சோ முதலிய பார்ப்பனத் தலைவர்கள் சித்திரிக்கின்றனர். இதன்மூலம் உண்மையான பார்ப்பனிய எதிர்ப்புப் போராளிகளை இருட்டடிப்புச் செய்வதோடு, ஜெயலலிதாவின் அரசியல் எதிரியான கருணாநிதியை வீழ்த்தி அதன்மூலமும் ஆதாயம் அடைய எத்தணிக்கின்றனர்.

''இந்து''மதத்தினர் அனைவரின் ஏகப்பிரதிநிதி

**ஜெயலலிதாவின் ஆட்சி அதிகாரத்தைக் கொண்டும், பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணியின் அமைப்பு பலத்தைக் கொண்டும், தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் அரசு அதிகாரிகளின் ஆலோசனைகளைக் கொண்டும் இந்தபார்ப்பனப் பாசிச ஆதிக்கத்தை நிறுவும் முயற்சி நடக்கிறது.**

# காஞ்சி மட சங்கராச்சாரியின் கொடும்பாவி எரிப்புப் போராட்டம்

கடந்த நவம்பர் 10-ஆம் தேதியன்று, பார்ப்பன - பாசிச ஜெயா அரசின் மதமாற்றத் தடைச் சட்டத்தை ஆதரித்து விளக்கக் கூட்டம் நடத்த காஞ்சி மட சங்கராச்சாரி திருச்சிக்கு வந்தார். அவரது வருகையை ஒட்டி பார்ப்பனக் கைக்கூலிகளால் நகரெங்கும் பலவண்ணச் சுவரொட்டிகள் பளபளப்பாக ஒட்டப்பட்டன. அதற்கு எதிராக ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து, ''தமிழ் குடமுழுக்கு - தமிழ் வழிபாட்டை எதிர்க்கும், தலித்துகளைத் தூய்மையற்றவர்கள் என இழிவுபடுத்தும் பார்ப்பன சாதிவெறியன் சங்கராச்சாரியே திரும்பிப்போ!'' என்ற முழக்கத்துடன் நகரெங்கும் சுவரொட்டிகளை ஒட்டின. தீண்டாமையை நியாயப்படுத்தும் சங்கராச்சாரிகளின் வாக்குமூலங்களையும், இந்துமத சனாதனக் கொடுமையிலிருந்து மீளத் தாழ்த்தப்பட்டோரை மதம் மாறும்படி அறைகூவல் விடுத்த அம்பேத்கரின் உரையையும் துண்டுப் பிரசுரமாக வெளியிட்டு ஆயிரக்கணக்கான மக்களிடம் பிரச்சாரம் செய்தன. இதைக் கண்டு பீதியடைந்த ஆளும் பார்ப்பன கும்பல், சங்கராச்சாரி தங்கியிருந்த பகுதியைச் சுற்றி தடையரண் போல போலீசாரைப் பெருமளவில் குவித்து வைத்தது.

மாலையில் சங்கராச்சாரியின் பொதுக்கூட்டம் நடக்கும் இடத்தின் அருகே - அண்ணா சிலையை ஒட்டிய பகுதியில் - இப்புரட்சிகர அமைப்புகளின் தோழர்கள் திரண்டு விண்ணதிர முழக்கங்களுடன், பார்ப்பன வெறியன் சங்கராச்சாரியின் உருவ பொம்மையைக் கட்டி இழுத்து வந்து எரிக்க முற்பட்டனர். பதறியடித்துக் கொண்டு பாய்ந்து வந்த போலீசார், தோழர்களைத் தாக்கி அந்த உருவப் பொம்மையைப் பறித்துக் கொண்டு ஓடினர். பின்னர் அதே இடத்தில் வாய்க்கொழுப்பெடுத்த சங்கராச்சாரியின் பார்ப்பனத் திமிரையும், மதமாற்றத் தடைச் சட்டத்தையும், படர்ந்து வரும் பார்ப்பன ஆதிக்கத்தையும் எதிர்த்து ம.க.இ.க. மாவட்டச் செயலாளர் தோழர் இராமதாசு தலைமையில், தோழர்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். பீதியடைந்த போலீசு தடையை மீறி ஆர்ப்பாட்டம் செய்ததாகவும் கலவரத்தைத் தூண்டும் சுவரொட்டிகளை ஒட்டியதாகவும் குற்றம் சாட்டி தோழர்களைக் கைது செய்து சிறையிலடைத்துள்ளது.

சாதிவெறி திமிர்பிடித்த பார்ப்பன சங்கராச்சாரிக்கு எதிரான இப்போராட்டம், நகரெங்கும் பரபரப்பாகப் பேசப்பட்டு உழைக்கும் மக்களிடம் பெருத்த ஆதரவைப் பெற்றது. இந்து வெறி பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிராகக் கனலை மூட்டிய இப்போராட்டம், பார்ப்பன கும்பலைச் சுட்டெரிக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை என்பதை முன்னறிவிப்பாக உணர்த்தியது.



*ம.க.இ.க.,*
*பு.மா.இ.மு.,*
*பு.ஜ.தொ.மு.,*
*திருச்சி.*

www.padippakam.com




''இந்தியாவுக்குள் இசுலாம் வருவதற்கு முன்பே, கிறித்தவம் நுழைவதற்கு முன்பே இந்த மண்ணில் செழித்து ஓங்கிய கலாச்சாரம் ஒன்று இருந்தது. அந்தக் கலாச்சாரத்தின் அடிப்படை வேர் பிராமணீயம்தான். அதன் பிரதிநிதி பிராமணன்தான். சமஸ்கிருதம்தான் இந்தியக் கலாச்சாரத்தின் வேர். அதைக் கைவிட்டால் கலாச்சாரம் அழிந்துவிடும். இதையெல்லாம் வருங்கால பிராமணர்கள் மறந்துவிடக் கூடாது.''

*''அருந்தொண்டாற்றிய தமிழக அந்தணர்கள்'' நூலின் பிரதம ஆசிரியர்.*

யாக உரிமை பாராட்டி தாழ்த்தப்பட்ட மக்களின் மீது ஒடுக்குமுறை செலுத்தும் ''பிற்படுத்தப்பட்ட சாதி''யினரின் ஆதரவைத் தேடிக் கொள்ள இந்தப் பார்ப்பன சதிகாரர்கள் முயலுகிறார்கள். ஆனால் ''எங்கப்பன் குதிருக்குள் இல்லை'' என்பதைப்போல ''அந்தணர்கள் தாம் எல்லாருக்கும் வழிகாட்டி. ஆண்டவனுக்கும் மேலானவர்கள். எந்த அரசும் அந்தணர்கள் சொல்படித்தான் நடக்க வேண்டும். அந்தணர்கள் தர்மம் வழுவாதவர்கள்'' என்றெல்லாம் வாய்க் கொழுப்போடு கூட்டம் போட்டுப் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

ஆகவே, பொதுவில் இந்துத்துவ - வகுப்புவாத எதிர்ப்பு, மதச்சார்பின்மை என்றெல்லாம் பேசுவதில் பயனில்லை. குறிப்பாக, பாசிச வடிவமெடுத்துள்ள பார்ப்பனிய ஆதிக்கத்தை எதிர்த்து வீழ்த்தவேண்டும். இல்லையானால் வடக்கே குஜராத்தை இந்துத்துவாவின் பரிசோதனைக் கூடமாக மாற்றுவதில் வெற்றி பெற்றதைப்போல, தெற்கே தமிழ்நாட்டை பார்ப்பனியத்தின் பரிசோதனைக் கூடமாக மாற்றுவதிலும் வெற்றி பெற்று விடுவார்கள். ●

# சி.ஐ.டி.யு. ரவுடிகளின் கொலைவெறித் தாக்குதல்

திருச்சி நகரில் ஜங்ஷன் பகுதியில் ஏறத்தாழ 110 ஆட்டோக்கள் இயங்கி வருகின்றன. இங்குள்ள சி.ஐ.டி.யு. சங்கத்துக்கும் ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்புச் சங்கத்துக்குமிடையில் ஓட்டுனர்களின் பொறுப்புகள், கட்டுப்பாடுகள், நடத்தை - பண்பாடுகளையொட்டி அடிக்கடி வாக்குவாதங்கள் நடப்பதுண்டு. எனவே ஆ.ஓ.பா. சங்கத்தின் முயற்சியால், இரு சங்கத்தின் நிர்வாகிகளும் கூடிப்பேசி 16 வகையான விதிமுறைகளை வகுத்து, அதன்படி ஆட்டோ ஓட்டுநர்கள் செயல்பட வேண்டுமெனத் தீர்மானமும் போடப்பட்டது.

ஆனால், தீர்மானம் போட்டதிலிருந்து இன்றுவரை சி.ஐ.டி.யு. சங்கத்தினர் எவரும் விதிமுறைகளை மதித்து நடந்ததில்லை. சீருடை அணியாமல் ஆட்டோ ஓட்டுவது. குடித்துவிட்டு ஓட்டுவது, பயணிகளிடம் அடாவடித்தனமாக நடந்து கொள்வது என்று அராஜகமாக நடந்து வந்தனர். இதை ஆ.ஓ.பா. சங்கத்தினர் கண்டித்ததையொட்டி, சி.ஐ.டி.யு சங்கத்தினர் அடிக்கடி வீண் தகராறுகளைச் செய்து வந்தனர். இந்நிலையில், கடந்த நவம்பர் 19-ஆம் தேதியன்று இரு சங்கத்தின் நிர்வாகிகளும் காவல் துறையிடம் முறையிட்டு பேச்சுவார்த்தை நடத்தி, இனி ஆட்டோ நிறுத்தத்தில் எந்தப் பிரச்சினையும் நடக்கக் கூடாது என்றும் விதிமுறைகளைக் கறாராகப் பின்பற்ற வேண்டும் என்றும் தீர்மானம் செய்துவிட்டு, இம்முடிவுகளை விளக்க ஆட்டோ நிறுத்தத்திற்கு வந்தனர்.

அப்போது திட்டமிட்டபடி திடீரென அங்கு கையிலே ஆயுதங்களுடன் வந்த சி.ஐ.டி.யு. சங்கத்தைச் சேர்ந்த ரவுடிகள், ஆ.ஓ.பா. சங்க நிர்வாகிகளையும் உடனிருந்த சங்க சட்ட ஆலோசகரான வழக்கறிஞர் போஜகுமாரையும் கொலைவெறியோடு தாக்கத் தொடங்கினர். இதைத் தடுக்க முற்பட்ட ஆட்டோ ஓட்டுநர்கள் மீதும் தாக்குதல் நடந்தது. செய்தியறிந்து அடுத்த சில நிமிடங்களில் ஆ.ஓ.பா. சங்கத்தைச் சேர்ந்தோர் அங்கு திரளத் தொடங்கியதும், சி.ஐ.டி.யு. சங்க ரவுடிகள் தப்பியோடி விட்டனர். சிக்கிய இரு ரவுடிகளைப் பிடித்து ஆ.ஓ.பா. சங்கத்தினர் போலீசிடம் ஒப்படைத்தனர். ஆ.ஓ.பா. சங்கத்தின் மாவட்டச் செயலாளர் முருகேசன், இணைச் செயலாளர் கணேசன் உள்ளிட்ட 8 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

சி.ஐ.டி.யு. சங்க ரவுடிகளின் கொலைவெறித் தாக்குதலைக் கண்டித்து உடனடியாக கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த ஆ.ஓ.பா.சங்கம் முடிவு செய்தது. ஆனால், போலீசார் அனுமதிதர மறுத்துவிட்டதால், ஆ.ஓ.பா.சங்க அலுவலகக் கட்டிடத்தில் கண்டனக் கூட்டம் நடத்தப்பட்டது.

தொழிலாளர்களின் தோழர் என்று பசப்பித் திரியும் சி.ஐ.டி.யு.சங்கம், தனது தொழிற்சங்கப் பிழைப்புவாதத்திற்காக ரவுடிகளைக்கூட தனது சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளுமளவுக்குச் சீரழிந்து கிடக்கிறது. எனவே பொதுமக்களிடமும் ஆட்டோ ஓட்டுநர்களிடமும் அம்பலப்பட்டு தனிமைப்பட்டுக் கிடக்கும் சி.ஐ.டி.யு. இனியும் தன்னைத் திருத்திக் கொள்ளாவிட்டால், அதன் சுய அழிவை யாராலும் தடுக்க முடியாது.

*ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்பு சங்கம், திருச்சி.*

சி.ஐ.டி.யு. ரவுடிகளின் கொலைவெறித் தாக்குதலில் படுகாயமடைந்து, மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் முருகேசன் (ஆ.ஓ.பா.சங்கச் செயலாளர்), முருகேசன் மற்றும் கணேசன் [வலது ஓரம்].



www.padippakam.com

# ஆப்கானிஸ்தான் ... ஈராக் எனத் தொடரும்

# அமெரிக்காவின் பயங்கரவாதம்

இரண்டு மாதங்களுக்கு முன்பு ஜெர்மனியில் நடந்த அதிபர் தேர்தல் பிரச்சாரத்தின் பொழுது, அந்நாட்டு நீதித் துறை அமைச்சர், அமெரிக்க அதிபர் ஜார்ஜ்புஷ்ஷை, ஆரிய இனவெறி பிடித்த பாசிச சர்வாதிகாரி இட்லரோடு ஒப்பிட்டுப் பேசினார். அந்தப் பெண் அமைச்சர், உலகின் 'மிகச் சிறந்த ஜனநாயக' நாட்டின் அதிபரை, ஒரு பாசிச சர்வாதிகாரியோடு குருட்டாம் போக்கில் ஒப்பிடவில்லை.

இரண்டாம் உலகப் போர் தொடங்குவதற்கு முன்பாக, ஜெர்மன் அதிபர் இட்லர், ஆஸ்திரேலியாவை ஜெர்மன் நாட்டோடு இணைத்துக் கொள்ள விரும்பினான். இட்லரின் விருப்பத்திற்கு அடிபணிய மறுத்த ஆஸ்திரிய நாட்டின் அதிபர், ஆஸ்திரியா – ஜெர்மன் இணைப்பு குறித்து, ஆஸ்திரிய நாட்டு மக்களிடம் பொதுஜன வாக்கெடுப்பு நடத்தினார். இதனால் ஆத்திரமடைந்த இட்லர், ஆஸ்திரியாவில் ஆட்சி மாற்றம் தேவை என்றான்.

ஆஸ்திரியாவுக்கு அடுத்து, செக்கோஸ்லாவியாவை விழுங்கிய இட்லர், அதன் பின், ''போலந்து நாட்டு அதிபர் கர்னல் ஜேசப் பெக் பதவியை விட்டு இறங்க வேண்டும்; போலந்தை யார் ஆள்வது என்பதை ஜெர்மன்தான் தீர்மானிக்கும்'' என்றான்.

இட்லரின் வாயிலிருந்து வந்த ஆட்சி மாற்றம் என்ற அதே வார்த்தைகள், இப்பொழுது ஜார்ஜ் புஷ்ஷின் வாயில் இருந்து வருகின்றன. நாஜி ஜெர்மனியின் இடத்தில் ஜனநாயக அமெரிக்கா; பாசிச சர்வாதிகாரி இட்லர் இடத்தில் 'ஜனநாயகக் காவலர்' புஷ். ஆஸ்திரியா, செக்கோஸ்லாவியா, போலந்து ஆகிய நாடுகளின் இடத்தில் ஆப்கானிஸ்தான், ஈராக்.

ஈராக்கில் நடந்து வரும் சதாம் உசேன் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு, கடந்த பத்தாண்டுகளாகவே அமெரிக்கா முயன்று வருகிறது. ''தீவிரவாதத்திற்கு எதிரான போர்'' என்ற பெயரில், ஆப்கான் மீது ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புப் போரைத் தொடங்கியவுடனேயே, அமெரிக்க இராணுவ மந்திரி டோனால்டு ராம்ஸ்பெல்ட், ''போரின் அடுத்த கட்டம், ஈராக்கின் சதாம் உசேனை அகற்றுவதுதான்'' என்றார்.

''யுனோகால்'' என்ற அமெரிக்க எண்ணெய் நிறுவனத்தில் அதிகாரியாக வேலை பார்த்த ஹமீத் கர்சாய் தலைமையில் ஆப்கானில் பொம்மையாட்சியை ஏற்படுத்தியதைப் போல, ஈராக்கிலும் சர்வாதிகாரி சதாமைத் தூக்கி யெறிந்துவிட்டு, ஜனநாயகம் என்ற போர்வையில் ஒரு பொம்மையாட்சியை ஏற்படுத்துவதுதான் அமெரிக்காவின் நோக்கம். போரின் மூலம் சதாம் உசேன் ஆட்சியைத் தூக்கியெறிய முடியா விட்டால் கூட, அவரைக் கொலை செய்தாவது, ஈராக்கில் ஆட்சியை மாற்ற வேண்டும் எனத் துடிக்கிறது, அமெரிக்கா. இதற்குத் தகுந்தாற்போல, ''அமெரிக்கத் துருப்புகள் தற்காப்புக்காகக் கொலை செய்யலாம்'' என அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையில் கூடத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

### அமெரிக்காவின் எதிரி, உலகின் எதிரி

''சதாம் உசேன், பேரழிவு ஏற்படுத்தக் கூடிய இரசாயன, உயிரியல், அணு ஆயுதங்களை இரகசியமாகக் குவித்து வைத்திருக்கிறார். இந்தப் பேரழிவு ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களைப் பயன்படுத்தி, சதாம் உசேன் அமெரிக்கா மீதும், இசுரேல் மீதும் போர் தொடுக்கத் திட்டம் போடுகிறார். சதாம் உசேனுக்கும், முசுலீம் தீவிரவாதிகளின் தலைவர் ஒசாமா பின்லேடனுக்கும் தொடர்பு இருக்கிறது. ஆப்கானில் இருந்து தப்பியோடிய அல்–கொய்தா முசுலீம் தீவிரவாதிகள் ஈராக்கில் தஞ்சம் அடைந்திருக்கிறார்கள்; உலகின் அமைதிக்கு சதாம் உசேன் அச்சுறுத்தலாக இருக்கிறார்'' என்ற பிரச்சாரத்தை நடத்தி வரும் அமெரிக்கா, ''இதைத் தடுக்க உடனே ஈராக் மீது போர் தொடுத்து, சதாமைப் பதவியில் இருந்து விரட்ட வேண்டும். பிற நாடுகள் இதற்கு ஒத்துழைக்கவில்லை என்றால், அமெரிக்கா தன்னந்தனியாகவே ஈராக் மீது போர் தொடுக்கும்'' என கடந்த ஜூலை மாதமே அறிவித்தது.

''சதாம் உசேன் அமெரிக்கா மீதும், இசுரேல் மீதும் போர் தொடுக்கத் திட்டம் போடுகிறார்'' என்ற அமெரிக்காவின் குற்றச்சாட்டை, ஜெர்மன் ஏகாதிபத்தியம் ஆதாரமில்லை எனக் கூறி நிராகரித்து விட்டது. உலக வர்த்தகக் கழகத்தைத் தகர்த்த ''முசுலீம் தீவிரவாதக் குழுவின் தலைவன் அட்டாவுக்கும், சதாம் உசேனுக்கும் தொடர்பு இருப்பதாக'' செக் நாடு வைத்த குற்றச்சாட்டை, நிரூபிக்க முடியாமல், அந்நாடே கைகழுவி விட்டது. ''சதாம் உசேன் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைக் குவித்து வைத்திருக்கிறார்'' என்ற அமெரிக்காவின் குற்றச்சாட்டிற்கு, இங்கிலாந்தைத் தவிர வேறெந்த நாடும் பின்பாட்டுப் பாடவில்லை.

பிற நாடுகள் ஆதரிக்காவிட்டாலும், ஈராக் மீது முந்திக் கொண்டு தாக்குதல் தொடுக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் போர் வெறிக் கூச்சலை, இங்கிலாந்து, இத்தாலி, ஸ்பெயின் ஆகிய மூன்று நாடுகள் மட்டுமே ஆதரிக்கின்றன. ரசியா, பிரான்சு, ஜெர்மனி ஆகிய ஏகாதிபத்திய நாடுகளும், சீனா, இந்தியா உள்ளிட்ட பிற ஏழை நாடுகளும், சவுதி அரேபியா, ஜோர்டன் உள்ளிட்ட அமெரிக்க அடிவருடி நாடுகளும் கூட அமெரிக்காவின் போர் வெறியை வெளிப்படையாக ஆதரிக்கவில்லை. எனினும், இந்த நாடுகள் ''ஈராக்கிற்கு மீண்டும் ஐ.நா.வின். ஆயுதப் பரிசோதனைக் குழுவை அனுப்ப வேண்டும்; அதற்கு ஈராக் சம்மதிக்கவில்லை என்றால், ஐ.நா.வில் தீர்மானம் போட்டு, ஐ.நா.வின் சம்மதத்தோடு, போர் தொடுக்கலாம்'' என்ற ஆலோசனையை, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புப் போரை நியாயமான போராகக் காட்டும் செப்படி வித்தையை முன் வைத்தன.

ரசியாவும், பிரான்சும் அமெரிக்காவின் முந்திக்கொண்டு தாக்கும் திட்டத்தை ஆதரிக்காமல் இருந்ததற்கு, ஜனநாயக மோகம் எதுவும் காரணம் இல்லை. மாறாக, அந்நாடுகளுக்கு ஈராக்கின் எண்ணெய் வயல்களின் மீது இருக்கும் மோகம்தான் காரணம். ரசியாவின் ''லுகோயில் ஹோல்டிங்'' என்ற நிறுவனம் ஈராக்கின் இரண்டு எண்ணெய் வயல்களை ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கு 23 வருடத்திற்கு குத்தகைக்கு

www.padippakam.com

எடுத்திருக்கிறது. ரசியாவின் ''ஜாரு பெஸ்நேட்'' என்ற தேசங்கடந்த தொழில் கழகம், ''பின் உமர்'' என்ற எண்ணெய் வயலை மேம்படுத்த 4.5 இலட்சம் கோடி ரூபாய்க்கு ஒப்பந்தமிட்டுள்ளது. பிரான்சின் ''டோடல் ஃபினால்ப்'' என்ற நிறுவனம், ''மஜ்னூன்'' எண்ணெய் வயலை மேம்படுத்த ஒப்பந்தமிட்டுள் ளது. அமெரிக்கா தன்னிச்சையாகப் போர் தொடுத்தால், தங்களின் பங்கு பறிபோய் விடுமே என்ற ஆதங்கத்தில்தான் அமெரிக்காவின் போர்த் திட்டத்தை ரசியாவும், பிரான்சும் எதிர்த்தன.

இந்த நாடுகளின் எதிர்ப்பு ஒருபுறமிருக்க, ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் மிகப் பிரம்மாண்ட போர் எதிர்ப்பு பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் நடந்து வருகின்றன. இங்கிலாந்து தலைநகர் இலண்டனில் நடந்த பேரணியில் 1.5 இலட்சம் பேர் கலந்து கொண்டனர்; இத்தாலியின் புலோரன்சு நகரில் நடந்த பேரணியில், இந்த எண்ணிக்கை நான்கு இலட்சத்தைத் தொட்டது. இந்தப் பேரணிகளில், எழுந்த ''புஷ், பதவியை விட்டு நீ இறங்கு'' என்ற முழக்கம், அமெரிக்காவின் போர்வெறிக் கும்பலுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது.

''பாலஸ்தீன மக்கள் இசுரேலால் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் சூழலில், நீங்கள் ஈராக் மீது தாக்குதல் நடத்தி, ஈராக் மக்களைக் கொன்றால், வெடித்துக் கிளம்பும் மக்களின் ஆத்திரத்தை எந்தவொரு அரேபிய நாட்டுத் தலைவராலும் கட்டுபடுத்த முடியாது'' என எகிப்து அதிபர் ஹோஸ்னி முபாரக் மேற்காசியாவின் நிலைமையை அமெரிக்காவிடம் எடுத்துச் சொல்லிப் புலம்பி இருக்கிறார். அமெரிக்காவின் பக்கா அடிவருடி நாடான சௌதி அரேபியா கூட, மக்களின் கோபத்திற்குப் பயந்து, தனது நாட்டில் உள்ள அமெரிக்காவின் இராணுவத்தளத்தைக் காலி செய்யக் கோரி மன்றாடியது.

இந்த எதிர்ப்புகளால், ஈராக் மீது உடனடியாக, தன்னிச்சையாகத் தாக்குதல் தொடுக்கும் தனது திட்டத்தை ஒத்திப் போட்ட அமெரிக்கா, ஐ.நா.வின் பாதுகாப்பு கவுன்சில், ஈராக் மீது கடுமையான மற்றொரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் எனக் கோரியது. ''ஐ.நா.வில் ஏற்கனவே ஈராக் மீது 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், புதிதாகத் தீர்மானம் தேவையில்லை'' என பிரான்சும், ரசியாவும் எதிர்த்தன. எனினும், இறுதியாக, அமெரிக்காவின் நிர்பந்தத்துக்கும் மிரட்டலுக்கும் பாதுகாப்பு கவுன்சிலின் அனைத்து உறுப்பு நாடுகளும் அடிபணிந்து, ஒருமனதாக, ஈராக் மீதான புதிய தீர்மானத்தை நிறைவேற்றி




ஈராக் மீது மீண்டும் மிகப் பெரிய போரை நடத்தத் துடிக்கும் அமெரிக்காவின் மேலாதிக்க போர்வெறியை எதிர்த்து, இத்தாலி நாட்டின் ஃப்லோரன்ஸ் நகரில் நடந்த பிரம்மாண்டமான ஆர்ப்பாட்டம். இதில் நான்கு இலட்சம் மக்கள், ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளில் இருந்து வந்து கலந்து கொண்டனர்.

விட்டன. இரண்டு திருத்தங்கள் செய்யப்பட்டதைத் தவிர்த்துப் பார்த்தால், அமெரிக்கா சுற்றுக்கு விட்ட நகல் தீர்மானம்தான், ஐ.நா.வின் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

### ஈராக் மீதான அமெரிக்காவின் பத்தாண்டு போர்

அமெரிக்காவும், பிற ஏகாதிபத்திய நாடுகளும், ''ஏதோ, அமெரிக்கா இனி மேல்தான் ஈராக் மீது போர் தொடுக்கப் போவதைப் போல'' பசப்பி வருகின்றன. உண்மையில், 1991-ஆம் ஆண்டு நடந்த வளைகுடா போருக்குப் பின், அதன் தொடர்ச்சியாக கடந்த பத்தாண்டுகளாகவே, ஈராக் மீது ஒரு தாழ்நிலைப் போரை நடத்தி வருகிறது, அமெரிக்கா. குறிப்பாக, 1998-ஆம் ஆண்டு, ''பாலைவனக் குள்ளநரி'' என்ற பெயரில் ஈராக் மீது அமெரிக்கா மிகப் பெரும் தாக்குதலை நடத்தியது. ஏறத்தாழ ஒரு மாதத்திற்கும் மேல் நடந்த வளைகுடாப் போரின் பொழுது, ஈராக் மீது 183 குரூயிஸ் ஏவுகணைகளை வீசிய அமெரிக்கா, அதைவிடக் குறுகிய காலமே நடந்த ''பாலைவனக் குள்ளநரி''ப் போரின் பொழுது 450 குரூயிஸ் ஏவுகணைகளை வீசியது.

ஈராக், குவைத்தை ஆக்கிரமித்ததையொட்டி ஈராக் மீது போடப்பட்ட பொருளாதாரத் தடை இன்னும் நீக்கப்படவில்லை. ஈராக்கின் எண்ணெய் வியாபாரமும், அதன் இறக்குமதியும் ஐ.நா. மூலம் ஏகாதிபத்தியங்களால் கட்டுப்படுத்தப் படுகின்றன. குர்து இன மக்கள் அதிகமாக வாழும் ஈராக்கின் வடபகுதி மற்றும் ஷியா பிரிவு முசுலீம்கள் வாழும் ஈராக்கின் தென்பகுதி வானில் ஈராக்கின் விமானங்கள் பறக்க அமெரிக்கா தடை விதித்திருக்கிறது. ஈராக் மீது நினைத்த நேரத்திலெல்லாம் தாக்குதல் தொடுக்க அமெரிக்கா இந்த வான்வழித் தடங்களைப் பயன்படுத்தி வருகிறது. மேலும், குர்து மற்றும் ஷியா கைக்கூலி அமைப்பு

www.padippakam.com

களை உருவாக்கி, சதாம் உசேன் ஆட்சியைக் கவிழ்க்கச் சதி வேலைகளையும் நடத்தி வருகிறது, அமெரிக்கா.

இப்படி கடந்த பத்தாண்டுகளாகவே, அமெரிக்கா ஈராக்கை முற்றுகையிட்டு, தாழ்நிலைப் போரை நடத்தி வந்த போதிலும், சதாம் உசேனைத் தூக்கி யெறிய முடியாததால், மீண்டும் ஒரு வளைகுடாப் போரை நடத்தத் துடிக்கிறது. இதற்காகவே, சதாம் உசேன் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைக் குவித்து வைத்திருக்கிறார் என்றும், அவர் கெடுமதியின் அச்சு (Axis of Evil) என்றும் குற்றம் சுமத்துகிறது, அமெரிக்கா.



வளைகுடா போரின் பொழுது அமெரிக்கா வீசிய குறைந்த கதிர்வீச்சு கொண்ட அணுகுண்டு தாக்குதலால் பாதிக்கப்பட்டு, சாவை எதிர்நோக்கும் ஈராக் சிறுவன்: இந்தப் பேரழிவிற்குக் காரணமான அமெரிக்காவுக்கு என்ன தண்டனை?

### மீண்டும் ஆயுதப் பரிசோதனை மீண்டும் உளவு வேலை

வளைகுடாப் போர் முடிந்தவுடனேயே ஈராக் வசமிருந்த உயிரியல், இரசாயன ஆயுதங்களைக் கண்டுபிடித்து அழிக்கவும், அந்த வகை ஆயுதங்களைத் தயாரிக்கும் திறன் பெற்ற தொழிற்சாலைகளை நிர்மூலமாக்கவும், ஐ.நா. சிறப்பு கமிசன் அமைக்கப்பட்டது. இந்தக் குழு 1998-ஆம் ஆண்டு வரை ஈராக்கில் தங்கியிருந்து, சோதனைகளை நடத்தியது.

ஐ.நா. சிறப்பு கமிசனின் தலைவராக இருந்த ஸ்காட் ரிட்டர், வளைகுடாப் போரில் பங்கெடுத்தவர். ஆயுதப் பரிசோதனையின் தொடக்கத்தில் அமெரிக்கா மற்றும் இசுரேலின் தலையாட்டி பொம்மையாக இருந்த ஸ்காட் ரிட்டர், ஒரு கட்டத்தில், ''உயிரியல், இரசாயன அணு ஆயுதங்களைத் தயாரிக்கவல்ல ஈராக்கின் திறன் அனைத்தும் முற்றிலுமாக அழிக்கப்பட்டு விட்டது. எனவே, இனியும் பொருளாதாரத் தடையுத்தரவைத் தொடர்வது அறிவீனமாகும்'' என வெளிப்படையாகவே அறிவித்தார். இதன் காரணமாகவே, ஸ்காட் ரிட்டர், ஐ.நா. சிறப்பு கமிசனின் தலைவர் பதவியில் இருந்து அமெரிக்காவால் துரத்தியடிக்கப்பட்டார்.

சர்வதேச அணுசக்திக் கழகம் 1998-ஆம் ஆண்டு வெளியிட்ட ஓர் அறிக்கையிலும், ''அணு ஆயுதங்களைத் தயாரிக்கவல்ல ஈராக்கின் திறன் அனைத்தும் பிடுங்கப்பட்டு விட்டதாக'' கூறியிருக்கிறது. உண்மை இப்படியிருக்க, சதாம் உசேன் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களை இரகசியமாகக் குவித்து வைத்திருப்பதாக அமெரிக்கா மீண்டும் குற்றஞ் சுமத்துவதோடு, மீண்டும் ஆயுதப் பரிசோதனை என்ற பெயரில் ஈராக்கை வேவு பார்க்க அதிகாரம் தரும் ஒரு தீர்மானத்தையும் ஐ.நா. மூலம் நிறைவேற்றிவிட்டது.

''ஈராக் தொடர்பாக இதுவரை ஐ.நா. மன்றம் மூலம் நிறைவேற்றப்பட்ட 16 தீர்மானங்களையும் ஈராக் மீறியிருப்பதாக'' இப்புதிய தீர்மானம் ஈராக் மீது குற்றம் சாட்டுகிறது. மேலும், ஐ.நா.வின் ஆயுதப் பரிசோனை – கண்காணிப்புக் குழுவும், சர்வதேச அணு ஆயுத கமிசனின் ஆய்வாளர்களும், தங்களின் விருப்பப்படி, எந்தவிதமான முன்னறிவிப்பும் இன்றி, ஈராக்கின் எந்தப் பகுதிக்குள்ளும், எந்தக் கட்டிடம், தொழிற்சாலைக்குள்ளும் நுழைவார்கள். இதற்கு ஈராக் எந்தவிதமான தடையோ, கட்டுப்பாடோ விதிக்க முடியாது.

இந்த ஆய்வாளர்களின் பாதுகாப்புக்காக ஐ.நா. பாதுகாப்பு படையினர் ஈராக்கினுள் நுழைவார்கள். இந்த ஆய்வுக் குழுக்கள், எந்தவொரு பகுதியிலும் ஈராக்கின் விமானங்கள் பறக்கத் தடை விதிக்கலாம்; ஈராக்கியர்கள் நுழையத் தடை விதிக்கலாம். ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படும் பகுதிகளை, ஆளில்லாத (தானியங்கி) விமானங்களைப் பயன்படுத்தி வேவு பார்க்கலாம். எந்தவொரு ஈராக்கியரையும் ஈராக்கிற்கு வெளியே கடத்திப் போய், ஆயுதங்கள் பற்றி விசாரிக்கலாம்.

சுருக்கமாகச் சொன்னால், ஐ.நா. தீர்மானம் மூலம் அமெரிக்க உளவாளிகளும், இராணுவ வீரர்களும் ஈராக்கினுள் ஊடுருவ அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் சதாம் உசேனை ஆத்திரப்படுத்தி, அவரைத் தீர்மானத்தை மீறச் செய்து, அதன் பின் ஈராக் மீது ஒரு பெரும் தாக்குதலை நடத்த அமெரிக்கா சதிவலை பின்னியிருக்கிறது.

### அமெரிக்காவின் முற்றுகையில் ஆசியா

மத்திய ஆசியாவையொட்டியுள்ள காஸ்பியன் கடல் பகுதியில் கிடைக்கும் கச்சா எண்ணெய் வளத்தைக் கைப்பற்றுவதற்காக, ஆப்கானில் பொம்மையாட்சியை ஏற்படுத்தியிருக்கும் அமெரிக்கா, ஈராக்கின் எண்ணெய் வளத்தைக் கைப்பற்றவும், மேற்காசியாவில் தனது ஆதிக்கத்தை வலுவாக்கிக் கொள்ளவுமே, ஈராக்கில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவரத் துடிக்கிறது. முதலாளித்துவ அறிஞர்கள் கூறுவது போல, அமெரிக்கா, தனது உள்நாட்டுப் பிரச்சினைகளைத் திசை திருப்புவதற்காக நடத்தும் போரல்ல இது. ''மூலப் பொருட்களையும், காலனிகளையும் கைப்பற்றிக் கொள்ள ஏகாதிபத்தியங்கள் மூர்க்கமாக முயலும்'' என்பதன் வெளிப்பாடே இந்தப் போர்.

இதற்காக ஆசியாவையே முற்றுகையிடுகிறது அமெரிக்கா. ஏற்கனவே, மேற்காசியாவில் சௌதி அரேபியா, கத்தார், குவைத், ஓமன் ஆகிய நாடுகளில் தனது இராணுவத் தளங்களை அமைத்துள்ள அமெரிக்கா, தற்பொழுது, மத்திய ஆசியாவில் உள்ள உஸ்பெகிஸ்தான்

www.padippakam.com

கிர்கிஸ்தானிலும் மற்றும் ஜியார்ஜியாவிலும் புதிய இராணுவத் தளங்களை அமைத்துள்ளது. துருக்கியில் உள்ள விமானத் தளத்தை நவீனப்படுத்தியிருக்கிறது. மேலும், ஆப்பிரிக்காவின் வட பகுதியில் மேற்காசியாவை ஒட்டியுள்ள சோமாலியா, சூடான் நாடுகளிலும் இராணுவத் தளங்களை அமைக்க அமெரிக்கா முயன்று வருகிறது.

அமெரிக்காவின் பன்னாட்டு எண்ணெய் நிறுவனங்களுக்கு அடுத்தபடியாக, அமெரிக்கா நடத்திவரும் பயங்கரவாதத்துக்கு எதிரான போரைப் பயன்படுத்திக் கொள்ளை இலாபம் அடிப்பவை அமெரிக்காவின் ஆயுதத் தளவாட நிறுவனங்கள்தான். பிற நாடுகளை வேவு பார்க்கும் செயற்கை கோள்களுக்குத் தேவைப்படும் உதிரி பாகங்களின் உற்பத்தியை அதிகப்படுத்தும்படி போயிங் நிறுவனத்திற்கு உத்தரவிட்டுள்ளது, அமெரிக்க அரசு. இது ஒருபுறமிருக்க, இந்தப் போரைக் காட்டி உஸ்பெகிஸ்தானிடம் 125 கோடி ரூபாய் பெறுமான ஆயுதத் தளவாடங்களையும், கிர்கிஸ்தானிடம் 70 கோடி ரூபாய் பெறுமான ஆயுதங்களையும், தாஜிகிஸ்தானிடம் 600 கோடி ரூபாய் பெறுமான ஆயுதங்களையும், இந்தியாவிடம் 730 கோடி ரூபாய் நவீன ராடர் சாதனங்களையும் விற்க அமெரிக்கா ஒப்பந்தம் போட்டுள்ளது.

பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களை சதாம் உசேன் குவித்து வைத்திருப்பதாகச் சந்தேகம்தான் எழுப்பப்படுகிறது. ஆனால், இப்படிப்பட்ட ஆயுதங்களை அமெரிக்கா குவித்து வைத்திருப்பது உலகமே அறிந்த உண்மை. அமெரிக்கா, வளைகுடாப் போரின் பொழுது, ஈராக் மீது கதிர்வீச்சு குறைந்த அணுகுண்டுகளை வீசியதால், அந்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் ஊனமாகப் பிறக்கின்றன. இந்த அணுகுண்டு வீச்சால் புற்றுநோய் பிடித்து, பொருளாதாரத் தடையால் அதற்குரிய மருந்து கிடைக்காமல், இறந்து போன குழந்தைகள் - சிறுவர்களின் எண்ணிக்கை ஐந்து இலட்சத்தைத் தாண்டி விட்டது.

இதன்படி பார்த்தால், ஈராக்கிற்கு முன்னதாக அமெரிக்காவில்தான் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும்; சதாம் உசேனுக்கு முன்னதாக, புஷ்தான் பதவியில் இருந்து தூக்கியெறியப்பட வேண்டும். சதாம் உசேனுக்கு முன்னதாக, ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும், உலகின் பல்வேறு நாடுகளிலும் பேரழிவை ஏற்படுத்திய அமெரிக்க அதிபர்கள்தான் போர்க் குற்றவாளிகளாக விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும்.

● அழகு

## தனியார் கல்லூரி மாணவர்கள்

# கொத்தடிமைகளா?

"தமிழக அரசு நிர்ணயித்துள்ள கட்டணத்திற்கும் கூடுதலாக, மாணவர்களிடமிருந்து பணம் வசூலிக்கும் சுயநிதிக் கல்லூரிகளின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும்'' எனத் தமிழகக் கல்வி அமைச்சர் தம்பிதுரை, இந்தக் கல்வி யாண்டின் தொடக்கத்தில் எச்சரிக்கையொன்றை விடுத்திருந்தார்.

இந்த எச்சரிக்கையை தமிழக அரசு கறாராக, கண்டிப்போடு நடைமுறைப் படுத்தியிருந்தால், தமிழகக் கல்வி அமைச்சர் தம்பிதுரையே தண்டிக்க பட்டிருக்கக் கூடும். ஏனென்றால், தமிழகத்தின் மிகப் பிரபலமான கல்வி வியாபாரிகளுள் அவரும் ஒருவர்.

தனியார் பொறியியல் கல்லூரியில் படிக்கும் மாணவியின் தந்தையொருவர் கல்லூரியின் நிர்வாகியின் பிறந்த நாளுக்கு ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் ஆயிரம் ரூபாய் கட்டாய நன்கொடை வசூலிக்கப்பட்டதாகவும், அவரின் பிறந்தநாள் விழாவிற்கு வராத மாணவர்களுக்கு நூறு ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாகவும் மனம் நொந்து போய் தினமலர் நாளிதழுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

கல்விக் கட்டணம் தொடங்கி கல்லூரி நிர்வாகியின் வீட்டு நாய், குட்டி போட்டதைக் கொண்டாடுவது வரை – பல 'நூதன' வழிகளில் மாணவர்களைக் கொள்ளையடிப்பதற்காக, எந்தவொரு தனியார் கல்லூரியும் தண்டிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால், இந்தக் கொள்ளையைத் தட்டிக் கேட்கும் மாணவர்கள், நிர்வாகத்தால் பழிவாங்கப்படுகிறார்கள்.

பெரம்பலூரிலுள்ள தனலெட்சுமி பொறியியல் கல்லூரியில் படிக்கும் ராஜசேகர் என்ற மாணவனிடம், "கல்விக் கட்டணத்திற்கு மேல் பத்தாயிரம் ரூபாய் நன்கொடை தர வேண்டுமெனவும், இந்தப் பணம் மாணவனின் ஆளுமை வளர்ச்சிக்காக வசூலிக்கப்படும் கட்டணம்'' என்றும் கூறியிருக்கிறது, அக்கல்லூரி நிர்வாகம். "இந்தப் பணத்திற்கு ரசீது தந்தால்தான் பத்தாயிரம் ரூபாய் கட்டுவதாகக் கூறியிருக்கிறார்'' ராஜசேகர். ஆனால், நிர்வாகமோ ரசீது தர மறுத்து விட்டது.

மாணவர் ராஜசேகர் கல்லூரியின் இந்தச் சட்ட விரோதக் கொள்ளையை மாவட்ட ஆட்சியரிடம் புகாராகக் கூறினார். இதனால் ஆத்திரமடைந்த அக்கல்லூரி நிர்வாகம், இரண்டாம் பருவத் தேர்வு நடந்தபொழுது, வேண்டும் என்றே எல்லா தேர்வுகளுக்கும் ஒரு மணிநேரம் ராஜசேகரைக் காக்க வைத்து, அதன்பின் அவரைத் தேர்வு எழுத அனுமதித்துப் பழிவாங்கியது.

கோவையில் உள்ள "ஜே.கே. காலேஜ் ஆஃப் நர்சிங் அண்ட் பாரா மெடிக்கல்ஸ்'' என்ற கல்லூரியில், கே.சிறீலதா என்ற மாணவி முடக்குவாதம் நீக்கவியல் இளங்கலைப் பட்டப்படிப்பை முடித்தார். படிப்பை முடித்தபின் இவருக்குத் தர வேண்டிய மாற்றுச்சான்றிதழ், நன்னடத்தைச் சான்றிதழ்களுக்காக, ஒரு லட்ச ரூபாய் தர வேண்டும் எனக் கல்லூரி நிர்வாகம் பேரம் பேசியது.

இந்த அடாவடித்தனத்தை எதிர்த்து, சிறீலதா நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். நீதிமன்றம் அம்மாணவிக்கு உரிய சான்றிதழ்களை உடனே வழங்க வேண்டும் என உத்தரவு போட, அக்கல்லூரி நிர்வாகமோ, நன்னடத்தைச் சான்றிதழில் "நடத்தை மோசம்'' எனக் குறிப்பிட்டு, அம்மாணவியைப் பழிவாங்கியது.

இப்படி மாணவர்களின் எதிர்காலத்தைப் பணயம் வைத்து, அவர்களிடமிருந்து சட்டவிரோதமாகக் கொள்ளையடித்து வரும் எந்தவொரு தனியார் கல்லூரியின் அங்கீகாரமும் ரத்து செய்யப்படவில்லை என்பது ஒருபுறமிருக்க, அங்கீகாரமே பெறாத பல மோசடிக் கல்லூரிகள் கல்வி வியாபாரம் நடத்தி வந்த விவகாரம் தற்பொழுது அம்பலமாகி இருக்கிறது.

கடையநல்லூரில் உள்ள பாத்திமா காலேஜ் ஆஃப் பார்மசி மற்றும் திருநெல்வேலியில் உள்ள பேர்ல் பீஸ் மெடிகல் மிஷன் காலேஜ் ஆஃப் பார்மசி – ஆகிய இரு கல்லூரிகளும், எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டதை சமீபத்தில் சென்னை உயர்


படிப்பகம்

www.padippakam.com

நீதிமன்றம் ரத்து செய்துவிட்டது; மேலும், இவ்விரு கல்லூரிகளிலும் படித்து வரும் மாணவர்கள் வேறு மருந்தாளுநர் கல்லூரிகளுக்கு மாற்றப்பட வேண்டும்; மாணவர்களிடமிருந்து வசூலித்த கல்விக் கட்டணத்தை கல்லூரி நிர்வாகங்கள் திருப்பித் தர வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது. இந்த இரண்டு கல்லூரிகளும் இந்திய பார்மஸி கவுன்சிலின் ஒப்புதலைப் பெறாமலேயே கல்வி வியாபாரத்தை நடத்தி வந்ததால், சென்னை உயர்நீதி மன்றத்தின் உத்தரவுப்படி இன்று இவ்விரு கல்லூரிகளும் மூடப்பட்டு விட்டன.

இந்த இரண்டு கல்லூரிகள் மட்டுமல்லாது, தமிழகத்திலுள்ள பத்து மருந்தாளுநர் கல்லூரிகள், இந்திய பார்மஸி கவுன்சிலின் ஒப்புதலைப் பெறாமலேயே நடந்து வருவதால், அக்கல்லூரிகளுக்கு விளக்கம் கேட்டு நோட்டீசு அனுப்பியிருக்கிறது, சென்னை உயர்நீதி மன்றம்.

இந்தக் கல்லூரிகளுக்கு இந்திய பார்மஸி கவுன்சிலின் அங்கீகாரம் இல்லை என்று தெரிந்த பின்னரும், எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் இக்கல்லூரிகளுக்கு இணைப்பு வழங்கியிருக்கிறது. மருத்துவத் துறையின் கீழ் இயங்கும் மருத்துவப் படிப்புத் தேர்வுக் கமிட்டியும், ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களைத் தேர்வு செய்து இம்மோசடிக் கல்லூரிகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. இந்த மோசடிக் கல்லூரிகள் அனைத்தும் மருத்துவப் பல்கலைக் கழகத்தின் இணைப்பையும், மருத்துவப் படிப்பு தேர்வுக் கமிட்டியின் அங்கீகாரத்தையும் காட்டிதான் மாணவர்களை ஏய்த்து வந்தன.



**இந்திய பார்மசி கவுன்சிலின் அங்கீகாரம் பெறாமல், மோசடித் தனமான முறையில் நடத்தப்படும் சென்னையில் உள்ள கே.கே. பார்மசி கல்லூரி நிர்வாகத்தை அம்பலப்படுத்தி, ஏமாற்றப்பட்ட அக்கல்லூரி மாணவிகள் நடத்திய ஆர்ப்பாட்டம்.**

கடையநல்லூர் பாத்திமா பார்மஸி கல்லூரியைச் சேர்ந்த செந்தில் என்ற மாணவர், ''மருத்துவத்துறை இயக்குநரகம் மூலமாக கவர்மெண்ட் கோட்டாவிலதான் இந்த காலேஜ்ல சேர்ந்தேன். அப்ப பார்மஸி கவுன்சில் பத்தியெல்லாம் தெரியாது. தெரிஞ்சு கேட்டப்ப கல்லூரி நிர்வாகம் எங்களை மிரட்டியது'' என்கிறார்.

கல்லூரி நிர்வாகத்தால் மிரட்டப்பட்ட மாணவர்கள் மருத்துவத்துறை இயக்குநரைச் சந்தித்த பொழுது, ''நீங்கள் மருத்துவப் பல்கலைக் கழகத்தைதான் கேட்க வேண்டும்'' எனக் கையை விரித்து விட்டார், அவர். எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், ''ஹால் டிக்கெட் கொடுக்கிறதும், எக்ஸாம் நடத்துறதும் தான் எங்க வேலை'' என அதிகார வர்க்கத்துக்கே உரிய பொறுப்பின்மையோடும், திமிரோடும் பதில் கூறி, பாதிக்கப்பட்ட மாணவர்களைத் துரத்தியடித்தார்.

கல்லூரி நிர்வாகம், மருத்துவத் துறை இயக்குநரகம், மருத்துவப் பல்கலைக் கழகம் ஆகியவற்றால் மாறிமாறி பந்தாடப்பட்ட மாணவர்களுக்கு நீதிமன்றம் கூட நீதி வழங்கிடவில்லை. தனியார் கல்லூரி முதலாளிகளும், அதிகார வர்க்கமும் கூட்டுச் சேர்ந்து நடத்திய மோசடி இது. ஆனால், இதற்காக யாரும் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படவில்லை. மாறாக, பாதிக்கப்பட்ட மாணவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்திய பார்மஸி கவுன்சிலின் அங்கீகாரம் பெறாத கல்லூரிகளை மூடச் சொன்ன உயர்நீதி மன்றம், அக்கல்லூரிகளில் நான்கு ஆண்டுகள் படித்து, பட்டப் படிப்பை முடித்துச் சென்றுவிட்ட மாணவர்கள், அங்கீகாரம் பெற்ற கல்லூரிகளில் சேர்ந்து மீண்டும் நான்காம் ஆண்டு படிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. மோசடி செய்ததோ அவர்கள். ஆனால், உயர்நீதி மன்றமோ, படிப்பை முடித்த மாணவர்கள் வாங்கிய பட்டத்தைச் செல்லாது என அறிவிக்கிறது. இது என்ன வகை நீதி?

மாணவர்கள் இந்த மோசடிக் கல்லூரிகளில் செலுத்திய கட்டணங்களுக்கான ரசீதைக் காட்டி, கட்டிய பணத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் எனக்

# வியாபாரமயமாகும் சட்டக் கல்வி

அரசு கலை – அறிவியல் கல்லூரிகளைப் பல்கலைக் கழகத்துடன் இணைத்து, அக்கல்லூரிகளைச் சந்தைக் கடையாக மாற்றி விட்ட தமிழக அரசு, சட்டப் படிப்பிலும் வியாபாரத்தைப் புகுத்தி விட்டது. ஏற்கனவே நடைமுறையில் இருந்துவரும் சட்டப் படிப்பிற்கு, ''ஹானர்ஸ்'' என்று புதிய பெயரைக் கொடுத்து விட்டு, இந்த கல்வியாண்டு முதல் வியாபாரத்தைத் துவங்கியும் விட்டது.

அப்படியென்ன இந்த ''ஹானர்ஸ்'' சட்டக் கல்வியில் சிறப்பு இருக்கிறதெனப் பார்த்தால், புதிய மொந்தை பழைய கள்ளு என்ற கதைதான். ஒரு சில கூடுதல் பாடங்களைக் கழித்து விட்டுப் பார்த்தால், அதே பழைய பாடத் திட்டம்; அதே பழைய ஆசிரியர்கள் தான் பாடமெடுக்கிறார்கள். வேறுபாடு எனப் பார்த்தால், அது கல்விக் கட்டணத்திலும், சட்டப் படிப்பின் பெயரிலும் தான்! ஏற்கனவே இருந்து வரும் சட்டப்படிப்பிற்கு கல்விக் கட்டணம் வருடமொன்றுக்கு ஆயிரம்தான்! புதிய ''ஹானர்ஸ்'' சட்டப் படிப்பிற்கோ, கல்விக் கட்டணம் வருடமொன்றுக்கு 37,000 ரூபாய்.

புதிய ''ஹானர்ஸ்'' சட்டக் கல்வி, இந்த ஆண்டு முதல் சென்னை சட்டக் கல்லூரியில் செயல்படத் துவங்கிவிட்டது. இதற்காக சென்னை சட்டக் கல்லூரியில் நடைபெற்று வரும் ஐந்தாண்டு மற்றும் மூன்றாண்டு (பழைய) சட்டக் கல்வியை இழுத்து மூடிவிட்டது, தமிழக அரசு. அடுத்தடுத்த ஆண்டுகளில் தமிழகத்திலுள்ள பிற அரசு சட்டக் கல்லூரிகளிலும், இந்த வியாபாரத்தைப் புகுத்த முடிவு எடுக்கப்பட்டு விட்டது.

இந்த சமூக அநீதிக்கும், கொள்ளைக்கும் எதிராக, சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள், ''ஐந்தாண்டு, மூன்றாண்டு சட்டக் கல்வியை நிறுத்தாதே! ஏழைகளும் நீதி, நிர்வாகத்தில் பங்கெடுத்துக் கொள்ள அளிக்கப்பட்ட வாய்ப்பைப் பறிக்காதே!'' என்ற கோரிக்கைகளை முன் வைத்து உள்ளிருப்பு போராட்டத்தை நடத்தி வருகின்றனர். இதனால் ஆத்திரமடைந்த கல்லூரி நிர்வாகம், ஏழு மாணவர்களைக் கைது செய்து சிறைக்குள் தள்ளிவிட்டு, மாணவர்களைக் கைது செய்து சிறைக்குள் தள்ளிவிட்டது.

சென்னை சட்டக் கல்லூரிக்குள் புகுந்த வியாபாரம், பிற சட்டக் கல்லூரிகளுக்கும் பரவும் முன், இந்தப் புற்று நோயை ஒழித்துக் கட்ட வேண்டும். அதற்கு, சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் நடத்திவரும் போராட்டத்திற்கு அனைத்துத் தரப்பு மக்களும் ஆதரவு தர வேண்டும்

*மாணவர் குழு, சென்னை சட்டக் கல்லூரி.*


படிப்பகம்

www.padippakam.com

'கருணை' காட்டுகிறது உயர்நீதி மன்றம். ஆனால், தனியார் கல்லூரிகள் மாணவர் களிடமிருந்து பிடுங்கும் பல்வேறு கட்டாய நன்கொடைகளுக்கு ரசீது தருவ தேயில்லை என்பது ஊரறிந்த உண்மையாய் இருக்கும் பொழுது, உயர் நீதி மன்றம் தலையை மண்ணுக்குள் புதைத்துக் கொண்டு தீர்ப்பை வழங்கியி ருக்கிறது.

''கல்வியில் தனியார் நுழைவதால், அதன் தரம் உயரும்'' என்று கூறித்தான் கல்வி வியாபாரமாவதை நியாயப்படுத் துகிறார்கள். ஆனால், நடப்பதோ ஏருக்கு மாறாக இருக்கிறது. தனியார் கல்லூரி களில் கொடுக்கப்படும் கல்வியின் தரத்தைப் பற்றிக் கவலைப்படாத ஜெயா அரசு, தனியார் கல்லூரிகளில் இடங்கள் காலியாகக் கிடக்கிறதே எனக் கவலைப் படுகிறது. தமிழகத்தில் பொறியியல் கல்லூரிகள் நடத்தும் தனியார் முதலாளி களின் கஜானா நிரம்ப வேண்டும் என்ப தற்காகவே, பொறியியல் படிப்பிற்கான குறைந்தபட்ச மதிப்பெண்ணைக் குறைத்தார், ஜெயா. இப்படி எல்லா விதத் திலும் அரசு, கல்லூரி முதலாளிகளுக்கு அனுசரணையாக நடந்து கொள்ளு வதால், அவர்கள் மாணவர்களைக் கொத்தடிமைகளைப் போல் நடத்துகி றார்கள்.

சேலத்திலுள்ள வைஸ்யா கல்லூ ரியின் தாளாளர் ராஜேந்திர பிரசாத் சர்வ சாதாரணமாக, ''ஒரு அப்பனுக்குப் பொறந்தவனா நீ'' எனக் கீழ்த்தரமாக மாணவர்களைத் திட்டுவாராம். அக்கல் லூரியின் வகுப்பறைகளில் இரகசிய கேம ராக்களை வைத்து மாணவர்களைக் கண்காணிப்பதை எதிர்த்து மாணவர்கள் போராடிய பொழுது, பிரபாகரன், கலீல்




என்ற இரு மாணவர்களை ராஜேந்திர பிரசாத் குதிரைச் சவுக்கால் அடித்திருக் கிறார். சவுக்கடிபட்ட மாணவர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில், ராஜேந்திர பிரசாத் மீது நான்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஒரு பல்கலைக்கழகம் அளவிற்கு பொறியியல் கல்லூரி, பல் மருத்துவக் கல்லூரி எனப் பல தரப்பட்ட கல்லூரி களை நடத்திவரும் புதிய நீதிக்கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம், ''நம்ம மாண வர்கள் உட்காருன்னா உட்காரணும். மாணவிகள் படுன்னா படுக்கணும்'' என்று கல்லூரி நிர்வாகிகள் கூட்டத்தில் வெளிப்படையாகவே பேசியிருக்கிறார். ஏ.சி.சண்முகம் மற்றும் அவரது நண்பர் களால், 24 மாணவிகள் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளானதாகக் கூறப்படு கிறது. இவரது கல்லூரிகளின் மேல் எட்டு கிரிமினல் வழக்குகள் பதிவாகி யுள்ளன.

காஞ்சி சங்கர மடம் நடத்தும் சந்திர சேகர சரசுவதி சுவாமிகள் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில், மாணவர்கள் சாதி வாரியாகப் பிரிக்கப்பட்டு, ''பார்ப்பன மாணவர்களுக்குத் தனி விடுதி; சூத்திர சாதி மாணவர்களுக்குத் தனி விடுதி; பார்ப்பன சாதி மாணவர்களை விட, பார்ப்பனர் அல்லாத மாணவர்களுக்கு அதிகக் கட்டணம்'' எனத் தீண்டாமை வெளிப்படையாகவே கடைப்பிடிக்கப் படுகிறது.

இந்த அத்து மீறல்களையெல்லாம் பூசி மெழுகுவதற்கு தனியார் கல்லூரி முத லாளிகள் சொல்லும் ஒரே பதில், ''மாண வர்களிடம் ஒழுக்கத்தையும், கட்டுப்பாட் டையும் கொண்டு வருகிறோம்'' என்ப துதான். சாத்தான் வேதம் ஓதலாம் என்றால், தனியார் கல்லூரி முதலாளி களும் ஒழுக்கத்தைப் பற்றிப் பேசலாம்.

சிறுபான்மையினர் நடத்தும் கல்வி நிறுவனங்கள் தொடர்பாக உச்சநீதி மன்றம் சமீபத்தில் அளித்துள்ள தீர்ப்பில், ''தனியார் கல்லூரிகள் தங்கள் விருப்பப் படி கல்விக் கட்டணத்தை நிர்ணயித்துக் கொள்ளலாம்; கட்டணத்தை நிர்ணயிப்ப தில் அரசு தலையிட முடியாது'' எனக் கூறிவிட்டது. உயர்கல்வித் துறை, ஒவ்வொரு கல்லூரியையும் தன்னாட்சி பெற்ற கல்லூரியாகவும், நிகர்நிலைப் பல்கலைக்கழகமாகவும் மாற்றத் தீவிர மாக முயலுகிறது. இந்த நடவடிக்கைகள் அனைத்தும் தனியார் கல்லூரி முதலா ளிகள் சட்ட விரோதமாக அடிக்கும் கட்டணக் கொள்ளை, நடத்தும் மோச டிகள், அத்துமீறல்களைச் சட்டபூர்வமான தாக ஆக்கும் நடவடிக்கைகள் தவிர வேறில்லை.

● செல்வம்

## காங்கிரசுடன் கூட்டணி : போலி கம்யூனிஸ்டுகளின் புதிய ஏற்பாடு

**சென்னை காமராசர் அரங்கில் 21.11.02 அன்று மாலை ''மக்கள் ஒற்றுமை மாநாடு'' என்ற பெயரில் இடது, வலது போலி கம்யூனிஸ்டு கட்சிகள் ஒரு அரங்கக் கூட்டத்தை நடத்தின.**

**இக்கூட்டத்திற்குத் தலைமையேற்ற வலது கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலச் செயலாளர் நல்லக்கண்ணு, மதச்சார்பின்மை – மக்கள் ஒற்றுமை – அதிலே காங்கிரசையும் இணைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் பற்றி விளக்கினார்.**

**அடுத்து சிலர் பேசிய பிறகு, வலதுகளின் தேசியக் குழு உறுப்பினரான தா.பாண்டியன் எழுந்தார். ''பல இடையூறு களைத் தாண்டி இந்துமதம் கம்பீரமாக நிற்கிறது. மொகலாயர்கள் ஆட்சி புரியும்போது அழியாத இந்து மதம், ஏதோ சில பாதிரி யார்கள் பால் பவுடரும் ரொட்டியும் கொடுப்பதால் அழிந்து விடாது. எனவே அம்மா அவர்கள் மதமாற்றத்தைச் சட்டம் போட்டுத் தடுக்க வேண்டிய அவசியமே இல்லை'' என்று பேசி பலரையும் வியப்படையச் செய்தார். இந்து முன்னணியின் இராம.கோபாலன் மட்டும் அங்கு இருந்திருந்தால் தா.பாண்டி யனைக் கட்டியணைத்துக் கொண்டு தனது அமைப்பின் கொள்கை பரப்புச் செயலாளராக்கியிருப்பார்!**

**அடுத்து பேசிய காங்கிரசின் பீட்டர் அல்போன்ஸ், ''வகுப்பு வாத சக்திகளை எதிர்கொள்வதில் கம்யூனிஸ்டுகளுடன் என்றும் தோள் கொடுப்போம்'' என்று உறுதியளித்து விட்டு, பேருந்து தனியார் மயத்தை எதிர்த்துப் போராடுமாறு சி.ஐ.டி.யு.வுக்கு உபதேசித்தார்.**

**அடுத்துப் பேசிய சி.பி.எம்.-இன் சங்கரய்யா, ''காங்கிர சோடு எங்களுக்கு பொருளாதாரக் கொள்கைகளில் மாறுபாடு உண்டு; ஆனால், வகுப்புவாதத்தை எதிர்ப்பதில் எப்போதும் இணைந்து நிற்போம்'' என்றார். ''சி.பி.எம். கட்சியில் யாராவது சாதி – மதவெறிக்குத் துணைபோகிறவர்களாக இருந்தால் அவர் களை மக்கள் முன் நாங்களே தோலுரிப்போம்'' என்றார்; தாங்கள் பார்ப்பன பாசிச ஜெயா கும்பலுடன் கூட்டுச் சேர்ந்து ஒட்டுப் பொறுக்கியதை மறந்து விட்டு!**

**இந்தக் கூட்டத்தில் பேசிய எவருமே பார்ப்பன இந்து மத வெறி, இந்துமதவெறி பாசிசம் என்று ஞாபக மறதியாகக் கூட குறிப்பிடவில்லை. பொதுவில் வகுப்பு வாதம் என்றே குறிப்பிட்டனர்.**

***தகவல்: கபிலன் சேவியர், பு.ஜ.தொ.மு. சென்னை.***


படிப்பகம்

www.padippakam.com

## சீனா :

# போலி சோசலிச வேடமும் கலைந்தது

முதலாளி ஒருவர், நானும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்தான் என்றால் அதை எந்தத் தொழிலாளி யாவது ஏற்பாரா? முதலாளிகள், கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் அட்டையுடன் திரண்டு வந்து கட்சி மாநாட்டில் பங்கேற்று, கட்சித் தேர்தலில் வாக்களித்தார்கள் என்றால் அதை நம்ப முடியுமா? இருப்பினும் இது உண்மை. அண்மையில் சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் 16–வது தேசிய மாநாட்டில்தான் இந்த அதிசயக் கேலிக்கூத்து நடந்துள்ளது.

கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் அட்டையுடன் ''கோட்டு – சூட்டு'' போட்ட புதிய வகை முதலாளிகள் இம்மாநாட்டுக்கு கார்களில் வந்திறங்கியதைப் பார்த்து, பிறநாடுகளின் செய்திப் பத்திரிகைகள் ஆச்சரியத்துடன் செய்திகளை வெளியிட்டன. உலக அதிசயங்களுள் ஒன்றான சீனப் பெருஞ்சுவரை விட, அந்நாட்டு கம்யூனிஸ்டு கட்சி முதலாளிகளின் கட்சியாக வெளிப்படையாகவே மாறியிருப்பது, அதைவிட பெரிய அதிசயம் என்று செய்திக் கட்டுரைகளையும் கேலிச்சித்திரங்களையும் முதலாளித்துவ பத்திரிகைகள் வெளியிட்டு வருகின்றன.

சீனாவில் தோழர் மாவோவின் மறைவுக்குப் பிறகு கட்சியையும் ஆட்சியையும் உள்ளிருந்தே கைப்பற்றிய டெங் சியாவோபிங் தலைமையிலான முதலாளித்துவப் பாதையாளர்கள் ''சந்தை சோசலிசம்'', ''உற்பத்தியைப் பெருக்குவது'' என்ற பெயரில் படிப்படியாக முதலாளித்துவத்தை நிலைநாட்டினர். சீனாவின் சோசலிசக் கூட்டுப் பண்ணைகள் தகர்க்கப்பட்டு தனியுடைமை சட்டபூர்வமாக்கப்பட்டது. அன்னிய ஏகபோக நிறுவனங்களின் பகற்கொள்ளைக்கு கதவுகள் அகலமாகத் திறந்துவிடப்பட்டன. தடை செய்யப்பட்ட முன்னாள் தேசிய முதலாளித்துவக் கட்சிகள் மீண்டும் தடையின்றி சுதந்திரமாகச் செயல்பட அங்கீகரிக்கப்பட்டது. அன்னிய நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ள புதியவகை தரகு முதலாளிகளும், உள்நாட்டு தனியார் முதலாளிகளும் உருவாகி, முதலாளித்துவ சக்திகள் ஆட்சியதிகாரத்தில் பங்கு கேட்குமளவுக்கு இன்று வளர்ந்து விட்டன. மறுபுறம் தொழிலாளர்களும் விவசாயிகளும் வேலையின்மை - வறுமையில் சிக்கிப் பரிதவிக்கின்றனர்.

தற்போதைய அதிகார வர்க்க முதலாளித்துவத்துக்கு பதிலாக, தனியார் முதலாளித்துவத்தை நிலைநாட்ட முதலாளித்துவ சக்திகள் வெளிப்படையாகவே ஆட்சி கவிழ்ப்பு நடவடிக்கையில் இறங்குவதற்கு முன்பாக, அதனுடன் சமரசம் செய்து கொண்டு படிப்படியாக அதிகாரத்தை தனியார் முதலாளித்துவ வர்க்கத்திடம் அளிக்கும் உத்தியோடு, டெங்கின் சீடரும் நேற்றுவரை சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் பொதுச் செயலாளருமாக இருந்த ஜியாங் ஜெமின் மூன்று கோட்பாடுகளை முன்வைத்தார். உற்பத்தி சக்திகளில் முன்னேறிய பிரிவினரையும் (அதாவது, முதலாளிகளையும்), முன்னேறிய கலாச்சாரத்தையும் (ஏகாதிபத்திய கலாச்சாரத்தையும்), பரந்து பட்ட மக்கள் நலனையும் சீனக் கம்யூனிஸ்டு கட்சி பிரதிநிதித்துவப் படுத்தும் என்பதுதான் அந்த மூன்று கோட்பாடுகள். இதனடிப்படையில் கட்சித் திட்டமும் அமைப்பு விதிகளும் மாற்றப்பட்டு, புதியவகை தரகு முதலாளிகளும் சிறு முதலாளிகளும் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர், இந்த திசையில் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறும் வகையில்தான் நவம்பர் 8–ஆம் தேதி முதலாக ஏறத்தாழ ஒருவார காலத்திற்கு சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் 16 –வது மாநாடு நடந்து முடிந்துள்ளது. 1949–இல் நடந்த சீனப் புரட்சிக்குப் பிறகு வந்த புதிய தலைமுறையைச் சேர்ந்த ஹூ ஜிண்டோ, கட்சியின் புதிய செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். புரட்சியில் பங்கேற்ற பழைய தலைமுறையைச் சேர்ந்த 70 வயதுக்கும் மேலானவர்கள் கழித்துக்கட்டப்பட்டுள்ளனர்.

சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் மாநாடு, அந்நாட்டு தொழிலாளர்கள், விவசாயிகளிடம் எவ்வித நம்பிக்கையையும் ஏற்படுத்தாத அதேநேரத்தில், கட்சி உறுப்பினர்களாகியுள்ள புதியவகை முதலாளிகளிடம் நம்பிக்கையையும் பேருற்சாகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ''முதலாளித்துவம் மக்களுக்கு எதிரானதல்ல; அது மோசமானதுமல்ல'' என்கிறார் 'கம்யூனிஸ்டு' முதலாளி, ஷென் வென்ராங். ஏறத்தாழ ரூ.750 கோடிக்கு அதிபதியாகியுள்ள இவர், சீனாவின் பெருமுதலாளிகள் பட்டியலில் 37–வது இடத்தை வகிக்கிறார். ''ஜியாங்ஷூ தூரக்கிழக்கு குழுமம்'' எனும் வர்த்தக நிறுவனத்தின் அதிபரான ஷி பெய் என்ற 'கம்யூனிஸ்டு' முதலாளி, ''நாங்கள் சட்டபூர்வமான வழிகளில்தான் முதலாளிகளாக வளர்ந்துள்ளோம். எங்களிடம் மூலதனம் திரளுகிறது என்றால் நாங்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் பல நன்மைகளைச் செய்கிறோம் என்று பொருளாகும்'' என்று வியாக்கியானம் செய்கிறார்.

கம்யூனிஸ்டு கட்சியில் முதலாளிகள் உறுப்பினராக முடியுமா? அப்படி உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டால் அது கம்யூனிஸ்டு கட்சி தானா? என்று நீங்கள் சந்தேகப்படலாம். ''அப்படியெல்லாம் வீணாகச் சந்தகப்பட வேண்டாம். சீனக் கம்யூனிஸ்டு கட்சியில், உறுப்பினர் விதிகளில் சிறிய மாற்றம் செய்து, நாட்டு நலனில் அக்கறை கொண்ட முதலாளிகளையும்

**பதவிலிருந்து கழற்றிவிடப்பட்ட சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் செயலாளர் ஜியாங் ஜெமினுடன் இன்றைய புதிய செயலாளர் ஹூ ஜிண்டோ: கழுதைக்குப் பதிலாக ஓநாய்.**



www.padippakam.com

கட்சியில் சேர்த்துள்ளனர். மற்றபடி, அது இன்னமும் கம்யூனிஸ்டு கட்சிதான்!'' என்று அடித்துக் கூறுகிறார், சி.பி.எம். கட்சியின் சித்தாந்த குருவாகிய சீத்தாராம் எச்சூரி. ஏனெனில், ''சீனக் கம்யூனிஸ்டு கட்சி மார்க்சிய – லெனினியத்தை தனது வழிகாட்டும் தத்துவமாக இன்னமும் ஏற்றுக் கொண்டிருக்கிறது பாருங்கள்'' என்கிறார்.

மார்க்சிய – லெனினியமும் அதற்கு நேரெதிரான டெங்சியாவோ பிங்கின் கோட்பாடும்தான் எமது வழிகாட்டும் தத்துவம் என்கின்றனர் சீனாவின் முதலாளித்துவப் பாதையாளர்கள். ஆனாலும் ''அதிலே மார்க்சிய – லெனினியம் என்ற வார்த்தை இருக்கிறது பாருங்கள்; எனவே அது கம்யூனிஸ்டு கட்சிதான்'' என்று சான்றிதழ் கொடுக்கிறார் எச்சூரி.

இன்னும் ஒருபடி மேலேபோய், ''முதலாளிகள் மற்றும் செல்வந்த குடும்பங்களிலிருந்து வந்தவர்களைக்கூட கம்யூனிஸ்டு கட்சியில் ஏற்று அவர்களைத் தலைமைக்கு உயர்த்தியதற்கு கடந்த காலச்சான்றுகள் உள்ளன. சீனாவின் முன்னாள் பிரதமரான சௌ என்லாய் கூட செல்வந்தக் குடும்பத்தில் பிறந்தவர்தான். அவர் சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் முக்கிய தலைவராக உயர்ந்தார். இந்தியாவில் கூட அன்றைய கம்யூனிஸ்டு கட்சியில் செல்வந்த குடும்பங்களிலிருந்து வந்த சக்லத்வாலா, ஆச்சார்யா போன்றோர் தலைவர்களாக இருந்துள்ளனர்'' என்கிறார். அதன் மூலம் கம்யூனிஸ்டு கட்சியில் முதலாளிகளை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்வதும், அவர்கள் தலைவர்களாக இருப்பதும் தவறே இல்லை என்று தனது வர்க்க சமரசக் கொள்கையை நியாயப் படுத்துகிறார்.

தனது சொத்து – சுகங்களைத் தூக்கியெறிந்து விட்டு தொழிலாளர்கள் – விவசாயிகளுடன் இணைந்து நின்று போராடிய, சீனப் புரட்சியின் தலைவர்களுள் ஒருவரான தோழர் சௌ என்லாயையும், இன்று சொத்து சுகங்களோடு நாட்டையும் மக்களையும் சூறையாடும் சீனாவின் புதியவகை 'கம்யூனிஸ்டு' முதலாளிகளையும் வெட்கமின்றி கீழ்த்தரமான முறையில் ஒப்பீடு செய்யுமளவுக்கு எச்சூரி தரம்தாழ்ந்து கிடக்கிறார். அந்த அளவுக்கு வர்க்க சமரச சித்தாந்தம் அவரிடம் புரையோடிக் கிடக்கிறது. எச்சூரியின் குருவாகிய சி.பி.எம். கட்சியின் பொதுச் செயலாளரான சுர்ஜித், ''சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் கொள்கையிலோ, சித்தாந்தத்திலோ அப்படியொன்றும் பெரிய மாற்றம் ஏற்பட்டு விடவில்லை'' என்று சீனாவின் முதலாளித்துவப் பாதையை நியாயப்படுத்துகிறார். சி.பி.எம். கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினரான கொடியேறி பால கிருஷ்ணன், ''இன்று சீனா சோசலிசத்தை நோக்கி விரைவாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. சோசலிச வளர்ச்சியில் முதலாளிகளின் பங்கை குறைத்து மதிப்பிட்டு விடக் கூடாது. இன்றைய உலகமய மாக்கல் கொள்கையின் கீழ், உள்நாட்டு முதலாளிகளின் பங்கும் சேவையும் முக்கியத்துவம் வாய்ந்தது. அவர்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் முடிவுகள் அமைந்துள்ளன'' என்று சீரழிவுக்குச் சித்தாந்த விளக்கம் அளிக்கிறார்.

வலது கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களுள் ஒருவரான தா.பாண்டியன் இன்னுமொரு புதிய சூத்திரத்தை கூறுகிறார். ஆட்சியதிகாரத்தில் கம்யூனிஸ்டுகள் இருந்தால் அது சோசலிச நாடு; அங்கே முதலாளிகளின் லாபம் மக்கள் நலனுக்காக செலவிடப்பட்டு நாடு முன்னேறும்; கம்யூனிஸ்டுகள் ஆட்சியதிகாரத்தில் இல்லாத நாடுகளில் வறுமையும் வேலையின்மையும் சீரழிவும் பெருகும் என்று கூறி, கம்யூனிஸ்டுகளின் தலைமையில் சீனா சோசலிசப் பாதையில் முன்னேறுவதாக ''ஜனசக்தி''யில், பில்கேட்ஸ் இந்தியாவுக்கு வருகை தந்ததையொட்டி எழுதிய கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

சீனக் கம்யூனிஸ்டு கட்சியிலும் சீனச் சமுதாயத்திலும் வெளிப்படையாகவே முதலாளித்துவப் பாதைக்கான மாற்றங்கள் நிகழ்ந்துள்ள போதிலும், அவையெல்லாம் ''சோசலிச வளர்ச்சிக் கட்டத்தின் இன்னொரு முன்னேற்றம்'', ''உற்பத்தி சக்திகளின் விரைவான வளர்ச்சிக்காக செய்யப்படும் சோதனை முயற்சி'', ''சோசலிசத்தின் வேறுபட்ட வடிவம்'' என்றெல்லாம் சொல்லி இந்தியப் போலி கம்யூனிஸ்டுகள் நியாயப்படுத்தக் கிளம்பி விட்டார்கள். முதலாளித்துவப் பாதையாளர்களான சீனாவின் புதிய தலைமைக்கும் துதிபாட புறப்பட்டு விட்டார்கள்.

சீனாவின் கம்யூனிசத் துரோகிகளின் வழியில் இப்போலி கம்யூனிஸ்டுகள் நாளை டாடா, பிர்லா, அம்பானி, பொள்ளாச்சி மகாலிங்கம் முதலானோரை தமது கட்சியில் சேர்த்துக் கொண்டு, ''தோழர் டாடா''வை கட்சித் தலைவராக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்தப் போலி கம்யூனிஸ்டுகளின் மோசடி – பித்தலாட்டங்களை உழைக்கும் மக்களும் வர்க்க உணர்வுள்ள புரட்சிகர அணிகளும் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும். அதன் மூலம் மார்க்சிய – லெனினியத்தைப் பற்றிப் பாதுகாக்கும் மகத்தான பணிக்குத் தோள் கொடுக்க வேண்டும்.

● குமார்



## தோழர் பொம்மன் அவர்களுக்கு சிவப்பஞ்சலி!

முப்பது ஆண்டு காலம் முன்னணி புரட்சிப் போராளியாய்த் திகழ்ந்த துறையூர் வட்டார விவசாயிகள் விடுதலை முன்னணியின் அமைப்பாளரான, காளிப்பட்டி தோழர் பி.பொம்மன் அவர்கள், கடந்த நவம்பர் மாதம் 25 -ஆம் தேதி மரணம் அடைந்தார். இளைஞராக இருந்தபோது திராவிட இயக்கத்தின் மொழிப்போரில் ஈடுபட்ட தோழர் பொம்மன், பின்னர் கம்யூனிச இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு, நக்சல்பாரி இயக்கம் தோன்றிய பிறகு அதனுடன் தன்னை இணைத்துக் கொண்டார்.

சாதியத்தை மறுத்து, தாழ்த்தப்பட்ட மக்களுடன் அய்க்கியப்பட்டிருந்த தோழர் பொம்மன், அடக்குமுறைகள் - எதிர்ப்புகளுக்கு அஞ்சாது, தானே பறையடித்து, சொற்ப கல்வியறிவைக் கொண்டு தானே சுவரொட்டி தயாரித்து, கிராமக் கூட்டங்கள் பலவற்றை நடத்தினார். இரவில் விவசாய வேலை, பகலில் புரட்சிப் பணி என்று அயராது, தளராது உழைத்தார்.

கட்சித் தோழர்களை தனது குடும்பத்தினர்களாகப் பாவித்து உதவிகள் பல செய்த தோழர் பொம்மன், தனது குடும்பத்தையே அரசியலுக்குப் பயிற்றுவிக்கவும் தவறவில்லை. காசநோய், ஆஸ்துமா போன்ற நோய்கள் தாக்கியபோது தளராமல் புரட்சிப் பணியாற்றிய தோழரை இறுதியில் நோய்களும் இறப்புமே ஓய்வுகொள்ளச் செய்தது. தோழரின் விருப்பப்படியே சாதி - மதச் சடங்குகள் இல்லாமல் கம்யூனிச முறைப்படி, தோழர் காளியப்பன் (ம.க.இ.க.) தலைமையில் இரங்கற் கூட்டம் நடத்தி நல்லடக்கம் செய்யப்பட்டார். இறுதியாக, தோழர் பொம்மனுக்கு சிவப்பஞ்சலி செலுத்தியத் தோழர்கள், அவர் காட்டிய உறுதியையும் நேர்மையையும் பற்றி நின்று புரட்சியை முன்னெடுப்பதாக உறுதியேற்றனர்.

**தோழர் பொம்மனுக்கு எமது வீரவணக்கம்!**


படிப்பகம்

www.padippakam.com




## மே.வங்கத்தில் நடப்பது என்ன வகையான ஆட்சி?

சிறுபான்மை முசுலிம்களை 'தீவிரவாதிகள்,' 'பயங்கரவாதிகள்' என்று குற்றம் சாட்டி இந்துவெறி பாசிச ஆட்சியாளர்கள் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர் என்றால், அதற்குப் போட்டியாகமே. வங்க போலிகம்யூனிச ஆட்சியாளர்களும் 'பயங்கரவாத ஒழிப்பு' வேட்டையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். போலி கம்யூனிஸ்டு ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை புரட்சிகர இயக்கத்தினர்தாம் பயங்கரவாதிகள்!

உலகமேலாதிக்கப் போர்வெறியனும் முன்னாள் அமெரிக்க அதிபருமான பில்கிளின்டன் இந்தியாவுக்கு வருகை தந்தபோது, அதை எதிர்த்து ''கிளின்டனே, திரும்பிப்போ!'' என்ற முழக்கத்துடன் பிரசுரம் வினியோகித்த இரு இளம் பெண்களைக் கைது செய்து, அவர்கள் அரசைக் கவிழ்க்க சதி செய்ததாகக் குற்றம் சாட்டி சிறையிலடைத்து வதைத்தது, மே.வங்க 'இடதுசாரி' அரசு. பிதுபூஷன் மாஹ்டோ எனும் 77 வயதான முதியவர், கையிலே ''கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை'' எனும் நூலை வைத்திருந்ததால், அவர்மீது 'ராஜதுரோக' வழக்கு சோடிக்கப்பட்டு சிறையிடப்பட்டார். இப்போது புரட்சிகர இயக்கத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களைக்கூட 'பயங்கரவாதிகள்' என்று குற்றம் சாட்டி சிறையிலடைத்து வதைத்து வருகிறது, மே.வங்க 'இடதுசாரி' அரசு.

ஷம்பா தாஸ்குப்தா என்பவர், குருதாஸ் கல்லூரியில் அரசியல் விஞ்ஞானம் பயிலும் மாணவி. படிப்பிலே முன்னணி வகிக்கும் மாணவிகளுள் ஒருவர் என்று கல்லூரி நிர்வாகத்தால் பாராட்டப்படுபவர். அண்மையில் வெளியான பிரிவு I தேர்வில் 200க்கு 166 மதிப்பெண்களைப் பெற்றவர். கடந்த ஜூன் மாதத்தில் பிரிவு I தேர்வுகளை எழுதியதும், அவர் மூர்ஷிதாபாத் மாவட்டத்திலுள்ள கிராமங்களுக்குச் சென்றார். அம்மக்களின் வாழ்நிலை, பொருளாதாரச் சூழல், கல்வியறிவு, அரசியல் அறிவு பற்றிய தகவல்களைத் திரட்டினார். கிராமப்புற பெண்கள் – குழந்தைகளுடன் தங்கி அவர்களுடன் கலந்துறவாடினார். விடுமுறைக்குப் பிறகு அவர், ஜூலை இறுதியில் கல்லூரிக்குத் திரும்பியிருக்க வேண்டும். ஆனால் கிராமப்புற விவசாயப் பெண்களின் அன்புக்குக் கட்டுப்பட்டு ஆகஸ்ட் முதல்வாரம் வரை அவர் அங்கேயே தங்கியிருந்தார்.



ஆகஸ்ட் 8 – ஆம் நாளன்று நள்ளிரவில் அவர் தங்கியிருந்த கூலி விவசாயியின் வீட்டை முற்றுகையிட்ட போலீசார், அவரைக் கைது செய்வதாக இழுத்துச் சென்றனர். அவரது பெட்டியையும் உடைமைகளையும் நாசமாக்கியதோடு, அந்தக் குடிசை வீட்டையும்சூறையாடினர்.

இருநாட்களுக்கும் மேலாக சோறு – தண்ணீர் தராமல் போலீசார் அவரைக் கொட்டடியில் அடைத்து வதைத்தனர். பின்னர் சில வெற்றுத்தாள்களிலும், மக்கள் யுத்தக் குழுவின் ஆவணம் ஒன்றிலும் கட்டாயப்படுத்தி கையெழுத்திட வைத்தனர். அதன் பிறகு அவர் வழக்கு மன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவரை விசாரணைக் கைதியாக சிறையிலடைக்க நீதி மன்றம் உத்தரவிட்டது. ''அரசைக் கவிழ்க்க சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டார்; பயங்கரவாத வன்முறையைத் தூண்டிப் பிரச்சாரம் செய்தார்'' என்றெல்லாம் அவர் மீது அடுக்கடுக்காக பொய் வழக்குகள் சோடிக்கப்பட்டுள்ளன. காரணம், அவர் நக்சல்பாரிகள் தலைமையிலான புரட்சிகர மாணவர் சங்கத்தில் இணைந்து செயல்பட்டவர். மூன்று மாதங்களுக்கும் மேலாக அவர் சிறையிலடைக்கப்பட்டுள்ள போதிலும், இன்றுவரை அவர் மீதான வழக்கு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. நீதிமன்றமோ, நீதிபதிகளோ அதில் அக்கறை காட்டவுமில்லை. இந்த அநீதியையும், ஜனநாயக உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கும் 'இடதுசாரி' அரசையும் கண்டித்து பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் பத்திரிகைகளும் கண்டனம் தெரிவித்துள்ளதோடு, மாணவி ஷம்பா தாஸ்குப்தாவை நிபந்தனையின்றி விடுதலை செய்யக் கோரி வருகின்றன.

மே. வங்கத்தில் 'இடதுசாரி'களின் ஜனநாயக ஆட்சி நடப்பதாக போலி கம்யூனிஸ்டுகள் மார்தட்டிக் கொள்கிறார்கள். ஆனால் அது, தமிழகத்தின் ஜெயா, குஜராத்தின் மோடி, ஆந்திராவின் சந்திரபாபு நாயுடு வழியிலான 'ஜனநாயக' ஆட்சிதான் என்பதற்கு இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும்?

## படுகொலைகளுக்குத் தயாராகிவிட்ட இந்துவெறி பாசிச குண்டர் படைகள்

''இசுலாமிய பயங்கரவாதத்தை முறியடிக்க இந்துக்கள் தற்கொலைப் படை அமைப்போம்!'' என்று இந்து வெறி போதை தலைக்கேறி சிவசேனா தலைவர் பால்தாக்கரே அண்மையில் கொக்கரித்தபோது. இதுவெறும் வாய்க் கொழுப்பெடுத்த சவடால் என்றுதான் பலரும் அலட்சியப்படுத்தினார்கள். ஆனால் சிவசேனா குண்டர்கள் தற்கொலைப் படையைக் கட்டியமைத்து அதற்கான பயிற்சியையும் அண்மையில் நடத்தியுள்ளனர். மகாராஷ்டிராவின்தானே மாவட்டத்தில் அம்பர்நாத் அருகிலுள்ள வாசாத் எனும் கிராமத்தில் கடந்த நவம்பர் முதல் நாளிலிருந்து 15–ஆம் தேதி வரை தற்கொலைப் படைக்கான அதிரடி பயிற்சியை நடத்தி முடித்துள்ளனர்.

''மகாராஷ்டிரா இராணுவ ஆதார மையம்'' என்ற பெயரில் ஓர் அமைப்பை ஒய்வு பெற்ற இராணுவ அதிகாரியான ஜெயந்த்ராவ் சிதாலே என்பவர் நடத்தி வருகிறார். இவர் ஓய்வு பெற்ற இராணுவத் தளபதி பி.என்.ஹூன் என்பவருடன் நெருக்கமானவர். தனது இராணுவ ஆதார மையத்தின் பரிசளிப்பு விழாக்களில் முதன்மை விருந்தாளியாக ஹூனை அழைத்து கௌரவிப்பது இவரது வாடிக்கை. இந்த ஹூன், சிவசேனாவின் தசரா ஊர்வலங்களில் பால்தாக்கரேவால் சிறப்பிக்கப்பட்டவர்.

இப்படி இந்த இராணுவப் பயிற்சி மையம் வெளிப்படையாக அல்லாமல், சிவசேனா குண்டர்களின் அதிரடி பயிற்சிமுகாமாக இயங்கி வருகிறது. தமக்கும் அரசியல் கட்சிகளுக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது என்கிறார் இந்தப் பயிற்சி மையத்தின் அமைப்பாளரான ஜெயந்த்ராவ் சிதாலே. தமக்கும் இந்த இராணுவப்பயிற்சி மையத்துக்கும் சம்பந்தமில்லை என்கிறது சிவசேனா. இருப்பினும், இந்தப் பயிற்சி முகாமை தாம் எதிர்க்கவில்லை எனறும், இது மாநில அரசின் சட்டம் – ஒழுங்கு



படிப்பகம்

www.padippakam.com



விவகாரம் என்றும் நழுவிக் கொள்கிறது. ஜெயந்த்ராவ், கடந்த ஈராண்டுகளாக புனே நகரில் இதே போல பயிற்சி முகாம்களை நடத்தியுள்ளார்.

தற்போதைய பயிற்சி முகாமில் 30 இளைஞர்கள் பங்கேற்று பயிற்சி பெற்றுள்ளனர். அவர்களுக்கு அதிரடிப் படை வீரர் தகுதி பெற்றுள்ளதாக இந்த அமைப்பு சான்றிதழ் வழங்கியுள்ளது. இந்த வீரர்கள் தற்கொலைப் படைக்கான பயிற்சியைப் பெற்றுள்ளனர். இவர்கள் பயங்கரவாதத்தை முறியடித்து நாட்டுக்குத் தமது உயிரைத் தியாகம் செய்யவும் துணிந்தவர்கள்; இத் தற்கொலைப் படையினர் பயங்கரவாதிகளுக்குச் சரியான பதிலடி கொடுப்பார்கள் என்று பெருமையுடன் கூறுகிறார் ஜெயந்தராவ் சிதாலே.



**படர்ந்துவரும் பாசிசப் பேரபாயம்: பகிரங்கமாக நடத்தப்பட்ட அதிரடிப்படைப் பயிற்சி முகாமில் பயிற்சிபெறும் சிவசேனா குண்டர்கள்.**

மாகாராஷ்டிராவை ஆளும் காங்கிரசுக் கூட்டணி முதல்வரான விலாஸ்ராவ் தேஷ்முக், இந்தத் தனியார் இராணுவப் பயிற்சி முகாம் பற்றி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாகக் கூறுகிறார். போலீசாரோ, இப்பயிற்சி முகாமின் அமைப்பாளர்களைக் கைது செய்வதாக சூரத்தனம் காட்டிவிட்டு, பின்னர் அனைவரையும் பிணையில் விடுவித்து விட்டனர். விசுவ இந்து பரிசத் குண்டர்கள் இதுபோல வெளிப்படையாகவே ஆயுதப் பயிற்சி முகாம் நடத்துவதையும், பெண்களுக்கு துர்காவாஹினி என்ற அமைப்பின் பெயரால் தற்காப்பு பயிற்சி முதல் துப்பாக்கி சுடும் பயிற்சி வரை அனைத்தையும் வெளிப்படையாக நடத்துவதையும் கண்டு கொள்ளாத அரசு, இந்தத் தற்கொலைப்படை பயிற்சி முகாமை மட்டும் தடுத்துவிடும் என்று நம்பத்தான் முடியுமா? அப்படி ஏதாவது காகித நடவடிக்கை எடுத்தால் கூட அதை எதிர்த்துப் போராட்டம் நடத்தவும், தேசபக்தி, பயங்கரவாத் எதிர்ப்பு என்ற மூடுதிரையின் பின்னே இன்னும் பல அதிரடிப் படை பயிற்சி முகாம்களை நடத்தவும் சிவசேனா குண்டர்கள் தயாராகவே உள்ளனர். அதன்படியே, அரசின் 'நடவடிக்கை' நாடகத்துக்குப் பிறகு, ஜெயந்த்ராவ் சிதாலே மீண்டும் அதே இடத்தில் இன்னுமொரு குழுவுக்குப் பயிற்சியளித்து வருகிறார்.

இந்துவெறி பயங்கரவாதிகள் மேல்மட்டத்தில் ஆட்சியதிகாரத்தில் பன்மடங்கு பலத்தோடு இருப்பது மட்டுமல்ல; ஏதாவதொரு காரணத்தை சாக்கு வைத்து மதவெறிப் படுகொலைகளைக் கட்டவிழ்த்துவிட கீழ்மட்டத்திலும் தயாராகி விட்டார்கள். அதற்காக வெளிப்படையாகவே குண்டர் படைகளைக் கட்டி ஆயுதப் பயிற்சியிலும் இறங்கி வருகிறார்கள். குஜராத்தில் நடந்ததைப் போல நாடெங்கும் கொலைவெறியாட்டத்தைக் கட்டவிழ்த்துவிடத் துடிக்கிறார்கள். நாடும் மக்களும் இனியும் தாமதிக்காமல் இந்துவெறி பாசிசப் பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போர் தொடுக்க வேண்டியதே இன்று அவசர அவசியமாகியுள்ளது.

## மனசாட்சியுடன் நடந்தால் சிறை!
## —அமெரிக்கப் பெண் அதிகாரிக்கு நேர்ந்த கதி

"எங்கள் கொள்கையை ஆதரிப்பவர்கள் எங்கள் நண்பர்கள்; ஆதரிக்காதவர்கள் எங்கள் எதிரிகள்'' என்பதுதான் அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை. அமெரிக்காவின் இந்த உலக மேலாதிக்கக் கொள்கைக்கு எதிராக ஒருவர் மனசாட்சியுடன் நடக்க முற்பட்டால் என்ன கதி ஏற்படும் என்பதற்கு, அனா பெலோஸ் மோன்டெஸ் என்ற புலானாய்வுத்துறை பெண் அதிகாரிக்கு அமெரிக்கா விதித்துள்ள கொடிய தண்டனையே சான்று கூறப் போதுமானது.

அனா பெலோஸ் மோன்டெஸ், அமெரிக்காவின் இராணுவப் புலனாய்வு நிறுவனத்தில் (DIA) கியூபா விவகாரங்களைக் கவனித்து வந்த உயரதிகாரியாவர். செப்டம்பர் 11, 2001–இல் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு அமெரிக்காவின் உள்நாட்டு புலனாய்வுத்துறை (FBI) போலீசார் அவரைக் கைது செய்தனர். அவர் கியூபா நாட்டுக்கு இரகசிய உளவாளியாகச் செயல்பட்டதாகவும், அரசு இரகசியங்களைக் கியூபாவுக்குக் கடத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து நீதிமன்றம் அவருக்கு 25 ஆண்டுகால கொடிய சிறைத் தண்டனையை விதித்துள்ளது.

1959–இல் நடந்த புரட்சியைத் தொடர்ந்து அமெரிக்க நிறுவனங்களின் சொத்துக்களை கியூபா நாட்டுடமையாக்கியது. அதனால் ஏற்பட்ட ஆத்திரத்தால் அன்றிலிருந்தே கியூபாவை தனது எதிரி நாடாக அமெரிக்கா பாவித்து வருகிறது. உலக மேலாதிக்கத்துக்காக அன்று அமெரிக்காவுடன் போட்டியிட்ட ரசிய வல்லரசின் தொங்குசதை நாடாக கியூபா இருந்ததாலும், அமெரிக்க எதிர்ப்பு கொள்கையைக் கொண்டிருந்ததாலும் அண்டை நாடான கியூபா மீது அமெரிக்கா பகைமை பாராட்டி வந்தது. 1959 – லிருந்து தொடர்ந்து அந்நாட்டின் அதிபராக உள்ள பிடல் காஸ்ட்ரோவைக் கொல்லவும், பதவியிலிருந்து விரட்டவும் கீழ்த்தரமான சதி – சீர்குலைவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தது. சோவியத் ஒன்றிய வீழ்ச்சிக்குப் பிறகு, கியூபா மீது பொருளாதார – வர்த்தகத் தடைகளை விதித்து அச்சுறுத்திப் பணிய வைக்க முயற்சித்தது. இதனால் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் கிடைக்காமல் கியூபா தத்தளித்தபோதிலும், அமெரிக்காவின் உலக மேலாதிக்கக் கொள்கையையும் அடாவடித்தனத்தையும் அனைத்துலக அரங்கில் தொடர்ந்து அம்பலப்படுத்தி வருகிறது.

இப்படி கடந்த நாற்பதாண்டுகளுக்கும் மேலாக கியூபா மீது அமெரிக்க வல்லரசு பகைமை பாராட்டி வரும் நிலையில், அனா பெலோஸ் மோன்டெஸ், இந்தக் கொள்கை மிகவும் கொடூரமானது; நேர்மையற்றது என்று வெளிப்படையாகவே குற்றம் சாட்டுகிறார். ''அண்டை நாடான கியூபாவுடன் சகோதரத்துவத்தையும் நட்புணர்வையும் பேணுவதற்குப் பதிலாக, அமெரிக்கா வெறுப்பையும் பகைமையையுமே வளர்த்து வருகிறது. அச்சின்னஞ்சிறு தீவு நாடு தன்னை தற்காத்துக் கொள்ளவும் சுயசார்புடன் முன்னேறவும் நாம் உதவவேண்டும். நமது விருப்பங்களையும் கொள்கைகளையும் நமது அரசியலமைப்பு முறையையும் அந்நாட்டின் மீது திணிப்பதை நான் ஏற்கவில்லை. நாம் சிறிதும்


படிப்பகம்

www.padippakam.com



சகிப்புத்தன்மையின்றி அந்நாட்டை இழிவுபடுத்தி அவமதிக்கும் வகையில் நடந்து வருகிறோம். கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக இதுவே நமது கொள்கையாக உள்ளது. இது எந்த வகையிலும் நியாயமானதல்ல. அண்டை நாடான கியூபாவுடன் நான் சகோதரத்துவத்தையே நாடுகிறேன். அமெரிக்க அரசின் சட்டத்தைவிட, மனசாட்சியையே நான் பெரிதும் மதிக்கிறேன்'' என்று அவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்துள்ளார்.

கியூபா விவகாரங்களுக்கான அமெரிக்க ஆலோசகர்களில் முக்கியமானவராகச் செயல்பட்ட அவர், கியூபா ஒருபோதும் அமெரிக்காவுக்கு இராணுவ ரீதியில் அச்சுறுத்தல் தரும் நாடு அல்ல என்று அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான ''பெண்டகனு''க்கு தனது மனசாட்சிப்படி 1998–இல் அறிக்கை அளித்தார். 1999–இல் கியூபாவும் அமெரிக்காவும் கூட்டு இராணுவப் பயிற்சி நடத்தவும் இரு நாடுகளுக்குமிடையே சகோதரத்துவ உறவு வலுப்பெறவும் அரசு தந்திர ரீதியாக முயற்சிகளை மேற்கொண்டார். இந்தக் காலகட்டத்தில்தான் கியூபாவுக்கு உளவாளியாகச் செயல்பட்டு, அரசு ரகசியங்களைக் கடத்தினார் என்றும் குற்றம் சாட்டுகிறது, அமெரிக்கா.

''நீங்கள் உங்கள் நாட்டை நேசிக்காவிட்டாலும், அதன் கொள்கைக்கு எதிராகச் செயல்படக் கூடாது. உங்கள் நடவடிக்கையால் அமெரிக்க அரசுக்கும் அதன் கொள்கைக்கும் பெருந்தீங்கு ஏற்படுத்திவிட்டீர்கள். இதற்கு நீங்கள் தண்டனை அடைந்தே தீரவேண்டும்'' என்று 25 ஆண்டு கால சிறைத்தண்டனையை வழங்கியுள்ளது அமெரிக்க நீதிமன்றம்.

காற்றிலே சருகுகள் அசைந்தால்கூட அஞ்சி நடுங்கும் பேடிகள்தான், பாசிச சர்வாதிகாரிகள். அதிலும் உலக மேலாதிக்க பாசிச பயங்கரவாதியாக உள்ள அமெரிக்கா, தனது கொள்கைக்கு எதிராக மனசாட்சிப்படி செயல்பட்ட தனது புலனாய்வு உயரதிகாரியையே கண்டு அஞ்சுகிறது. தனது கோர முகம் உலக அரங்கில் அம்பலமாகி விடுமோ என்ற பீதியில் அவரைச் சிறையிலடைத்து வதைக்கிறது. புரிந்து கொள்ளுங்கள், இதுதான் பீற்றிக் கொள்ளப்படும் அமெரிக்க ஜனநாயகத்தின் யோக்கியதை!

## கொத்தடிமைகளாக கோவை நூற்பாலைத் தொழிலாளர்கள்

''இனி எந்தத் தொழிலாளிக்கும் நிரந்தர வேலை கிடையாது; எல்லோரும் கொத்தடிமைகள்தான்; எந்தவொரு நிறுவனமும் யாருடைய அனுமதியுமின்றி தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டியடிக்கலாம்'' என்று இரண்டாவது தேசிய தொழிலாளர் ஆணையம் அரசுக்குப் பரிந்துரை அளித்துள்ளது. இதனடிப்படையில் புதிய சட்டத் திருத்தங்களை அரசு கொண்டு வருவதற்கு முன்னரே, கோவை, ஈரோடு மாவட்ட நூற்பாலை முதலாளிகள் இதைத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகின்றனர்.

கோவை, ஈரோடு மாவட்டங்களில் 700 சிறு வீத் நூற்பாலைகள் உள்ளிட்டு ஏறத்தாழ 1000 நூற்பாலைகள் உள்ளன. இவற்றில் ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளிகள் வேலை செய்கின்றனர். ஆனால் இவர்களில் 40% பேர்தான் நிரந்தரத் தொழிலாளிகள். எஞ்சிய அனைவரும் அற்பக்கூலி பெறும் உதிரித் தொழிலாளிகள். இவர்களுக்கு மருத்துவ ஈட்டுறுதி, சேம நல நிதி முதலான எந்தச் சலுகையும் கிடையாது. வேலையும் நிரந்தரம் கிடையாது.

தொழிற்சங்கங்கள் அண்மையில் மேற்கொண்ட ஆய்வுகளின் படி, பல ஆலைகளில் நிரந்தரத் தொழிலாளியே இல்லை. 40,000 நூற்புக்கதிரைகள் கொண்ட ஒரு ஆலையில், விதிப்படி ஏறத்தாழ 440 நிரந்தரத் தொழிலாளிகள் இருக்க வேண்டும்; ஆனால் 180 பேர் மட்டுமே நிரந்தரத் தொழிலாளியாக இருந்தனர். 60,000 நூற்புக்கதிரைகள் கொண்ட மற்றொரு ஆலையில் 950 தொழிலாளிகள் பணிபுரிகின்றனர். ஆனால் அவர்களில் எவருமே நிரந்தரத் தொழிலாளி இல்லை. பெரும்பாலான ஆலைகளிலும் இதே நிலைதான். நிரந்தரத் தொழிலாளியைவிட இந்த உதிரித் தொழிலாளிகளுக்கு 30 முதல் 50% வரையிலான ஊதியம் குறைவாகத் தரப்படுகிறது. இன்னும் சில ஆலைகளில் ''பயிற்சி தொழிலாளர்கள்'' (அப்ரண்டீஸ்) என்ற பெயரில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் நவீன கொத்தடிமைகளாகச் சுரண்டப்படுகின்றனர். இவர்களுக்கு உணவும் தங்குமிடமும் கொடுத்து, மாதம் ரூ. 1000 முதல் ரூ. 1500 வரை தரப்படுகிறது. இதேவேலைக்கு ஒரு நிரந்தரத் தொழிலாளிக்கு இதற்கு முன்பு ஒரு நாளுக்கு ரூ. 260 ஊதியமாக அளிக்கப்பட்டு வந்தது. தொழிலாளர்கள் மட்டுமல்ல; அலுவலக ஊழியர்களும் கூட ''பயிற்சி அலுவலர்'' என்ற பெயரில் நவீன கொத்தடிமைகளாக பல ஆலைகளில் சுரண்டப்படுகின்றனர்.

''நூற்பாலைகள் பெருகிவிட்டன; போட்டி அதிகமாகிவிட்டது; உற்பத்திச் செலவு உயர்ந்து விட்டது; எனவே நிரந்தர தொழிலாளர்களைக் குறைத்துள்ளோம்'' என்று நூற்பாலை முதலாளிகள் நியாயவாதம் பேசுகின்றனர். இப்படி வேலையிலிருந்து வீசியெறியப்பட்ட நிரந்தரத் தொழிலாளிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 50,000–க்கும் மேலாகும். இவர்களில் பலர் இன்று உதிரித் தொழிலாளியாக வாழ்க்கையை ஓட்டுகின்றனர்.

தொழில் – வர்த்தக நகரம்; பணப் புழக்கமிக்க நகரம் என்றெல்லாம் சித்தரிக்கப்படும் கோவை – ஈரோடு நகரங்களிலேயே இந்த நிலைமை என்றால், மற்ற நகரங்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. தனியார்மயம் – தாராளமயம் எனும் புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு, முதலாளிகளின் இலாப விகிதம் அதிகரித்துள்ளதாக முதலாளித்துவ பொருளாதாரவாதிகள் புள்ளிவிபர – சதவீதக் கணக்கு காட்டிச் சதிராடுகிறார்கள். ஆனால் இது, தொழிலாளர்களின் சட்டபூர்வ உரிமைகளைப் பறித்து, நவீன கொத்தடிமைகளாக்கி கொள்ளையிட்டதால் உருவானதுதான் என்பதற்கு நூற்பாலைத் தொழிலாளர்களின் நிலைமையே சாட்சியமாக உள்ளது.

அற்பக்கூலி, அடிமைத்தனத்தில் உழலும் கோவை நூற்பாலைத் தொழிலாளி: புதிய பொருளாதாரக் கொள்கையின் பலிகடா.





படிப்பகம்

www.padippakam.com



## தனியார்மயமாக்கம் என்றால் மோசடி – பகற்கொள்ளைதான்!

நலிவடைந்து நட்டமேற்படுத்துவதாகக் கூறப்பட்டு, தனியார் முதலாளியிடம் அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்ட ஒரு அரசுத் துறை நிறுவனம், ஆறே மாதங்களில் அதே நிறுவனம் அந்த தனியார் முதலாளிக்கு பலகோடி ரூபாய் இலாபத்தைக் கொடுத்துள்ளது என்றால் நம்ப முடியுமா? நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும். ஏனென்றால் இதுதான் தனியார்மயத்தின் 'மகிமை'!

அரசுத்துறை நிறுவனமான, இந்திய ஓட்டல் கழக நிறுவனத்துக்குச் சொந்தமான செண்டூர் விமானதள ஐந்து நட்சத்திர ஓட்டல், ஆறு மாதங்களுக்கு முன்பு தனியார் முதலாளியான பத்ரா நிறுவனத்துக்கு ரூ.83 கோடிக்கு விற்கப்பட்டது. தனியார்மய நடவடிக்கையில் இது வெற்றிகரமான நிகழ்ச்சி என்று தனியார்மயத் துறை அமைச்சர் அருண்ஷோரி மார்தட்டிக் கொண்டார். கடந்த அக்டோபர் மாதத்தில் பத்ரா நிறுவனம், இந்த ஓட்டலை ''சாகரா இந்தியா'' நிறுவனத்திடம் ரூ.115 கோடிக்கு விற்பனை செய்துள்ளது. இத்தனைக்கும் பத்ரா நிறுவனம் அந்த ஓட்டலைச் சீரமைத்து அழுகுபடுத்த சல்லிக்காசு கூட செலவிடவில்லை. ஆனாலும் அதன் மதிப்பு திடீரென உயர்ந்து ரூ. 32 கோடி இலாபத்தை பத்ரா நிறுவனத்துக்கு அள்ளிக் கொடுத்துள்ளது. இது பத்ரா நிறுவனத்தின் வியாபாரத் திறமையா? அல்லது இந்திய ஆட்சியாளர்கள் இந்த ஓட்டலை பத்ரா நிறுவனத்துக்கு அடிமாட்டு விலைக்கு விற்றதால் கிடைத்த ஆதாயமா?

தரகுப் பெருமுதலாளியான பத்ரா, ஆர்.எஸ்.எஸ். தலைவர்களின் நெருங்கிய கூட்டாளி. எனவே அவருக்குச் சாதகமாக, செண்டூர் ஓட்டலின் உண்மையான மதிப்பைக் குறைத்து, நலிவடைந்த நிறுவனமாகக் காட்டப்பட்டு அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்டது. ஆனாலும் சந்தை மதிப்புகளின்படி உரிய தொகைக்கு விற்கப்பட்டுள்ளதாக ஆட்சியாளர்கள் மாய்மாலம் செய்தனர். சில எதிர்க்கட்சிகளும் பத்திரிகைகளும் இந்த ஓட்டல் தனியார்மயமாக்கப்பட்டதில் நடந்த மோசடிகள் பற்றி அம்பலப்படுத்தத் தொடங்கியதும் அப்படி எந்த மோசடியும் நடக்கவே இல்லை என்று அமைச்சர் அருண்ஷோரி திடலடியாக மறுத்தார்.

ஆனால், ஆறே மாதங்களில் இந்தயோக்கிய சிகாமணிகளின் மோசடி அம்பலப்பட்டு நாறுகிறது. ''ஓட்டலை வாங்கிய பத்ரா நிறுவனம், அதை இப்போது சாகரா நிறுவனத்துக்கு விற்று ரூ. 32 கோடி இலாபம் ஈட்டியுள்ளது. நாங்கள் ஒரு தனியார் முதலாளிக்கு விற்றோம்; அவர் இலாபம் வைத்து வேறொரு நிறுவனத்துக்கு விற்றுள்ளார்; இதிலே எங்கே மோசடி இருக்கிறது?'' என்கிறது தனியார்மய அமைச்சகம். ஆறு மாதங்களுக்குள் ஓட்டலின் மதிப்பு உயர்ந்தது எப்படி என்பது பற்றியோ, சாகரா நிறுவனம் எதற்காக அதிகவிலை கொடுத்து வாங்கியது என்பது பற்றியோ அது வாய் திறக்க மறுக்கிறது.

செண்டூர் ஓட்டலை அடிமாட்டு விலைக்கு விற்றது மட்டுமல்ல; முறைகேடாக இன்னும் பல சலுகைகளை பத்ரா நிறுவனத்துக்கு ஆட்சியாளர்கள் வாரியிறைத்துள்ளனர். இந்த ஓட்டல் அமைந்துள்ள நிலம், இந்திய விமான நிறுவன ஆணையகத்துக்குச் செந்தமானது. இந்நிலத்தை இந்திய ஓட்டல் கழக நிறுவனத்துக்கு மலிவுவிலையில் நீண்டகால அடிப்படையில் அது குத்தகைக்குக் கொடுத்துள்ளது. ஓட்டல் விற்கப்பட்டபோது, இந்த நிலத்தை அதே மலிவு விலையில் 30 ஆண்டுகளுக்கு பத்ரா நிறுவனத்துக்கு குத்தகைக்குத் தருமாறு தனியார்மய அமைச்சகம் இந்திய விமான நிறுவன ஆணையகத்திடம் கோரியது. அதன்படி இந்த நிலத்தை மலிவு விலையில் பத்ரா நிறுவனத்துக்குக் குத்தகைக்குக் கொடுத்தது. ''விதிப்படி இந்த நிலத்தை பத்ரா நிறுவனம்தான் அனுபவிக்க முடியும்; அதை வேறொரு நிறுவனத்துக்கு விற்கவோ, உள்குத்தகை விடவோ முடியாது; இது சட்டவிரோதமானது. ஓட்டலை வாங்கிய சாகரா நிறுவனத்துக்கு நிலத்தைக் குத்தகைக்கு விடவேண்டுமென்றால், புதிய விலை நிர்ணயிக்கப்பட வேண்டும்'' என்று இந்திய விமான நிறுவன ஆணையகம் தனியார்மய அமைச்சகத்துக்கு நோட்டீசு அனுப்பியுள்ளது.

அடுத்து, இந்த ஓட்டல் வளாகத்தில் ஒரு பெட்ரோல் நிரப்பு நிலையம் உள்ளது. ஓட்டலுக்கு வரும் வாடிக்கையாளர்களின் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பும் சேவைக்காக இந்திய எண்ணெய் நிறுவனம் (IOC), இந்த பெட்ரோல் நிரப்பு நிலையத்தை ஒரு முகமையாளருக்குக் கொடுத்துள்ளது. தனியார்மய அமைச்சகம் ஓட்டலோடு இந்த பெட்ரோல் நிலையத்தையும் பத்ரா நிறுவனத்துக்கு விற்றுவிட்டது. ஆனால் இந்திய எண்ணெய் நிறுவனமோ, ''இது சட்டப்படி செல்லாது; எமது முகமையாளரை நாங்கள் மாற்றவில்லை. அப்படியிருக்க பத்ரா நிறுவனம் எப்படி உரிமை கொண்டாட முடியும்? அதை எப்படி இன்னொரு நிறுவனத்துக்கு விற்க முடியும்?'' என்று நீதிமன்றத்தில் முறையிட்டுள்ளது. தனது பெட்ரோல் நிரப்பு நிலையத்தை மூடி ''சீல்'' வைத்துள் ளதோடு, தனியார்மய அமைச்சகத்துக்கு இதுபற்றி நோட்டீசு அனுப்பியுள்ளது. மோசடிகள் அடுத்தடுத்து அம்பலமாகத் தொடங்கியதும் தேள் கொட்டிய திருடனாக இந்துவெறி ஆட்சியாளர்கள் விழிபிதுங்கி நிற்கின்றனர். நேற்று தொலைபேசி மற்றும் தகவல் தொடர்பு சேவை நிறுவனமான ''விதேஷ் சஞ்சார் நிகம்'' எனும் அரசுத்துறை நிறுவனத்தை தனியார்மயமாக்கியதன் மூலம் தரகுப் பெரு முதலாளியான டாடா அடித்த கொள்ளை ரூ.1300 கோடிக்கும் மேல்! இன்று செண்டூர் ஓட்டல் விற்பனை மூலம் பத்ரா நிறுவனம் அடித்த கொள்ளை ரூ.32 கோடி! தனியார்மயமாக்கம் என்றால் அது பெரு முதலாளிகளின் பகற்கொள்ளைக்கும் மோசடிக்குமான கொள்கைதான் என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

அரசுத்துறை நிறுவனமான ''நால்கோ'' தனியார் மயமாக்கப்படுவதை எதிர்த்து தொழிலாளர் போராட்டம். தனியார்மயம் என்றால் தொழிலாளர் வாழ்வு பறிப்பு; முதலாளிகளின் பகற்கொள்ளை. நேற்று நால்கோ ஆலை; இன்று செண்டூர் ஓட்டல்; நாளை...?





படிப்பகம்

www.padippakam.com

## ஆப்கான் பெட்டகச் சாவுகள்:

# அமெரிக்காவின் போர்க் குற்றங்கள்

**கொ**லை! கோரமான படுகொலை! ஒருவர், இருவரல்ல; ஆராயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டார்கள். இக்கொடுஞ்செயலை மூடிமறைத்து, கொல்லப்பட்டவர்களை புதைகுழியில் தள்ளி புல்டோசரை வைத்து நிலத்தை நிரவி விட்டார்கள், ஏகாதிபத்தியக் காட்டு மிராண்டிகள்.

ஆப்கான் போரில் அமெரிக்கா நடத்திய கோரமான கொலைகளை உலகம் மறந்துவிடவில்லை. கடந்த ஆண்டில் இலக்குகளே இன்றி 6 வார காலத்திற்கு கண்மூடித்தனமாக நடத்தப்பட்ட அமெரிக்கக் குண்டுவீச்சுத் தாக்குதலில், பச்சிளம் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை ஆயிரக்கணக்கான அப்பாவி ஆப்கான் மக்கள் பலியானார்கள். போர் ஓய்ந்து புதிய கைக்கூலிகளின் ஆட்சி நிறுவப்பட்டது. "நீடித்த சுதந்திரம் நிலைநாட்டப்பட்டு விட்டது; காட்டுமிராண்டி தாலிபான் – அல்கொய்தா பயங்கரவாதிகளுக்குப் பாடம் புகட்டி விட்டோம்" என்று ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது கைக்கூலிகளும் பெருங்கூச்சலுடன் எக்காளமிட்டார்கள். ஆனால் அந்த எக்காளம் - பெருங்கூச்சலில் மூடிமறைக்கப்பட்ட காட்டுமிராண்டித்தனமான கொலைகள் இப்போது மெதுவாக வெளிவந்து நாகரீக உலகையே அதிர வைத்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் 20–ஆம் நாளன்று அமெரிக்கக் கைக்கூலியும் யுத்தப் பிரபுவுமான தோஸ்தம் தலைமையிலான வடக்கத்திய கூட்டணிப் படைகள், கோண்டூஸ் நகரை முற்றுகையிட்டுக் கைப்பற்றின. அதைத் தொடர்ந்து தாலிபான் – அல்கொய்தா படையினர் சரணடைய பேரங்கள் நடந்து வந்தன. சரணடைவை ஏற்க மறுத்து ஒரு பிரிவு அல்கொய்தா படையினர், தமது இராணுவ உடுப்புகளைக் களைந்துவிட்டு சிவிலியன் உடைதரித்து பத்தானியர்களுடன் கலந்து தப்பியோடிவிட்டனர். மற்றவர்கள் தோஸ்தம் படையினரால் சுற்றி வளைத்து கைது செய்யப்பட்டு அருகிலுள்ள எர்கானக் எனுமிடத்திற்கு நாய்களைப் போல கட்டி இழுத்து ரெய்ப் பட்டு வதைக்கப்பட்டனர், இதே நேரத்தில் மேற்கே மசார் இ ஷெரீப் பகுதியில் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்ட தாலிபான் போர்க் கைதிகள் குவாலாஜெய்னி எனுமிடத்திலுள்ள சிறையில் கலகம் செய்தனர்.


அவர்களை ஒடுக்கியதோடு, அதனால் ஏற்பட்ட ஆத்திரத்தை கோண்டூஸ் நகரில் சரணடைந்த தாலிபான் போர்க் கைதிகள் மீது பழி தீர்த்துக் கொண்டது வடக்கத்திய கூட்டணிப்படை. எர்கானக் எனுமிடத்தில் தாலிபான் - அல்கொய்தா போர்க் கைதிகள் 2,3 நாட்களுக்குப் பட்டினி போட்டு வதைக்கப்பட்டனர். பின்னர் யுத்தப் பிரவு தோஸ்தம் படையின் தளபதிகள் மற்றும் அமெரிக்காவின் "595– ஏ" எனப்படும் சிறப்புப் படைக்குழுவின் தளபதிகள் முன்னிலையில் சரணடைவு சடங்கு நிகழ்ச்சிகள் கோலாகலமாக சாராய விருந்தோடு நடத்தப்பட்டன. பின்னர் கைதிகளை அவர்களின் தலைப் பாகைத் துணியால் கைகளைக் கட்டி ஜீப்புகள், லாரிகளில் ஏற்றி மேற்கே தமது கட்டுப்பாட்டிலுள்ள ஷேபர்கான் சிறைக்குக் கொண்டு சென்றனர்.

இருப்பினும், ஆயிரக்கணக்கான போர்க் கைதிகளைச் சிறைக்குக் கொண்டு செல்ல தோஸ்தம் படையினரிடம் போதிய வாகனங்கள் இல்லை. எனவே மசார் இ ஷெரீப் நகரிலிருந்து சரக்குப் பெட்டக வாகனங்களையும் வாகன ஓட்டிகளையும் அவர்கள் கொண்டு வந்தனர். 40 அடி நீளமும் 8 அடி அகலமும் 8 அடி உயரமும் கொண்ட காற்று வசதி இல்லாத இச்சரக்குப் பெட்டகங்களில் 200–க்கும் மேற்பட்ட தாலிபான் – அல்கொய்தா போர்க் கைதிகள் ஆடு-மாடுகளைப் போல அடைக்கப்பட்டனர். இப்பெட்டகங்கள் அடைத்து சீல் வைக்கப்பட்டு ஷேபர்கான் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டன. காற்று வசதியின்றி புழுக்கம் காரணமாக இப்போர்க் கைதிகள் அலறித் துடித்தார்கள். "தண்ணீர் கொடு! எங்களைக் கொல்லாதே!" என்று பெட்டகச் சுவரைத் தட்டி பெருங்கூச்சலிட்டார்கள்.

ஷேபர்கான் சிறையில் பெட்டகங்கள் திறக்கப்பட்டன. போர்க்கைதிகள் அனைவரும் மூச்சுத்திணறி இறந்து கிடந்தனர். மீன்களை ஏற்றிவரும் பெட்டகம் போல, அந்தப் பெட்டகம் பிணங்களால் வழிந்தது. இந்தக் கோரத்தைக் கண்டு வடக்கு கூட்டணிப்படையினரோ, அமெரிக்கப் படையினரோ அதிர்ச்சியடையவில்லை. மாறாக, இக்கொலைகளை எப்படி மூடி மறைப்பது, யாருக்கும் தெரியாமல் பிணங்களை எங்கே புதைப்பது என்பது பற்றியே அவர்கள் கவலை கொண்டனர்.

கோண்டூஸ் நகரில் சரணடைந்த போர்க் கைதிகள் மட்டுமல்ல; குவாலா ஜெய்னி சிறையில் கலகம் செய்த தாலிபான் போர்க்கைதிகளும் இதே முறையில் கண்களும் கைகளும் கட்டப்

**சரக்குப் பெட்டகத்தினுள் அடைக்கப்பட்ட சரணடைந்த தாலிபான் போர்க் கைதிகள்; பெட்டகப் படுகொலைக்கு முன்.**





படிப்பகம்

www.padippakam.com

பட்டு, ஷேபர்கான் சிறைக்கு பெட்டகங்களில் ஏற்றி அடைக்கப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்டனர். துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்ட இப்போர்க் கைதிகளின் பிணங்களை ஷேபர்கான் சிறைக்கு அருகிலுள்ள தஷ்ட் இ லெய்லி எனும் பாலைவனப் புதைமணலில் தள்ளி அப்பகுதியை புல்டோசரை வைத்து நிரவி விட்டனர், தோஸ்தம் படையினர். கடந்த ஆண்டு டிசம்பர் முதல் வாரத்தில் இக்கொடுஞ் செயல்கள் நடந்தேறியுள்ளன.

போர் ஓய்ந்து ஆப்கானில் புதிய கைக்கூலிகளின் அரசு நிறுவப்பட்டு ஆரவாரங்கள் அடங்கிய பிறகு, சரணடைந்த போர்க்கைதிகள் என்ன ஆனார்கள் என்பது பற்றி பத்திரிகைகள் ஆராய முற்பட்ட போது உண்மைகள் மெதுவாகக் கசியத் தொடங்கின. அதிர்ச்சியடைந்த மேற்கத்திய மனித உரிமை அமைப்புகள் ஆப்கானுக்கு நேரில் சென்று விசாரணை நடத்தின. ருவாண்டா மற்றும் பால்கன் நாடுகளில் நடந்த இனப்படுகொலைகளை வெளியே தெரியாமல் மூடி மறைத்த சதிகளை அம்பலப்படுத்திய பிரபல தடயவியல் – அகழ்வாராய்ச்சியாளரான ஹாக்லந்து என்பவர், தஷ்ட் இ லெய்லி பாலைவனப் பகுதியில் – பிணங்களைப் புதைத்த பகுதியில் மருத்துவக் குழுவினருடன் ஆராய்ச்சி நடத்தினார். ஒருசில அடிகள் தோண்டியதுமே எலும்புகள் கிடைத்தன. அவற்றில் அழுகிய நிலையில் இன்னமும் சதைகள் ஒட்டியிருந்தன. அப்பகுதியில் சிதைந்த நிலையில் காலணிகளும் தலைப்பாகைத் துணிகளும் கிடைத்தன. மேலும் மோப்ப நாய்கள், பிணந்திண்ணி கழுகுகளைக் கொண்டு சோதனைகளும் நடத்தப்பட்டன. இதனடிப்படையில், இப்பகுதியில் அண்மைக் காலத்தில் ஏராளமான பிணங்கள் புதைக்கப்பட்டுள்ளன என்று ஹாக்லந்தும் மருத்துவர்களும் அறுதியிட்டனர்.

அதைத் தொடர்ந்து ஷேபர்கான் சிறையிலுள்ள போர்க்கைதிகளிடமும், மசார் இ ஷெரீப் நகரின் சரக்குப் பெட்டக வாகன ஓட்டிகளிடமும் மனித உரிமை அமைப்பினர் விசாரணையை மேற்கொண்டனர். இப்பகுதியில் வடக்கு கூட்டணிப் படையினரின் இராணுவ சர்வாதிகார ஆட்சி நிலவுவதால் எவரும் சுதந்திரமாக கருத்துக்கூற முன்வரவில்லை. இருப்பினும் தொடர்ந்து வலியுறுத்தி தைரியமூட்டிய பிறகு, ஒரு சிலர் நடந்த உண்மைகளைக் கூற முன்வந்தனர்.

''பெட்டகத்தில் ஆடு-மாடுகளைப் போல போர்க் கைதிகள் அடைக்கப்பட்



**யுததப பிரபு தோஸ்தம்; அமெரிக்காவின் புதிய கொலைகாரக் கைக்கூலி.**

டதைக் கண்டு நான் அதிர்ச்சியில் உறைந்து போனேன். கைதிகள் உள்ளேயிருந்து அலறிக் கொண்டிருந்தார்கள். வடக்குக் கூட்டணிப் படையினர் தொலைவில் சென்றபிறகு, நான் சுத்தியலால் பெட்டகச் சுவரை உடைத்து ஓட்டைகளை உருவாக்கி, உள்ளே பார்வையைச் செலுத்தினேன். அவர்களின் மரண வேதனைக் கண்டு துடிதுடித்துப் போனேன். என்னிடமிருந்த தண்ணீர் குடுவையை ஓட்டை வழியே திணித்து சாய்த்தேன். என்னிடமிருந்த ரொட்டித் துண்டுகளை உள்ளே திணித்தேன். அதற்குள் வடக்கு கூட்டணி படைவீரர்கள் என்னைப் பார்த்து விட்டனர். ''டேய், என்ன செய்யுற? சீக்கிரம் வண்டியை எடுத்துகிட்டுப் போ!'' என்று விரட்டினர். வேறு வழியின் நான் ஷேபர்கான் சிறைக்கு சரக்குப் பெட்டக ஊர்தியை ஓட்டி வந்து ஒப்படைத்தேன். சிறையில் பெட்டகம் திறக்கப்பட்டது, நூற்றுக்கும் மேலானோர் வெப்பத்தாலும் புழுக்கத்தாலும் மூச்சு முட்டி இறந்து கிடந்தனர். சிலர் துடிதுடித்துக் கொண்டிருந்தனர். இந்தக் கோரத்தைக் கண்டு ஓவென்று அலறியபடியே நான் மயங்கி விழுந்தேன்'' என்று வாக்குமூலம் அளித்துள்ளார் முகம்மது எனும் வாகன ஓட்டி.

''ஏறத்தாழ இரு நாட்களாக நாங்கள் உணவும் நீருமின்றி பரிதவித்தோம். சரணடைவு நிகழ்ச்சிக்குப் பிறகு, எங்களில் சிலரை லாரிகளில் ஏற்றி சிறைக்குக் கொண்டு சென்றனர். பிறகு சரக்குப் பெட்டக லாரிகளைக் கொண்டு வந்து எங்கள் கைகளைக் கட்டி உள்ளே திணித்து கதவுகளை அடைத்தனர். புழுக்கத்தாலும் காற்று வசதி இல்லாததாலும் நாங்கள் மூச்சுத்திணறி அலறினோம். பலர் மயங்கி ஒருவர் மீது ஒருவராக விழுந்தனர். வியர்வை பெருகி நாக்கு வறண்டு வெடிக்கத் தொடங்கியது. அடுத்தவர் மீது வழியும் வியர்வையை நாங்கள் நக்கினோம். பலர் விக்கி கண்கள் பிதுங்கி என் கண்ணெதிரே மரணமடைந்தனர். நான் மயங்கி விழுந்தேன். கண் விழித்த போது, நான் பெட்டகத்திலிருந்த பிணங்களின் மீது வீசியெறியப்பட்டுக் கிடந்தேன். நான் எப்படி உயிர் பிழைத்தேன் என்பது அந்த அல்லாவுக்குத்தான் தெரியும்'' என்கிறார் அப்துல் எனும் பத்தானிய போர்க்கைதி. தான் வந்த பெட்டகத்தில் ஏறத்தாழ 20 பேர் மட்டுமே உயிர் பிழைத்ததாக அவர் கூறுகிறார். இப்படி தனக்குத் தெரிந்த வரையில் 8–க்கும் மேற்பட்ட சரக்குப் பெட்டகங்களில் போர்க்கைதிகள் அடைக்கப்பட்டதாகவும், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மாண்டு போயிருக்கலாம் என்றும் இவர் பீதியுடன் கூறுகிறார்.

சரணடைந்த போர்க்கைதிகளை இழிவுபடுத்தவோ, துன்புறுத்தவோ, வதைக்கவோ கூடாது என்பது அனைத்து நாடுகளும் ஏற்றுக் கொண்ட பொது விதி. ஆனால் தங்களை மாபெரும் ஜனநாயகவாதிகளாகப் பீற்றிக் கொள்ளும் அமெரிக்காவும் அதன் கைக்கூலிகளும் சரணடைந்த தாலிபான் – அல்கொய்தா போர்க்கைதிகளைப் பட்டினிபோட்டு மிருகத்தனமாக வதைத்ததோடு, அவர்களை பெட்டகத்தில் ஆடு - மாடுகளைப் போல அடைத்து கொன்றொழித்து விட்டு, பிணங்களையும் இரகசியமாக புதைத்து மூடிமறைத்துள்ளனர். சரணடைவின்போதும், பின்னர் சிறையில் கைதிகளை இறக்கியபோதும் அங்கு பார்வையாளராக இருந்த செஞ்சிலுவை சங்கத்தினர், உண்மைகளை அறிந்திருந்த போதிலும், ஏகாதிபத்திய விசுவாசத்தோடு வாய்மூடிக் கிடக்கின்றனர். ஜனநாயகம், மனித உரிமை பற்றி வாய்கிழியப் பேசும் ஏகாதிபத்தியவாதிகளோ மௌனம் சாதிக்கின்றனர்.

ஏகாதிபத்தியம் என்பது ஆக்கிரமிப்புப் போர் வெறியும் இனவெறியும் கொண்ட பாசிசக் காட்டுமிராண்டிகளின் உலகம். தாலிபான் – அல்கொய்தா கும்பலின் மதவெறி பயங்கரவாதத்தைக் காட்டி, அமெரிக்காவும் அதன் கைக்கூலிகளும் ஆப்கானில் நடத்திய இப்படுகொலை – காட்டுமிராண்டித்தனங்களை நியாயப்படுத்திவிட முடியாது. ஜனநாயகம், சுதந்திரம், நாகரீகம், மனித உரிமை என்றெல்லாம் எவ்வளவுதான் அரிதாரம் பூசினாலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொலைகார கோரமுகத்தை மூடி மறைக்கவும் முடியாது. புதைக்கப்படும் உண்மைகள் பூதமாகக் கிளம்பும், அது ஏகாதிபத்தியக் காட்டுமிராண்டிகளைச் சுட்டெரிக்கவே செய்யும்.

● குமார்


படிப்பகம்

www.padippakam.com

# கைக்கூலி எழுத்தாளரின்

# எஜமான விசுவாசம்

*''புதிய ஜனநாயகம்'' ஏட்டின் 2002 ஜூலை இதழில் ''பொள்ளாச்சி மகாலிங்கத்துக்கு வலது கம்யூனிஸ்டுகள் விருது: ஓம் சக்தியும் ஜனசக்தியும்'' என்ற செய்தி விமர்சனக் கட்டுரை வெளியிடப்பட்டிருந்தது. அதற்கு போலி கம்யூனிஸ்டுகளின் ''ஜனசக்தி'' பதில் எழுதவில்லை; அதற்குப் பதிலாக பொள்ளாச்சி மகாலிங்கத்தின் குடும்பத் தொழில்களுக்கான வருமான வரிக் கணக்கைச் சரிகட்டுவதற்காவும் அவரது சுயபுராணம் பாடுவதற்காகவும் அவரையே ஆசிரியராகக் கொண்டு, அவருடைய சக்தி சுகர்ஸ் நிறுவனம் வெளியிடும் ''ஓம்சக்தி'' ஏட்டில் அவரது அடிவருடி ஒருவர் ''மகரந்தன்'' என்கிற பெயரில் எழுதியுள்ளார்.*

*பொள்ளாச்சி மாலிங்கம் மற்றும் போலி கம்யூனிஸ்டுகள் மீதான ''புதிய ஜனநாயகம்'' ஏட்டின் கட்டுரையில் எழுதப்பட்டிருக்கும் விமர்சனங்களுக்கு அறிவுபூர்வமான விளக்கம் எதுவும் எழுதாத கைக்கூலி எழுத்தாளர் ''மகரந்தன்'', மதவாதிகளுக்கேயுரிய அறிவிலித்தனமான வாதங்களை அடுக்கியுள்ளார். ''ஜனநாயகத்தில் புதுசென்ன? பழசென்ன? கற்பில் புதிய கற்பு பழைய கற்பு உண்டா? கற்பு ஒன்றுதானே!'' என்று கேட்டு போலி கம்யூனிஸ்டுகளுக்கும் ஏற்புடைய பிற்போக்குத்தனங்களை வெளிப்படுத்தியுள்ளார்.*

*டாட்டா, பிர்லா முதற்கொண்டு எல்லா முதலாளிகளும் ''அறக்கட்டளை'' என்கிற பெயரில் செய்யும் ஆன்மீக - மொழி - சமூக சேவைகள் என்கிற ''வரிஏய்ப்பு - சமூக ஏய்ப்பு'' நடவடிக்கைகளைத்தான் மகாலிங்கமும் செய்கிறார். அவற்றில் சிலவற்றைப் பட்டியலிட்டுவிட்டு பொள்ளாச்சி மகாலிங்கம் தமிழ்த் தொண்டு செய்யும் ஒரு சான்றோர் என்றும் அவரை ஒரு முதலாளி என்று ''புதிய ஜனநர்யகம்'' புளுகியுள்ளது என்றும் மகரந்தன் எழுதியுள்ளார். ஆனால், அந்த ''ஓம் சக்தி'' ஏட்டில் முழுப்பக்க விளம்பரங்கள் கொடுத்துள்ள கம்பெனிகளைப் பார்த்தாலே புரியும். மகாலிங்கம் பொறியியல் கல்லூரி, சக்தி சுகர்ஸ், பண்ணாரி சுகர்ஸ், சக்தி பைனான்ஸ், கவுண்டர் அண்டு கோ, ஏ.பி.டி; ஏ.ஆர்.சி., மகாலிங்கம் அண்டு கம்பெனி, மாரியம்மன் டெக்ஸ்டைல்ஸ், சக்தி எஸ்டேட்ஸ், சக்தி ஆட்டோ மொபைல்ஸ் என்கிற நிறுவனங்கள்- அதாவது, ''சக்தி குழுமம்'' என்பது யாருடையது? இவற்றுக்குச் சொந்தக்காரரான பொள்ளாச்சி மகாலிங்கம் ஒரு முதலாளி அல்லவென்று முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கிறார் அந்த கைக்கூலி எழுத்தாளர். எல்லா ஏகபோக முதலாளிகளும் இப்படித்தான், தமது கொள்ளைக்கார நிறுவனங்களை குடும்ப வாரிசுகளிடம் ஒப்படைத்துவிட்டு ஆன்மீக அருட்பணி வேடம் போட்டுக் கொள்கிறார்கள்.*

*மகரந்தனின் பித்தலாட்டங்களை ஐந்து அம்சங்களாகத் தொகுத்து பு.ஜ.தொ.மு. தோழர் மலர் மன்னன் பதிலடி கொடுத்து ''ஓம்சக்தி''க்கு எழுதியுள்ளார். அதன் பிரதியை இங்கே வெளியிடுகிறோம். தோழர் மலர் மன்னன் குறிப்பிடத் தவறிய ஒரு தகவல் உண்டு. தமிழ்நாட்டிலேயே தாழ்த்தப்பட்ட சாதியினர் மீது மிகமிகக் கொடூரமான சாதி அடக்குமுறை மேற்கு மாவட்டங்களில் நிலவி வருவதற்குக் கொங்கு வேளாள கவுண்டர்களின் ஆதிக்கம்தான் காரணம். கடந்த பத்தாண்டுகளில் பிற மாவட்டங்களில் சாதி ஒடுக்குமுறை எதிர்ப்பு வெடித்தபோதும், கொங்கு மாவட்டங்களில் சிறு சலசலப்பு கூட ஏற்படமுடியாதவாறு சாதிக் கொடுமை தாண்டவமாடுகிறது. இந்த உண்மையை கண்டுகொள்ளாது, மூடி மறைக்கும் வகையில் இந்து ஒற்றுமை என்கிற பெயரில், கவுண்டர் சாதி சாமியார்களுக்கும், வடநாட்டு பார்ப்பன சாமியார்களுக்கும் பாலமாகச் செயல்படுகிறார், பொள்ளாச்சி மகாலிங்கம். தனது சொந்த வட்டாரத்தில் நடக்கும் சாதிக் கொடுமை - அவலங்களைக் கண்டுகொள்ளாத மகாலிங்கத்துக்கு அமெரிக்காவில் சீர்திருத்தம் செய்வது முக்கிய அருட் பணியாக உள்ளது. இந்த உண்மையோடு சேர்த்து தோழர் மலர் மன்னனின் கடிதத்தை உங்கள் முன் வைக்கிறோம்.*

*-ஆசிரியர் குழு*

''ஓம் சக்தி ''ஆசிரியருக்கு...

1. இருபது கோடி கடன் வாங்கி அதனை ஏ.பி.டி. மகாலிங்கம் திருப்பித் தராமல் இருப்பதை அனுமதிக்கிற அதே ஜனநாயகம்தான், மின் கட்டணம் கட்டத் தவறுகின்ற என் போன்றவர்களின் வீடுகளில் உள்ள பியூஸ் கட்டைகளை பிடுங்கி எறிகிறது. இது ஒன்றும் சட்டையை மாற்றுகிற விவகாரம் அல்ல. சட்டையை புரிந்து கொள்ளுகிற விவகாரம் – பழைய கற்பு, புதிய கற்பு பிரச்சினை அல்ல. கற்பின் ஒழுக்கத்தைப் பற்றிய விவகாரம்.

அரசு வங்கிகளில் கோடிக்கணக்கில் கடன் வாங்கி, அதைத் திருப்பித் தராமல் இருந்து வருகின்ற திருவாளர் ஏபிடி மகாலிங்கம், அருட்செல்வராக உருமாறி, நேர்மையைப் பற்றி, நாணயத்தைப் பற்றி, கடின உழைப்பைப் பற்றி உபதேசிக்க முடிகின்றது. அதனால் சுய பொருளாதார காந்திய கொள்கைப் பிடிப்பாளராக தன்னை காட்டிக் கொள்ளும் அருட்செல்வர், ஏபிடி மகாலிங்கமாக மாறி பெப்சி கோலாவின் ஏஜெண்டாக இருக்க முடிகிறது. அதனால்தான் இந்து வெறியர்களுடன் குலாவ முடிகிறது. தமிழறிஞர்களுடன் உலாவ முடிகிறது.

இந்த ஜனநாயகத்தால் பெரும்பான்மை மக்களுக்கு பயனில்லை. பெரும்பான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை ஏற்படுத்தி தர லாயக்கற்ற அல்லது அதற்கு தடையாக உள்ள இந்த ஜனநாயத்திற்கு மாற்றுதான் புதிய ஜனநாயகம்.

2. ரோம் நகரம் பற்றி எரிந்தபோது பிடில் வாசித்த நீரோ மண்ணுக்கு 'பிடில் மேதை' என யாரும் பட்டம் வழங்கவில்லை.

வீட்டில் பெண்டாட்டியை அடித்து உதைக்கிற நபர், அவனது சமூக நடவடிக்கையில் அடிதடிக்கு போகாதவனாக இருக்கிறான்; இல்லத்தை ஆளும் பெண்களே பத்தினிகள் எனும் மனுதர்மத்தை ஏற்றுக் கொண்டுள்ள வாஜ்பாய், சின்னத்தாயி காலில் விழுகிறார்; குஜராத்தில் முசுலீம்களை வேட்டையாடும் காலித்தனத்தை கண்காணிக்கும் பாரதீய ஜனதா இந்து வெறிக் கும்பல், அப்துல் கலாமை குடியரசு தலைவராக்குகிறது; சாதியின் பெயரால் சக மனிதனையே இழிவுப்படுத்தி, அவர்கள் சமூகமாக ஒன்றுபடுவதை குலைக்கும் இந்துத்துவத்தை கல்வியிலும் திணிக்க திடசங்கல்பம் ஏற்றுக் கொண்டுள்ள முரளி மனோகர் ஜோஷி, மனிதர்களுக்கிடையே சகிப்புதன்மைப் பற்றியும், நல்லிணக்கத்தைப் பற்றியும் பேசுகிறார்; இந்திய மக்களிடத்தில் ''சுதேசி எங்கள் உயிர்'' என்றும், அமெரிக்க முதலாளிகளிடத்தில் ''சுதேசி ஒரு உணர்வு மட்டுமே'' எனவும் யஷ்வந்த் சின்கா பேசுகிறார்; ''ஷிவாஸ்'' என்ற பெயரால் உழைக்கும் மக்களுக்கான மட்டரக பிராந்தியைத் தயார் செய்யும் ஆலையை வைத்துக் கொண்டு, நோயற்ற வாழ்வைப் பற்றியும், இயற்கை உணவைப் பற்றியும் அருட்செல்வர் பேசுகிறார். இவற்றிலிருந்து என்ன முடிவுக்கு வருவது? இவற்றை எப்படி பரிசீலிப்பது? இதில்


படிப்பகம்

www.padippakam.com

ஒரு தெளிவான கண்ணோட்டம் இருக்குமானால், அருட்செல்வரின் தமிழ் தொண்டை புரிந்து கொள்வதிலும் ஒரு தெளிவு இருக்கும்.

3. நிபந்தனைக்குட்படாத 'சகிப்புத் தன்மை' உண்டா? இடம், பொருள், ஏவலுக்கு ஏற்ப மாறுபடாத சகிப்பு தன்மை இருக்கமுடியாது. முதலாளி – தொழிலாளி உயர் சாதி–தாழ்த்தப்பட்ட சாதி, சுரண்டுபவன் - சுரண்டப்படுபவன் என பிளவுப்பட்டு கிடக்கும் சமூகத்தில் சகிப்பு தன்மை சாத்தியமா? இத்தகைய சகிப்பு தன்மை அயோக்கியத்தனமானது. ஆளும் வர்க்கத்திற்கு சேவை செய்யக் கூடியது. மாஞ்சோலை தொழிலாளியிடத்திலும், ஷா ஆலம் அகதி முகாமிலும் போய் சகிப்புதன்மையை உபதேசித்துப் பாருங்கள்; அங்கு உங்களின் சகிப்புத்தன்மை அறுவை சிகிச்சை செய்யப்படுவதை காண்பீர்கள். வெறுமனே 'வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடி' பயன் இல்லை. அந்த பயிர் ஏன் வாடுகிறது? எதற்கு வாடுகிறது? எதனால் வாடுகிறது? என்பதைக் கண்டறிந்து அதற்கான செயலில் இறங்க வேண்டும். இத்தகைய செயல்பாட்டிற்கு தடையாய் இருப்பதுதான் சன்மார்க்கம்.

இன்றைக்கு இந்தியாவை இந்து மத வெறி பயங்கரவாத இருள் கவ்வி கொண்டிருக்கிறது. இந்த காவி இருளுக்கு எதிராக அருட்செல்வர் எந்த ஜோதியை ஏற்றினார் என்பது தெரியவில்லை. அப்பாவி முசுலீம் மக்களுக்கு எதிராக இந்து வெறியர்கள் நடத்தி வரும் படுகொலைகளைச் சகித்து கொள்ளலாமா? ஆயுதபாணிகளாக தெருவில் இறங்கி அப்பட்டமாக கலவரம் செய்யும் இந்து வெறியர்களை எப்படி எதிர்கொள்வது? சகிப்புதன்மைதான் தீர்வா? இதன் மூலம் அருட்செல்வர் யாருக்கு சேவை செய்கிறார்? ஆர்.எஸ்.எஸ்.சின் கொள்கைக்கும், அருட்செல்வரின் கொள்கைக்கும் வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை. முன்னது, நேரடியாக மூக்கை தொடுவது; பின்னது, சுற்றி வளைத்து மூக்கைத்தொடுவது.

அருட்செல்வர் → சாந்தலிங்க அடிகளார் → இராம கோபாலன் → சங்பரிவார் → ஜோசி → கார்த்திகேயன் → அருட்செல்வர். இந்த சங்கிலியை வைத்து கொண்ட அருட்செல்வரால் வெளிவர முடியுமா? அவரின் தொழில் பக்தியும், வர்க்க பாசமும் இடந்தருமா?

4. மார்க்ஸ்–குறிப்பான விசயங்களை குறித்து தெளிவான முடிவுகளைப் பெற அதற்கான மூலமொழியை கற்று கொண்டதும், அதற்கு முயற்சித்ததும் அவரின் சிறப்பான பண்பு. சமஸ்கிருதம் கற்றுக் கொள்ள முடியவில்லையே என அதற்கு தான் வருந்தியிருப்பார். சமஸ்கிருதம் 'தேவ பாசை' என்பதற்காக அல்ல.



'உலக அமைதி'க்காகத் தனது கருப்புப் பணத்தில் ஆழியாறில் அகில உலக மாநாடு நடத்தும் பொள்ளாச்சி மகாலிங்கம்; தரகு ஏகபோக முதலாளியின் அருட்பணி வேடம்.

சமஸ்கிருதம் 'தேவபாசை', தமிழ் நீச பாசை என பேசும் மொழியில் பேதம் பிரித்தவன் யார்? செத்த மொழிக்கு கோடிகளும், வாழும் மொழிகளுக்கு நிதி ஒதுக்கீடுகளை குறைப்பதுமாக ஆளும் இந்துவெறி அரசு செயல்படுகிறதே ஏன்? ஆத்தில் தமிழ் பேசும் அவாள்களுக்கு கர்ப்பகிரகத்தினுள் மட்டும் தமிழ் வர மறுக்கிறதே ஏன்? சபிக்கப்பட்ட மொழி சமஸ்கிருதமா? இல்லை, சமஸ்கிருதத்தால் மற்ற மொழிகள் சபிக்கப்படுகின்றனவா? அறிவு நாணயத்துடன் பதில் சொல்ல வேண்டும்.

ஈரானிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த சமஸ்கிருதத்திற்கும், திராவிட மொழிக் குடும்பத்தை சேர்ந்த தமிழுக்கும் மூல மொழி ஒன்று இருக்க வேண்டும் என்கிற அருட்செல்வரின் பிதற்றலுக்கு எந்த மொழியியல் அறிஞரும் பதில் சொல்ல தேவையில்லை. அது ஏற்கனவே நிரூபணமான ஒன்று. தமிழ் செம்மல் விருது பெற்றதற்காகவேனும் அருட்செல்வர் ஒரு பணியை செய்தாக வேண்டும். தமிழை 'நீச பாசை' என சண்ட மாருதம் செய்யும் சமஸ்கிருத பிராணிகளுக்கு எதிராக ஓம் சக்தியை திருப்ப வேண்டும். திருப்புவாரா?

5. கலை இலக்கிய பெருமன்றம் கம்யூனிஸ்ட் கட்சியா? என கூறியுள்ளீர்கள். பாதி உண்மை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி – கம்யூனிச கட்சியே இல்லை என்பதுதான் மீதி உண்மை. அது புரட்சிக்கான கட்சி இல்லை. புரட்சி நடத்த போவதாய் கனவு மட்டுமே காணுகிற கட்சி. அது காணும் கனவும் மதிய நேரத்து கனவாகத்தான் இருக்கிறது. அதன் நீடித்த கனவில் – 'குன்றக்குடி அடிகளார் மடத்தைத் துறந்து, சொத்துக்களைத் துறந்து முழுநேர ஊழியராய் புரட்சிக்கு வேலை செய்வதைப் போலவும் – அருட்செல்வர் சக்தி குரூப்ஸை விட்டு வெளியேறி செம்படை போராளியாய் ஆயுதந்தாங்கிப் போராடுவதைப் போலவும் – காட்சிகள் வந்து போகின்றன. அந்த கனவை மெய்ப்பிக்கத்தான் கலை இலக்கிய பெருமன்றம். காலம் கனிந்தால் வீரப்பனுக்கும், அடிகளாருக்கும் (பங்காரு) விருது கொடுப்பார்கள்.

எது கம்யூனிஸ்ட் கட்சி என ஒரு தரகு முதலாளி நடத்தும் பத்திரிக்கைக்கு விளக்கம் எழுத வேண்டிய நிலைக்கு எம்மை தள்ளிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை நினைத்தால் ''செத்தும் கெடுத்தான் கணக்கு பிள்ளை'' கதைதான் நினைவுக்கு வருகிறது.

இறுதியாக – ஏபிடி மகாலிங்கம் அவர்கள் கோக், பெப்சி ஏஜெண்ட்டாக இருப்பது குறித்தும், கரும்பு விவசாயிகளின் வயிற்றிலடிப்பவர் எனவும் நாங்கள் எழுதியிருந்த கருத்துக்கும் ஓம் சக்தியில் பதில் இல்லாததன் மர்மம் என்ன?

ஓம் சக்தியில் எது எதுக்கோ விவாதம் நடத்தப்படுகிறது. ஒரு வேண்டுகோள்; நா.மகாலிங்கம் அவர்கள் அருட்செல்வரா? தரகுமுதலாளியா? என விவாதம் நடத்தலாமே! (ரயில்வேயில் சாதாரண தொழிலாளியாக வேலை பார்த்த நாச்சிமுத்து கவுண்டருக்கு சொத்துகள் பெருகிய ரகசியங்களை, பொள்ளாச்சி பகுதியில் அது குறித்து மக்களிடம் புழங்கும் கதைகளை, இன்னும் இது போன்று விடுபட்ட விவரங்களை விவாதிக்க வசதியாய் இருக்கும்). ஓம் சக்தியின் ஜனநாயகமும், சகிப்புதன்மையும் அதற்கு இடந்தருமா? தந்தால் மகிழ்ச்சி.

**— வணக்கத்துடன்**
**மலர்மன்னன்.**


படிப்பகம்

www.padippakam.com

# பட்டினிச் சாவின் பிடியில் இந்தியா

இந்திய ஒருமைப்பாட்டுக்கு விசுவாசமாக நடந்து கொள்வதுதான் தேசபக்தியின் அடையாளமாகக் காட்டப்படுகிறது. ஆனால், இந்தியாவோ இருவேறு உலகமாகப் பிரிந்து கிடக்கிறது; ஒன்றுக்கொன்று எதிராக நிற்கிறது; எந்தப் பசை போட்டு ஒட்டினாலும், இந்தப் பிளவை இணைக்க முடியாதபடி, எதிரும் புதிருமாக இருக்கிறது. கடந்த பத்தாண்டுகளாக ஆளுங் கட்சிகளால் நடைமுறைப்படுத்தப்படும் தாராளமயம்தான் இந்தப் பிளவுக்குக் காரணம். சரியாகச் சொன்னால், இந்தப் பிளவைக் கூர்மைப்படுத்தி, ஒன்றொடொன்று மோதுவதைத் தவிர்க்க முடியாததாக்கிவிட்டது, தாராளமயம்.

இந்தியா பிளவுண்டு கிடக்கிறது என நாம் கூறுவது கற்பனையானதோ, மிகையானதோ, குதர்க்கம் நிறைந்ததோ அல்ல. அரசும், பத்திரிகைகளும் வெளியிடும் பொருளாதாரப் புள்ளிவிவரங்களை ஒன்றாகக் கோர்த்துப் பார்த்தாலே, தாராளமயம் இந்தியாவை இருவேறு உலகமாகக் கூறு போட்டிருப்பதைப் புரிந்து கொண்டு விடலாம்.

எஃப்.ஐ.சி.சி.ஐ., என்ற தரகு முதலாளிகள் சங்கம், தாராளமயத்தின் பின், இந்தியாவில் முதல் 100 இடத்தில் இருக்கும் தொழில் நிறுவனங்களின் இலாப வளர்ச்சி விகிதத்தையும், அந்நிறுவனங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்களின் ஊதிய உயர்வையும் ஒப்பிட்டு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. இதன்படி, அந்த நிறுவனங்களின் இலாபம், தாராளமயத்தின் முதல் ஐந்து ஆண்டுகளில் 31.2 சதவீதம் வளர்ச்சி அடைந்திருக்கிறது. அதேசமயம், தொழிலாளர்களின் ஊதியமோ 15.8 சதவீதம்தான் உயர்ந்துள்ளது. பொருளாதார மந்தம், தேக்கம் நிறைந்த 1998-99 ஆண்டில்கூட அந்த நிறுவனங்களின் இலாபம் 5.7 சதவீதம் அதிகரித்திருக்கிறது. ஆனால், பொருளாதாரத் தேக்கத்தின் பொழுதோ, தொழிலாளர்களின் ஊதியம் 7.3 சதவீதம் வீழ்ச்சியடைந்திருக்கிறது.

தாராளமயத்தின் பின்தான் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனம், உலகின் முதல் ஐநூறு நிறுவனங்களுள் ஒன்றாக வளர்ந்தது. நாற்பது வயதுக்குக் குறைவான உலகின் 40 பெரும் பணக்காரர்களுள் ஒருவராக பிர்லா நிறுவனங்களின் தலைவர் மோகன் குமார்மங்கலம் வளர்ந்தார். ஆனால், இதே கால கட்டத்தில்தான், விருப்ப ஓய்வூதியத் திட்டம் என்ற பெயரில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் வேலை பறிக்கப்பட்டு, அவர்களின் குடும்பங்கள் நடுத்தெருவில் வீசியெறியப்பட்டன.

தாராள இறக்குமதிக் கொள்கை, உள்நாட்டில் விளைந்த தேயிலையின், கொப்பரையின், கடலையின் விலையை மட்டும் வீழ்த்தவில்லை; விவசாயிகளின் உயிருக்கே எமனாகிவிட்டது. தாராளமயத்தின் பின், 1996 தொடங்கி 2000-க்குள், கர்நாடகா மாநிலத்தில் மட்டும் 10,959 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போனார்கள். இதோடு, ஆந்திராவிலும், பஞ்சாபிலும் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளையும் சேர்த்தால், தாராள இறக்குமதி பலி கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை இருபதாயிரத்தைத் தொட்டுவிடும்.

இந்திய ரிசர்வ் வங்கி சமீபத்தில் 150 இடைநிலை அதிகாரிகளை நியமிக்கப் போவதாக அறிவித்தது. இந்த 150 காலியிடங்களுக்கு ஒரு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர். பட்டதாரிகள் மட்டுமின்றி, பொறியியல் மற்றும் முனைவர் பட்டம் பெற்றவர்கள்கூட, இந்த வேலைக்கு விண்ணப்பம் போட்டுள்ளனர். தாராளமயத்தின் பின் வேலை வாய்ப்பு வளர்ந்த இலட்சணம் இதுதான்.

கூலிவெட்டு, வேலை இழப்பு, வேலையில்லாத் திண்டாட்டம், விவசாயிகள் போண்டியாவது இவற்றோடு கூட, இன்னொரு பேரபாயம் மெல்ல மெல்ல இந்தியாவெங்கும் படர்ந்து வருகிறது. அதுதான் பட்டினிச் சாவு.

2001-ஆம் ஆண்டு, ஒரிசாவின் ராயகடா மாவட்டத்தில் வாழும் பழங்குடி மக்களைப் பிடித்தாட்டிய பட்டினிக்கு, 20 பழங்குடியினர் பலியானார்கள். ஒரிசாவை அடுத்து இந்தப் பட்டினிச் சாவு ஜார்கண்டு மாநிலம் - பலாமு மாவட்டத்திற்கும், மத்தியப் பிரதேசத்திலுள்ள சிவபுரி மாவட்டத்திற்கும் பரவியது. காவிரியில் தண்ணீர் வராததால், தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டம் கூட, பட்டினிச் சாவின் விளிம்புக்குள் தள்ளப்பட்டது. ஆதிச்சபுரம் கிராமத்தைச் சேர்ந்த பிரகாஷ் என்ற சிறுவன் பட்டினியால் நடுத்தெருவில் சுருண்டு விழுந்து இறந்தான். கடந்த இரண்டே மாதங்களில்,

**பட்டினியால் எலும்பும் தோலுமாகிப் போன சஹாரியா பழங்குடியினக் குழந்தைகள்**




படிப்பகம்

www.padippakam.com

இராசஸ்தான் மாநிலம் பாரன் மாவட்டத்தில் 47 பழங்குடியினர் பட்டினிக்குப் பலியானதை மக்கள் சிவில் உரிமைக் கழகம் ஆதாரத்தோடு அம்பலப்படுத்தியிருக்கிறது. பட்டினிக்குப் பலியான இந்த 47 பழங்குடியினருள் 11 பேர் குழந்தைகள்.

தாராளமயத்தின் பின், அமெரிக்காவின் உணவு நிறுவனங்களான மெக்டோனால்டும், பிஸ்ஸா ஹட்டும் இந்தியாவினுள் நுழைந்து, மேற்கத்திய உணவு வகைகளை ருசித்துப் பார்க்கச் சொல்லுகின்றன. மேற்கத்திய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் டப்பா உணவு வகைகளால் இந்தியச் சந்தை நிரம்பி வழிகிறது. இன்னொருபுறமோ, இராசஸ்தான் மாநிலம், பாரன் மாவட்டத்தைச் சேர்ந்த சஹாரியா பழங்குடியின மக்கள் ஒருவேளை கஞ்சிக்கு வழியின்றி, ''சாமா'' என்ற காட்டுப் புல்லின் விதைகளைத் தின்று, பட்டினிச் சாவோடு போராடுகிறார்கள். அந்த ''மெக்டோனால்டு'' இந்தியாவும், இந்தப் ''பட்டினி'' இந்தியாவும் ஒன்றோடு ஒன்று ஒட்டிப் போகுமா?

இராசஸ்தான் மாநிலத்தை ஆளும் காங்கிரசுக் கட்சியோ, இதைப் பட்டினிச் சாவாக ஏற்க மறுக்கிறது; பழங்குடியின மக்கள் நோய்வாய்ப்பட்டு இறந்து போனதாகச் சாதிக்கிறது. அம்மாநில அரசின் பழங்குடி இன மக்கள் நல வாரியத்தின் தலைவரோ, ''சாமா விதைகள் புரோட்டின் நிறைந்த சத்தான உணவு; இந்த விதைகளைப் பாலாடு சேர்த்துச் சாப்பிட்டால், அதன் ருசியே தனிதான்'' என அதிகாரத் திமிரையும், வக்கிரத்தையும் ஒன்றாகக் கலந்து கொட்டினார். எங்கெல்லாம் மக்கள் பட்டினியால் சாகிறார்களோ, அங்கெல்லாம் அதிகார வர்க்கத்தின் நாக்கு ஒரே விதமாகத்தான் நீளுகிறது.

பாரன் மாவட்டத்தில் இந்தப் பட்டினிச் சாவுகள் பற்றி விசாரணை நடத்திய மக்கள் சிவில் உரிமைக் கழகம், ''வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள இம்மாவட்டத்தில் அரசு எந்த விதமான நிவாரண உதவியும் செய்யவில்லை; வேலைக்கு உணவுத் திட்டத்தை அமல்படுத்தவில்லை; மிகவும் வறுமையில் வாடும் மக்களுக்கு கிலோ இரண்டு ரூபாய் விலையில் அரிசி / கோதுமை வழங்கும் அந்த்யோதயா திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை; ரேசன் கடைகள் திறந்திருப்பதைப் பார்ப்பது மிகவும் அரிதான விசயம்; குழந்தைகளுக்கு உணவு வழங்கும் சத்துணவு மையங்கள், பழங்குடி இன மக்கள் வாழும் கிராமங்களில் அமைக்கப்படவில்லை; ஆரம்ப சுகாதார நிலையங்கள் முடங்கிப் போய்விட்டன'' என இப்பட்டினிச் சாவுகளுக்குக் காரணமான அரசின் அலட்சியப் போக்கை பட்டியல் போட்டு அம்பலப்படுத்தி இருக்கிறது.

> **அமெரிக்காவின் மெக்டோனால்டு உணவகத்தில் மேற்கத்திய உணவு வகைகளை ருசி பார்க்கும் மேட்டுக்குடி இந்தியர்கள் ஒருபுறம். ''சாமா'' காட்டுப் புல்லின் விதைகளைத் தின்று பட்டினியோடு போராடும் சஹாரியா பழங்குடியினர் மறுபுறம். அந்த 'மெக்டோனால்டு' இந்தியாவும், இந்தப் பட்டினி இந்தியாவும் ஒன்றோடொன்று ஒத்துப் போகுமா?**

ஒரிசாவில் ராயகடா மாவட்டத்தில் பழங்குடி இன மக்கள் பட்டினியாய்க் கிடந்து சாவதற்கு எது காரணமாக அமைந்ததோ - *வறட்சியால் விவசாயம் பொய்த்துப் போனது; அதனால் பழங்குடி இன மக்களுக்குக் கூலி வேலை கூடக் கிடைக்காமல் போனது; அரசின் அலட்சியம்* - அதுதான் பாரன் மாவட்டப் பழங்குடி இன மக்கள் பட்டினியால் சாவதற்கும் காரணமாக இருக்கிறது. ஒரிசாவில் பட்டினிச் சாவுகள் நடந்த பொழுது, உச்சநீதி மன்றம், ''வறுமைக் கோட்டுக்கு கீழே வாழும் மக்களைப் பற்றி மாநிலங்கள் ஒழுங்காகக் கணக்கெடுக்க வேண்டும்; அரசு அறிவிக்கும் நலத் திட்டங்கள் முறையாக அந்த மக்களைப் போய்ச் சேரவேண்டும்; இதை நிறைவேற்றுவதற்குப் பொறுப்புமிக்க அதிகாரிகளை நியமிக்க வேண்டும்'' என அதிரடியாகப் பல உத்தரவுகளைப் போட்டது. ஆனால், கடந்த ஒரு வருடத்தில் இந்த உத்தரவுப்படி எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை.

ஒருவேளை, அதிகார வர்க்கம் நீதி மன்ற உத்தரவினைப் பொறுப்போடு நடைமுறைப்படுத்தியிருந்தால், இந்தப் பட்டினிச் சாவுகளைத் தவிர்த்திருக்க முடியுமா? ''வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களுக்கு ரேசனில் உணவுப் பொருட்களை ஒழுங்காக வழங்கு'' என உத்தரவு போடுகிறது, உச்சநீதி மன்றம். ஆனால், உலக வங்கியோ ரேசன் கடைகள் அனைத்தையும் இழுத்து மூடச் சொல்லி உத்தரவு போடுகிறது. இந்த உத்தரவுக்கு அடிபணிந்துதான் மாநில அரசுகள் மக்களை வறுமைக் கோட்டுக்கும் மேலே, வறுமைக் கோட்டுக்கும் கீழே, அதற்கும் கீழே எனப் பிரித்து வைத்துள்ளன. மேலும், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலையை உயர்த்துவதன் மூலம், ரேசன் கடைகளை இழுத்து மூடும் தந்திரத்திலும் இறங்கிவிட்டன.

''வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் ஒழுங்காகப் போய்ச் சேர வேண்டும்'' என உத்தரவு போடுகிறது உச்சநீதி மன்றம். ''பற்றாக்குறையை ஈடுகட்ட அரசின் நலத்திட்டங்களை வெட்ட வேண்டும்'' என்ற உத்தரவு உலக வங்கியிடமிருந்து வருகிறது. உலக வங்கியின் உத்தரவின் முன் உச்சநீதி மன்றத்தின் உத்தரவு செல்லுபடியாவதில்லை. அதனால்தான், உச்சநீதி மன்றம் சமீபத்தில், அனைத்து மாநிலங்களும் ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு பள்ளிகளிலேயே மதிய உணவு வழங்க வேண்டும் என உத்தரவு போட்டபொழுது, அதனை, பல மாநில அரசுகள் ''கஜானா காலி'' என்று கூறி நிராகரித்து விட்டன.

இந்தியா பட்டினிச் சாவின் விளிம்பில் நிற்பது ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்கும் விசயமல்ல. இந்தியாவிலுள்ள குழந்தைகளுள், 63 சதவீதக் குழந்தைகள் பட்டினியோடு போராடுவதாக ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. குழந்தைகளே பட்டினி கிடக்கும்பொழுது, அவர்களின் பெற்றோர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. 6 கோடி டன் அரிசியும், கோதுமையும் அரசின் கையிருப்பில் இருக்கும்பொழுது, இந்திய உழைக்கும் மக்கள் பட்டினியோடு போராடுவது என்பது அருவெறுக்கத்தக்க முரண்பாடு.

''உலக வங்கியின் உத்தரவையும் மீற முடியாது; நலத் திட்டங்களையும் செயல்படுத்த முடியாது'' என்பதால், ஓட்டுக்கட்சிகள் அனைத்தும் தேள் கொட்டிய திருடனைப் போல முழிக்கின்றன. பொருளாதார நிபுணர்களோ, தாராளமயம் - தனியார்மயத்தை இன்னும் தீவிரமாக அமல்படுத்தினால், வறுமை ஒழிந்து விடும் என்கிறார்கள்.

தாராளமயத்தின் பின் வறுமை, பட்டினிச்சாவு என்ற அளவுக்கு வளர்ந்து தீவிரமாகியிருக்கிறதேயொழிய, அது சற்றுக் குறைந்ததாகக்கூடத் தெரியவில்லை. எனவே, வறுமையையும், பட்டினிச் சாவையும் ஒழிக்க வேண்டுமானால், முதலில் தாராளமயத்தை ஒழிக்க வேண்டும்.

● ரஹீம்




# வாசகர் கடிதம்

● குஜராத் தேர்தல் பற்றிய கட்டுரை படித்தோம். தேர்தல் நடந்தாலும் அங்கு கலவரம்தான் வெடிக்கும் என்பதையும், இந்து மதவெறி, காந்தி – காங்கிரசின் காலம் தொட்டே மக்களை எங்ஙனம் படு கொலை செய்து வருகிறது என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

செய்திப் பதிவுகள் பகுதியில் வெளி யான செய்திகள் அனைத்தும் சிறப்பாக உள்ளன. ''பொய்களே வரலாறாக... மோசடிகளே பள்ளிப்பாடமாக'' என்ற செய்தி இன்னும் விரிவான கட்டுரையாக வெளியானால் சிறப்பாக இருக்கும்.

— வாசகர் வட்டம்,
திருச்சி.

● புதிய ஜனநாயகம் நவம்பர் இதழின் அட்டைப் படம் ஆர்.எஸ்.எஸ். இந்து மத வெறிக் கூட்டத்தின் தேசபக்த வேடத்தைக் கலைத்தது. ரஜினி என்ற பைத்தியக்காரனின் உண்ணாவிரதத்தை எதிர்த்து மறியல் செய்த பு.ஜ.தொ.மு. தோழர்களுக்கு எனது புரட்சிகர வணக் கங்கள்.

— எம். ஜெயகாந்தன்,
தொட்டிப்பாளையம்.

● புலிகள் முன்பு பேசியதையும், இப்போது பேசுவதையும் சுட்டிக்காட்டி இந்த விளக்கங்கள் ஈழ மக்களுக்கும், போராளிகள் சிந்திய இரத்தத்திற்கும் எவ்வளவு துரோகத்தனமானது என்பதைக் கூறியுள்ளீர்கள். தமிழ் தேசிய குழுக்கள் எல்லாம் தங்களது பத்திரிக் கையில் எதை எழுதுவது என்று விழிபி துங்கி நிற்கின்றனர். ஒருசில புரட்சிகர குழுக்கள் கூட அதிர்ச்சியாக இருக்கிறது என்று புலிகள் பற்றி எழுதுகின்றனர். ஒரு படி மேலே போய் இனி எழுத ஏது மில்லை என்று ஆனாரூனா தமது பத்தி ரிக்கைக்கு மூடு விழா நடத்தி விட்டார். ஆனால் பு.ஜ. மட்டும் தனது நிலைப் பாட்டில் இருந்து மிகச் சரியாக துரோகிக ளையும், சந்தர்ப்பவாதிகளையும் திரைகி ழத்துக் காட்டுகிறது. தொடரட்டும் உங்கள் பணி.

— விஜயசாந்தி,
மதுரை.

● இலங்கையின் இன்றைய சமாதானப் பேச்சு வார்த்தைக்கு உள்நாட்டு நெருக் கடி மட்டுமல்ல; ஏகாதிபத்திய மேலாதிக் கத்தினர் நெருக்குதலும் முக்கிய காரண மாகும் என்பதை ''புலிகளின் இலட்சியம் புதைகுழிக்குப் போனது'' என்ற கட்டுரை தெளிவுபடுத்தியுள்ளது.

— செம்மலர் மா. நடராசன்,
அறந்தாங்கி.

● நவம்பர் இதழ் அட்டைப் படமும், பக்கத்தில் உள்ள கவிதை போன்ற வரி களும் சிறப்பாக உள்ளன. இதுதான் இன்றைய இந்தியா படக்கட்டுரையின் மூலம் ஜெயாவின் வர்க்கப் பாசத்தை அம்பலப்படுத்தியுள்ளீர்கள். இருக்கின்ற ஒன்றிரண்டு அரசுப் பள்ளிகளும் விரைவில் உலக வங்கியின் ஊழிப் பெருங்காற்றில் அடித்துக் கொண்டு செல்லப்படுவதைப் புரிந்து கொண்டு நாம் போராடாவிட்டால் எதிர்காலம் கற்காலம் போலாகும்.

— இ.முரளி

● சிறுபான்மையினரின் ஓட்டுக்களைப் பெற்று ஆட்சியில் அமர்ந்த ஜெயலலிதா ஏழை எளிய மக்களை, சிறுபான்மையி னரை, அனைத்து அரசு ஊழியர்களை அச்சுறுத்தும் அரசாக, அப்பட்டமாக இந்துத்துவ அரசாக தம் அரசை நிலை நாட்டிக் கொண்டிருக்கிறார். பாசிசம் இன்று பலம் பெற்று வருகிறது. இதை முற்றாக துடைத்தெறிய வேண்டும். இதில் தங்களின் பணி திருப்திகரமாக உள்ளது. ''ஷரியத்'' சட்டம் – காட்டுமி ராண்டி சட்டம் என்று குறிப்பிடுவது ஜீர ணிக்க முடியாத சொல்லாகும். எனினும் பாசிச பரிவாரங்களுக்கு எதிரானவர் களைத் தோழமையாளர்கள் என்ற அடிப் படையில் தங்களைப் பார்க்கிறேன்.

— கா. ஷெ.பீ,
ஏரிப்புதூர்.

காவிரி நீர் கேட்டு விவசாயிகள் சங்கம் மறியல் செய்தபோது ம.க.இ.க. வில் ஒன்பது பேரும், த.தே.பொ.க.வில் 11 பேரும் தஞ்சை பழைய பேருந்து நிலையத்தில் பேருந்தை மறித்து கைதானோம். காவல் நிலையத்தில் இருந் தபோது நடந்த கூட்டத்தில் த.தே.பொ.க. விலிருந்து பேசிய ஒருவர் காவிரிநீர் பிரச் சனையில் கர்நாடகத்தில் உள்ள அனைத்து கட்சிகளும் - நக்சல்பாரிகள் உட்பட தமிழகத்திற்கு தண்ணீர் தரக் கூடாது என்று சொல்வதாகப் பேசினர். அவர் பேசி முடித்ததும் ம.க.இ.க. தோழர் பேசினார். ''கர்நாடகத்தில் உள்ள நக்சல் பாரிகள் தண்ணீர் தரக்கூடாது என்று கூற வில்லை. அப்படி கூறியதாக உங்களிடம் துண்டறிக்கை இருக்கிறதா? பத்திரிக்கை, வெளியீடு இருக்கிறதா? அப்படி ஆதாரம் எதுவுமில்லாமல் அவதூறு பேசாதீர்கள். தமிழகத்திற்கு தண்ணீர் விட வேண்டுமென்று அவர்கள் போட்ட துண்டறிக்கை, வெளியீடுகளை நாங்கள் தருகிறோம்'' என்று பேசிய பிறகு த.தே.பொ.க.வினர் வாயடைத்து நின்றனர். இச்சம்பவம் பு.ஜ.வில் குறிப் பிட்டுள்ளது போல் தமிழினவாதிகள் எவ்வாறு அவதூறுகளையும், பொய்க ளையும் பிரச்சாரம் செய்கின்றனர் என்பதை எங்களுக்கு நேரடி அனுபவ மாக உணர்த்தியது.

—பாவெல்,
ம.க.இ.க. , தஞ்சை.

## ''தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக்காதே!''

### பு.ஜ.தொ.மு. கருத்தரங்கம் – பொதுக்கூட்டம்

கடந்த நவம்பர் 17-ஆம் தேதி ஒசூரில் பு.ஜ.தொ.மு. மற்றும் வி.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து இரண்டாவது தொழிலாளர் ஆணையத்தின் பரிந்துரைகளை அரசு நிறைவேற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கருத்தரங்கம், பொதுக்கூட்டம், கலை நிகழ்ச்சிகளை நடத்தின. கருத்தரங் கத்தில் ''தொழிற்சங்க தாதாக்களும், மறு காலனியாதிக்கமும்'' என்ற தலைப்பில் தோழர் விஜயகுமார் உரையாற்றினார். மாலை பொதுக்கூட்டத்தில் தோழர் சிவகாமு, தோழர் லோகநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இறுதியில் தருமபுரி மாவட்ட வி.வி.மு. கலைக்குழு வினர் ''அடிமைச் சாசனம்'' என்ற தலைப் பில் புரட்சிகர கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தினர். இரண்டாவது தொழிலாளர் நல ஆணையம், மறுகாலனியாக்கத்திற் காக தொழிலாளர்களைக் கொத்தடிமை களாக மாற்றுவதை நோக்கமாக கொண் டது என்பதை நிகழ்ச்சி தெளிவாக சித்த ரித்து, அதை எதிர்த்துப் போராட வேண் டிய அவசியத்தையும் உணர்த்தியது.

— புதிய ஜனநாயகத் தொழிலாளர்
முன்னணி, ஒசூர்.

www.padippakam.com

# சிவந்த கண்கள்  கவனிக்கட்டும்

## உலக வங்கியின் கடன் சோப்பு வாங்கவா?

கையைக் கழுவிவிட்டுத்தான் சாப்பிட வேண்டும் என்பதைக் குழந்தைகளைத் தவிர, பிறருக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. அப்படியே இந்தச் சுகாதார அறிவை வயது வேறுபாடு இல்லாமல், எல்லோருக்கும் போதிக்க வேண்டியிருந்தாலும், அதற்காகக் கடன் வாங்க வேண்டியதில்லை. ஆனால், கேரள மாநில அரசோ, கேரள மக்களுக்கு இச்சுகாதார அறிவைப் போதிப்பதற்காக, உலக வங்கியிடம் 48 கோடி ரூபாய் கடன் வாங்கியிருக்கிறது. "கேரள மக்களிடம் இந்தச் சுகாதார அறிவு இல்லாததால்தான், அங்கு வயிற்றுப் போக்குச் சாவுகள் நடக்கின்றன. அச்சாவுகளைக் குறைப்பதற்குதான் இந்தக் கடன்" என உலக வங்கி இதற்கு விளக்கம் வேறு அளித்திருக்கிறது. உலக வங்கியின் கரிசனத்தின் பின்னே இருப்பது, பச்சையான வியாபாரத் தந்திரம். சோப் தயாரிக்கும் பன்னாட்டு நிறுவனங்கள்தான் உலக வங்கியின் முதுகுக்குப் பின்னே ஒளிந்து கொண்டு, இந்தக் கடனையும் கொடுத்து, தங்களின் சோப்புகளையும் கேரள அரசின் தலையில் கட்டுகின்றன.

## முசுலீம்களைக் குறிவைத்து இரகசியக் கணக்கெடுப்பு

"ஓ.ஆர்.ஜி. – மார்க்" என்ற தனியார் நிறுவனம், தமிழக முசுலீம்களிடம் இரகசியக் கணக்கெடுப்பு யொன்றை நடத்தியிருக்கிறது. "ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள் பற்றியும், அமெரிக்கா பற்றியும் உங்களின் கருத்து என்ன? பாலஸ்தீன அதிபர் யாசர் அராபத், பாகிஸ்தான் அதிபர் முஷாரப், ஈராக் அதிபர் சதாம் உசேன், அல்–கொய்தா அமைப்பின் தலைவர் ஒஸாமா பின் லேடன், அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் – இவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்றவாறு முசுலீம்களிடம் 75 கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. ஆர்.எஸ்.எஸ். மற்றும் அமெரிக்காவை வெறுக்கும் முசுலீம்கள் பற்றிய ஒரு பட்டியலைத் தயாரிப்பதற்காகவே, இந்தக் கணக்கெடுப்பைத் தனியார் நிறுவனம் மூலம் இந்து மதவெறி அமைப்புகள் எடுத்திருப்பதாகக் கூறுப்படுகிறது. ரேஷன் கார்டு, வாக்காளர் பட்டியலைக் கையில் வைத்துக் கொண்டு நடத்தப்பட்ட குஜராத் பரிசோதனையை, தமிழகத்திலும் நடத்துவதற்கான முன்னோட்டமா இது?

## முசுலீம் மதச் சீர்திருத்தம் – கிரிமினல் குற்றமா?

ஈரானின் ஆட்சி அதிகாரத்திலுள்ள முசுலீம் மத குருமார்களை விமர்சித்துப் பேசியதற்காக, அந்நாட்டைச் சேர்ந்த வரலாற்றுப் பேராசிரியரும், மதச் சீர்திருத்தவாதியுமான ஹாஷெம் அகாஜரிக்கு, மத குருமார்களின் பிடியில் உள்ள ஈரான் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது. "ஒவ்வொரு காலக் கட்டத்திலும், அந்தக் காலக் கட்டத்திற்கு ஏற்ப, குரானுக்கு விளக்கம் சொல்ல உரிமையுண்டு, ஈரானின் மதகுருமார்கள் குரானுக்குக் கொடுக்கும் விளக்கம் புனிதமானதல்ல" எனப் பொதுக் கூட்டத்தில் பேசியதற்காகத் தான், அவருக்கு இந்த தண்டனை. எனினும், மதச் சீர்திருத்தவாதிகள் பிடியில் உள்ள ஈரான் அரசாங்கம், ஹாஷெமிக்கு அளிக்கப்பட்டுள்ள இம்மரண தண்டனையை ரத்து செய்யப் போவதாக அறிவித்துள்ளது. மேலும், மத குருமார்களை எதிர்த்தும், ஹாஷெமிக்கு ஆதரவாகவும் மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்து விட்டுப் போராட்டத்தில் குதித்து விட்டனர்.

## இந்தியர்கள் – இனி பரிசோதனைச் சாலை எலிகள்

"பன்னாட்டு மருந்து நிறுவனங்கள் எந்தவொரு புதிய மருந்தையும் இந்தியர்களுக்குக் கொடுத்துப் பரிசோதிக்க முடியாது. புதிய மருந்துகள் மேற்கத்திய நாடுகளில் பரிசோதிக்கப் பட்டு, அதனால் ஆபத்து கிடையாது என உறுதியான பிறகுதான், புதிய மருந்துகளை இந்தியர்களுக்குக் கொடுத்துப் பரிசோதிக்க முடியும்" என்ற விதியை கைகழுவப் போகிறது மைய அரசு. இதன் முதல் கட்டமாக, கடந்த ஜூலையில், புதிய மருந்துகளை ஒரே சமயத்தில் ஐரோப்பாவிலும், இந்தியாவிலும் பரிசோதிக்கலாம் என இந்த விதி தளர்த்தப்பட்டது. தற்பொழுது, பழைய விதியை முற்றிலுமாக நீக்கி விடலாம் என மைய அரசின் சுகாதார அமைச்சர் பரிந்துரை செய்திருத்திருக்கிறார். ஐரோப்பாவில் புதிய மருந்தை ஒருவருக்குக் கொடுத்துப் பரிசோதிக்க ஆகும் செலவில், இந்தியாவில் நூறு பேருக்குக் கொடுத்துப் பரிசோதனை செய்யலாம் எனப் பன்னாட்டு நிறுவனங்கள் வாயைப் பிளக்கின்றன. தாராளமயத்தின் பின் இந்திய மக்களின் உழைப்பு மட்டுமல்ல, அவர்களின் உயிரும் கூட மலிவாகப் போய்விட்டது.

## கிரிமினல் போலீசுக்கு ஜெயாவின் சலுகை

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு, தமிழக போலீசார் முதல்வர் ஜெயாவைச் சந்தித்து, தங்களின் கஷ்டங்களைப் பற்றி ஒப்பாரி வைத்து விட்டுத் திரும்பிய பிறகு, ஜெயா, போலீசாரின் சொந்தக் குறைகளை மட்டும் தீர்த்து வைக்கவில்லை. இச்சந்திப்பின் பின், 250 போலீசார் மீது எடுக்கப்பட்டிருந்த ஒழுங்கு நடவடிக்கைகளைக் கைகழுவச் சொல்லி விட்டார், அவர். மேலும், போலீசு மீது தொடுக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல் குற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு குற்ற வழக்குகளை, உப்பு சப்பில்லாத வழக்குகளாக மாற்றும்படியும் உத்தரவிட்டுள்ளார். பாசிச ஜெயாவின் ஆட்சி என்பதே போலீசால், போலீசுக்காக நடக்கும் ஆட்சி என்பதற்கு இது இன்னுமொரு சான்று. எனினும், போலீசுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இந்தச் சட்ட விரோத சலுகைகளை எதிர்த்து, மனித உரிமை அமைப்புகள் பொதுநல வழக்கு தொடுத்துள்ளன.

**ஹாஷெம் அகாஜரிக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்து செய்யக்கோரி டெஹ்ரான் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம். (உள்படம்) ஹாஷெம் அகாஜரி.**



**Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.**

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85

www.padippakam.com

Regn.No.TN/Chief.PMG-544/2002



# இதுதான் இன்றைய இந்தியா

பார்ப்பன – பாசிச ஜெயா அரசு கொண்டு வந்திருக்கும் மத மாற்றத் தடைச் சட்டத்திற்கு தாழ்த்தப்பட்டோர் மத்தியில் இருந்து வரும் எதிர்ப்பால் அரண்டு போயிருக்கும் மேல்சாதி வெறி பிடித்த சனாதனக் கும்பல், அந்த எதிர்ப்பை மழுங்கடிக்க பலவித தகிடுதத்தங்களில் இறங்கி வருகிறது. அதிலொன்றுதான் காஞ்சி சங்கர மடத்தின் சங்கராச்சாரி ஜெயந்திர சரசுவதி, ''காலனி''களில் உள்ள கோவில்களுக்கு 'விஜயம்' செய்வது. திருநெல்வேலி நகர் அருந்ததி குடியிருப்பைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோருக்கு அவர் ஆசிவழங்குவதுதான் இந்தப்படம். வேதத்தில் தீண்டாமை இல்லை என்று கூறி, தாழ்த்தப்பட்டோருக்கு ''ஐஸ்'' வைக்கும் சங்கராச்சாரி, வேதத்தைக் கேட்கும் சூத்திரர்களின் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும் எனக் கூறும் மனு தர்மத்தைப் பற்றி வாய் திறக்க மறுக்கிறார்; ''இந்து மதத்தில் தீண்டாமை இல்லை. இந்து சமூகத்தில்தான் தீண்டாமை இருக்கிறது'' எனப் பித்ததலாட்டம் செய்கிறார்; ஜாதி மோதல்களை விசிறிவிடுவது பத்திரிகைகள்தான் எனப் பழி போடுகிறார்; தீண்டாமைகூட அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் நடக்கிறது என அண்டப்புளுகை அவிழ்த்து விடுகிறார்.

இதோ, இந்தப் படத்தில் கை, கால், முகமெல்லாம் தாக்கப்பட்ட நிலையில் கிடக்கிறாரே, இவர் பெயர் வேலு. சிவகங்கை மாவட்டத்திலுள்ள சாத்தரசன் கோட்டையைச் சேர்ந்தவர். அ.தி.மு.க. குண்டர்களால் இப்படி தாக்கப்பட்டதற்கு, இவர் செய்த 'குற்றங்கள்' இரண்டு. ஒன்று, வேலு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர். அதைவிடப் பெரிய குற்றம், ''கிராமக் கண்மாயில் தூர்வார இயந்திரங்களைப் பயன்படுத்தக் கூடாது'' எனக் கூறி, இவர் அ.தி.மு.க. கவுன்சிலர் சகாபுதினை எதிர்க்கத் துணிந்தது. வேலு தாக்கப்பட்டு, அரை நிர்வாணமாக ஊர்த்தெருக்களில் இழுத்து வரப்பட்டபோது, மேல்சாதி இந்துக்கள் கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்தனர்.



சாதி பாராட்டும் இந்த இந்து சமூகத்தை விடுங்கள். மத மாற்றத்தைத் தடை செய்யும் சட்டத்தை ஆதரித்து நடைபெறும் கூட்டங்களில் எல்லாம், ''வேதங்களில் சாதி இல்லை'' எனத் தம்பட்டம் அடித்துக் கொண்டு திரியும் சங்கராச்சாரிகூட, இத்தாக்குதலைக் கண்டிக்கவில்லை. அவரின் ஞானக் கண்ணுக்கு இந்தத் தாக்குதல் படவில்லையோ? என யாரும் சந்தேகங் கொள்ள வேண்டாம். சாதா கண்ணுக்கே தெரியும்படி, ''மவுண்ட்ரோடு மகாவிஷ்ணு'' என அழைக்கப்படும் இந்து நாளிதழ், இந்தச் செய்தியை முதல் பக்கத்திலேயே வெளியிட்டிருந்தது.

''ஒவ்வெரு மணி நேரமும் இரண்டு தாழ்த்தப்பட்டோர் தாக்கப்படுகிறார்கள்; ஒவ்வொரு நாளும் மூன்று தாழ்த்தப்பட்ட பெண்கள் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாகிறார்கள்; ஒவ்வொரு நாளும் இரண்டு தாழ்த்தப்பட்டோர் கொலை செய்யப்படுகிறார்கள்; ஒவ்வொரு நாளும் இரண்டு தாழ்த்தப்பட்டோரின் வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்படுகின்றன.'' – இவை, தீண்டாமை கொடுமை பற்றி அரசாங்கமே தரும் புள்ளிவிவரங்கள்.

இவற்றுள் ஒன்றையாவது கண்டித்து, காஞ்சி சங்கர மடத்தில் இருந்து ஒரு கண்டன அறிக்கையாவது வெளி வந்திருக்குமா? மத மாற்றத்தைத் தூண்டுபவர்களைத் தண்டிக்க வேண்டும் என ஊர் ஊராகப் போய் பிரச்சாரம் செய்யும் சங்கராச்சாரி, தாழ்த்தப்பட்டோரைத் தாக்கும் மேல்சாதி வெறியர்களைத் தண்டிக்க வேண்டும் என மேடை போட்டு பேசுவாரா?

அடங்கிக் கிடக்கும் தாழ்த்தப்பட்டோருக்கு ஆசிர்வாதம்; எதிர்த்து நிற்கும் தாழ்த்தப்பட்டோரின் மீது வன்கொடுமை தாக்குதல். ஒருபுறம், சாதி வெறியர்களின் நயவஞ்சகம்; மறுபுறம், அவர்களின் ஆதிக்கத் திமிர். இந்த இரட்டை நுகத் தடியை நாம் தூக்கி எறிவது எப்போது? ●